கல்கி



KALKI 6-6-82 ரூ.1 20

புதிய
கோல்கேட் ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்



MFP FLUORIDE

MFP FLUORIDE



ஃப்ளோரிகார்டில் உள்ள எம்


எஃப்பி ஃப்ளோரைட் எனுமலுடன் இணைந்து துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராக உங்கள் பற்களை உறுதிப்படுத்துகிறது.

தமிழ்நாடு, கேரள மாநிலங்களிலும், கர்நாடகத்தில் குறிப்பிட்ட சில மார்க்கெட்டுகளிலும் இப்போது கிடைக்கும்.

CFT.G.3 TM

ஹலோ மெட்ராஸ்!

628



ஏவி.எம். சரவணன் மன்னிப்பாராக!

சென்னைக்கு வரும் வெளியூர்வாசிகள் சென்னையைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொள்வதற்காக, நகரின் சில முக்கிய அம்சங்களைப் பற்றிச் சுவைபடத் தருகிறோம்.

ஆட்டோ ரிக்ஷாக்கள்:

சென்னைக்கு வருபவர்களில் அநேகம் பேர் (வெளியூர் — வெளிநாட்டு வாசிகள்) ஆட்டோவை உபயோகப்படுத்திக் கொள்கின்றனர். எனவே ஆட்டோ பற்றிய அடிப்படை உண்மைகளைத் தெரிந்து கொள்ளுங்கள். மீட்டர் என்று ஒரு வஸ்து எல்லா ஆட்டோவிலும் உண்டு. அதன்படிதான் பணம் தருவேன் என்று சொல்லாதீர்கள். பொதுவாக அது வேலை செய்யாது — அல்லது ரொம்ப சுறுசுறுப்பாக வேலை செய்யும். மீட்டருக்கு மேல் பணம் தருவதாக முதலிலேயே ஒப்புக் கொண்டால் 'நாளுக்காக வீடு போய்ச் சேரலாம். மொத்தத்தில் நல்ல குரல் வளம் இருப்பவர்கள் ஆட்டோவில் பயணம் செய்வது சிறந்தது. காரணம், இறங்கும்போது எப்படியும் டிரைவருடன் சண்டை போட வேண்டியிருக்கும்.

ஹோட்டல்கள்:

நகரின் ஹோட்டல்களில் நல்ல விஷயங்களை நீங்கள் கவனிக்கலாம். ஐந்து விரல்கள் முழுவதும் நனையும்படி ஆறு டம்ளர் தண்ணீர் கொண்டு வரும் சர்வர்களைநேரில் பார்த்தால் பாராட்டுவீர்கள். பொடியை உதிர்ந்துவிட்டு அப்படியே வடையோ, போண்டாவோ தட்டில் எடுத்து வைக்கும் காட்சி திகைக்கவைக்கும். காப்பியில் குளோரின் மணமும், சாம்பாரில் மண் வாசனையும் வீசும். சமையலில் 'மண் வாசனை' வீசுவது விசேஷமல்லவா?

மிருகக் காட்சிசாலை:

ஒரு காலத்தில் இங்கே மிருகங்கள் இருந்திருக்கின்றன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. எனவே அவை வாழ்ந்த கூண்டுகளை நீங்கள் காணலாம். ஆங்காங்கு சில மிருகங்கள் அலைவதைக் கொண்டு அந்த இடம் மிருகக் காட்சி சாலை என உணரலாம். தயவு செய்து தூங்குகிற புலியை இடறாதீர்கள் — பாவம்! அது முடியாமல் படுத்துக் கொண்டிருக்கும்.

பஸ்கள்:

பணி மனைக்குப் போகிற பஸ் தவிர பாக்கி எல்லாம்படுகூட்டமாகவே போகும். 'நான் ஒரு சர்க்கஸ் வீரன்' என்று கற்பனைபண்ணிக் கொண்டு ஸ்டாப்பிற்கு வரும் பஸ்ஸில் தாவினால், மறு கணம் உள்ளே போய்ச் சேரலாம். உள்ளே நெரிசலில் 'நேருக்கு நேர் — அல்லது Face to face பலரைச் சந்திப்பீர்கள். மூச்சு விட முடியாமல் போதிய காற்று இல்லாமல் போகும். "எச்சரிக்கை காற்றுத் தடை" என்று டிரைவர் அருகே எழுதி வைக்கப்பட்டுள்ள வாசகத்தின் உண்மையை (அப்போது) உணருவீர்கள்.

இதர நிகழ்ச்சிகள்:

இடம் மாறி வேறு ஊருக்கு வந்திருப்பதனால் சிலர் தூக்கம் வராமல் அவதிப்படலாம். ஒரு ஐந்து நிமிடம் சேர்ந்தாற்போல டி. வி. நிகழ்ச்சிகளைப் பார்ப்பதன் மூலம் "ஹாவ்" என்ற பெரிய கொட்டாவியுடன் கண்கள் செருக ஆரம்பிக்கும். நகரின் சிறப்பு அம்சங்களில் இது ஒன்று.


மாம்பலம் கொசுக்கள், நகரசபைக் குப்பை லாரிகள், இவைகளைப் பற்றி எழுதினால் புரியாது. அனுபவிக்க வேண்டிய விஷயங்கள் இவை.

சென்னை உங்களை வரவேற்கிறது!

நீங்கள் கேட்டவை

தராசு





✖ கே. என். செல்வரத்தினம் வடகாடு *

? அர்த்தம் எப்போது அனர்த்தமாகிறது?

! விஜயநகர் எஃகு ஆலை அமைக்க வேண்டும் என்று அரசு தீர்மானித்தது அர்த்தமுடையது. கால தாமதம் காரணமாக அதுவே அனர்த்தமாகிறது. பத்து ஆண்டுகளாகியும் வேலை தொடங்காததால் அத்திட்டத்தின் செலவு மதிப்பீடு 300 கோடியிலிருந்து 3000 கோடிக்கு உயர்ந்து விட்டது. பத்தாண்டுகளில் இத்திட்டத்தின் பெயரால் 5 கோடி விரயமாகியுள்ளது. திட்டம் தொடங்கி நடத்தப்படுவதுபோல் பாவலாக் காட்டி வந்திருக்கிறார்கள், அரசியல் நோக்கில்!

✖ எம். நாகேந்திரகுமார், ஓசூர்

? ஒன் ஜோக் ப்ளீஸ்...

! தராசு: நா. பா.வின் பரிசு பெற்ற துளசி மாடம் கல்கிக்குப் பெருமை அளித்த ஒன்று.

நக்கீரன்: ஐயோ! இந்த அநியாயத்தைக் கேட்பாரில்லையா! ராஜாஜியும் கல்கியும் எழுதிப் பெருமைப்படுத்திய கல்கி இன்று நா. பா.வினாலும் தனக்குப் பெருமை என்கிறதே!

✖ வே. ரெத்தினகுமார், பட்டுக்கோட்டை

? சூப்பர்மேன்-2 பார்த்தீர்களா? அந்த ஹீரோ போல நம் நாட்டிலும் ஒரு மனிதன் தோன்றி நன்மைகள் செய்தால்?

! அது நன்மையாக இராது. இப்போதே எல்லாவற்றையும் சர்க்கார் செய்ய வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். சூபர்மேன் தோன்றிவிட்டால் அவன் பொறுப்பில் எல்லாப்பிரச்னைகளையும் தள்ளிவிட்டுச் சோம்பி இருந்து விடுவார்கள். படத்தில் அமெரிக்க ஜனாதிபதியே செயலிழந்துபோய் சூபர்மேனைத் தானே உதவிக்கு அழைக்கிறார்! ரசிக்கக் கூடிய அம்சம் காமிரா கலை நுணுக்கம் ஒன்றே.

✖ கனியூர் எழிலி, கோவை

? ஒருவருடைய புகழுக்கு உறுதுணையாக இருப்பது படிப்பாற்றலா? பண்பாற்றலா?

! காஞ்சிப் பெரியவாள் ஞானம் உலகறிந்தது. ஆனால் நமக்கு எளிதில் விளங்காதது. அவரது பண்போ நமக்குச் சுலபமாகப் புரிந்து உள்ளம் கவர்கிறது. அப்பண்புகளில் முக்கியமானது கருணை. பெரியவாள் பீடத்தை அலங்கரித்தபோது நடந்த சம்பவம்:

மடத்தின் வரவு செலவுக் கணக்குகளை உரக்கப் படிக்கக் கேட்பார். காப்பிக் கொட்டைக்குப் பட்டியலில் இடமிராது. ஆனால் அவர் கேள்விப்பட்டார், தமக்கு அணுக்கமான சிலர் கூட காப்பி ஹோட்டல் சென்று வருவதாக.

இளம் சீடன் ஒருவனை அழைத்துக் கேட்டார். ''ஏன்டா காப்பின்னா உங்க எல்லோருக்கும் ரொம்பப் பிடிக்குமோ?''

''பிடிக்குமாவது? உசிருன்னா! பெரியவாளை எவ்வளவு பிடிக்குமோ அத்தனை பிடிக்கும்!'' என்றான் அந்த இளைஞன்.

அடுத்த மாதத்திலிருந்து மனிகைப் பட்டியலில் காப்பிக் கொட்டையும் இடம் பெற்றது!

படிப்பாற்றலின் முதிர்ந்த நிலையான பண்பாற்றலே புகழுக்கு உறுதுணை.

✖ பி. எல். பரமசிவம், மதுரை-1

? மணல்கயிறு படம் பாலசந்தர் ஏன் இயக்க வில்லை? அந்தப் படம் எப்படி?

! ஆற்றலைக் கண்டெடுத்து ஊக்குவிக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் காரண மாக விசுவிடம் பொறுப்பை ஒப்படைத் தார் பாலசந்தர். 'படம் எப்படி?' என்று விகடனின் பி.ஆர். ஓ. சந்திரசேகர் கேட்ட போது நான் கூறியது:'பாலசந்தர் வைத்த நம்பிக்கை வீண் போகவில்லை. ஆனால் அடுத்த முறை படம் எடுக்கும்போது திரிக் கப்படும் கதை மணல் கயிறாகவும் வேண் டாம், தாம்புக் கயிறாகவும் வேண்டாம், மணிக் கயிறாக இருக்கட்டும்.'

✖ எல். ஆர். விஜயகுமார், சென்னை-28

? சிலர் டெலிபோனில் பேசும்போது நேரில் பேசுவது போல் வளவளவென்று பேசுவது முறையா?

! தவறு. டெலிபோன் Communicationக் காக ஏற்பட்டது; Conversationக்காக அல்ல.

✖ பி. வசந்தா பார்த்தசாரதி, சென்னை-88

ஒரு சின்னக் கதை சொல்லுங்களேன் ஸார்!

! வியன்னா. புதிய நாடகம் அரங்கேற இருக் கிறது. முதல் நாள் இரவு பிரதம நடிகை இஸபெல் வீட்டுக்குள் ஒருவன் நுழைந்து அவளை நையப்புடைத்து முகத்தை விகாரப் படுத்தி விடுகிறான். அப்புறம்நடிப்பது எப் படி? அவளுக்குப் பதில் வீரா அரங்கேறு கிறாள். ஒரு வாரம் சென்ற பின் வியன்னா போலீஸார்வீராவின் மாஜிக்காதலன் வெர் னரைக் கைது செய்கிறார்கள். இஸபெல் லைத் தாக்கி விகாரப்படுத்த குண்டனை ஏவியதாகக் குற்றச்சாட்டு. இதன் மூலம் வீராவுக்கு நடிக்கச் சான்ஸ் பெற்றுத் தந் தால் அவளுக்குத் தன் மீது இரக்கம் உண் டாகித் தன்னை மறுபடியும் காதலிக்கத் தொடங்குவாள் என்று எதிர்பார்த்தான், வெர்னர்! காதல் ஒருவனை எப்படியெல் லாம் ஆட்டிப்படைக்கிறது பார்த்தீர்களா? உண்மைக் கதை இது. நன்றி: நியூஸ் வீக்.

✖ இரா. புதுவை வேலு, புதுவை-1

? நீங்கள் கடைசியாகப் படித்து முடித்த புத்தகம் எது?

! Second Lady அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி போலவே ருஷ்யாவில் ஒருத்தி இருக்கிறாள். ருஷ்ய ஒற்றர்கள் ஆள் மாறாட்டம் செய்து விடுகிறார்கள். அமெ ரிக்க ஜனாதிபதியின் மனைவியாக நடிக்கும் ருஷ்யப் பெண்மணி ராஜாங்க ரகசியங் களை அறிய முயன்று வெற்றி பெறுகிறாள். பிறகு எதிர்பாராத திருப்பங்கள். நாவல் படு த்ரில்.

புரியாத விஷயம்: ஆராய்ச்சித் திறன், கதை சொல்லும் ஆற்றல் இவற்றாலேயே நிலைத்து நிற்கக் கூடிய அமெரிக்க நாவலா சிரியர்கள் சிலர் எதற்காக ஆபாசத்தைப் புகுத்தித் தங்களைத் தாழ்த்திக் கொள் கிறார்களோ! உவே!

✖ எல். ஆர். சுந்தரராஜன், சென்னை

? காதல் ஓவியம் படம் பாரதிராஜாவுக்குச் சறுக்கு மரமாகப் போனது பற்றி?

! மிஸ்டர் சுந்தரராஜன்! உங்கள்கேள்விக்கு டாக்டர் வீரலக்ஷ்மியின் கேள்வியைப் பதி லாக்குகிறேன், ஓகே?

✖ டாக்டர் வீரலக்ஷ்மி நந்தகோபால், ஈரோடு

? வாழ்க்கையில் கஷ்டங்கள் வரும்போது துவண்டு விடாமல் எதிர் நீச்சல் போட்டுத்தான் ஆக வேண்டும் என்றஅறிவுரைபற்றி உங்கள் அபிப் பிராயம் என்ன?

! பாரதி ராஜா போன்றவர்கள் துவண்டு விடாமல் எதிர் நீச்சல் போட்டால் மட்டும் போதாது. தவறுகளைப் புரிந்துகொண்டு தவிர்க்கவும் வேண்டும். அப்போதுதான் அடுத்த வெற்றிக்கு அடிகோலியதாகும்.

✖ எஸ். அன்பழகன், விஜயபுரம்

? அறிவுள்ள நன்றியில்லாத நண்பன், நன்றி விசு வாசமுள்ள அறிவில்லா நண்பன் - இவர்களில் யார் உயர்ந்தவர்?

! ஹரியானா மாநில ஆளுனர் நன்றி விசு வாசமுள்ள அறிவில்லா நண்பனாக இ. காங் கிரஸ் மேலிடத்துக்கு நடந்து காண்பிப் பதைப் பார்க்கையில், அறிவுள்ள நன்றி யில்லாத நண்பனே மேல் என்றுதான் தோன்றும்!

✖ ரூ 10 பரிசு பெறுபவர் :
கே. என். செல்வரத்தினம்,
வடகாடு-622304
புதுகை (மா.வ.)





பெரியவாளின் திருமுகங்கள்



காஞ்சிப் பெரியவாளின் அருள் முகங்களுக்குக் கணக்கே கிடையாது.

சென்னை சர்வகலாசாலை சமஸ்கிருதத் துறையில் பேராசிரியராக விளங்குபவர் டாக்டர் வீழிநாதன். பெரியவாளின் அருகாமையில் அதிகம் இருக்கும் வாய்ப்புப் பெற்று அன்னாரது உள்ளத்தின் அருள் முகங்களைக் காணும் பேறு பெற்றவர். அவர் சொன்னவை:

ஞான திருஷ்டி

● நானும் திரு டி. எம். பி. மகாதேவனும் காசிக்குச்செல்லவேண்டிய பிரமேயம். பெரியவாளின் அனுக்ரகம் பெற்றுக் கிளம்பலாம் என்று அவரைத் தரிசிக்கச் சென்றோம்.

''நீங்கள் காசிக்குப் போனால், ஸ்ரீ ராமயஸஸ் திருபாதி சௌக்கியமாக இருக்கிறாரா? அவரது கிராமத்தில் அவர் நடத்தும் சம்ஸ்கிருதப் பள்ளி சிறப்பாக நடக்கிறதா என்று விசாரித்து வாருங்கள்'' என்று கூறி, ஸ்ரீ ராமயஸஸ் திருபாதி பற்றி விவரங்கள் கூறினார்.

காசி எல்லையை விட்டுத் தாண்ட மாட்டேன் என்கிற பிரதிக்ஞையெடுத்துக் கொண்டு தாம் சம்பாதிக்கும் பணத்தைக் கொண்டு காசிக்கு அருகில் உள்ள தமது கிராமத்தில் ஒரு சம்ஸ்கிருதப் பள்ளி நடத்துபவர் ஸ்ரீராமயஸஸ் திருபாதி. காசிக்குப் பெரியவாள் சென்றிருந்தபோது பெரியவாளைப் பற்றிக் கேள்விப்பட்டு திருபாதி அவர்கள் பெரியவாளை நமஸ்கரித்து, 'தங்களைப் பற்றி முன்பே அறிந்திருந்தால் காசி எல்லையை விட்டுத் தாண்ட மாட்டேன் என்கிற பிரதிக்ஞை எடுத்திருக்க மாட்டேன். தங்களுடனேயே வந்திருப்பேன்' என்றாராம். அதற்குப் பெரியவாள், 'அதனாலென்ன, நீங்கள் எங்கு இருந்தாலும் நான் உங்கள் அருகில் இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். அதே மாதிரி நானும் நீங்கள் என் அருகிலேயே இருப்பதாக நினைத்துக் கொள்கிறேன்' என்று சொல்லியுள்ளார்.

நானும், திரு மகாதேவனும் காசிக்குச் சென்றுஸ்ரீராமயஸஸ்திருபாதிபற்றிவிசாரிக்க, கொஞ்ச காலம் முன்பு சன்னியாசம் வாங்கிக் கொண்ட திருபாதி இரண்டு தினங்கள் முன்பு முக்தி அடைந்து விட்டார் என அறிந்தோம். பெரியவாள் திருபாதி அவர்களைப் பற்றி விசாரிக்குமாறு எங்களிடம் சொன்ன நாளும் திருபாதி அவர்கள் முக்தி அடைந்த நாளும் ஒன்றேயாக இருப்பது அறிந்து சிலிர்த்துப் போய்விட்டோம்.

அருள் முகம்

● ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த சம்ஸ்கிருத பண்டிதர் ஒருவர் எனது நெருங்கிய நண்பர். சம்ஸ்கிருதத்தில் ஸ்லோகங்கள் எழுதும் வல்

லமை பெற்றவர். அவர் சொன்ன ஒரு நிகழ்ச்சி.

தஞ்சாவூருக்கு அருகில் பெரியவாள் ஒரு கிராமத்தில் முகாமிட்டிருந்த சமயம். சந்திர மௌளீஸ்வரர் சன்னதியில் தீப நமஸ்காரங்கள்' முடிந்ததும் அங்கு குழுமியிருந்த மாணவர்களை ராம நாமத்தையும், சிவ நாமத்தையும் சொல்லச் சொன்னார். குறிப்பாக ஒரு மாணவனை அழைத்துப் பெரியவாள் 'ராம ராமா' 'சிவ சிவா' என்று சொல்லச் சொன்னபோது, சுற்றியிருந்தவர்கள் அப்பையன் பிறவி ஊமை என்றனர். 'அதனாலென்ன, பையன் சொல்லட்டும்' என்று பெரியவாள் சொல்லப் பையன் ராம நாமத்தையும் சிவ நாமத்தையும் சொல்ல ஆரம்பித்து விட்டான்.

இதைக் கண்ட எனது ஆந்திர நண்பர், ''எந்த மகானை வர்ணிக்க வார்த்தைகள் கிடையாதோ, எந்த மகானைக் கண்டதும் பிறவி ஊமை பேசும் சக்தியைப் பெறுகிறானோ அந்த சந்திரிகா மௌளி ஆன என் 'குருநாதனை நமஸ்கரிக்கிறேன்'' என்று சம்ஸ்கிருதத்தில் ஸ்லோகம் எழுதினார். இதில் இன்னொரு விசேஷம் என்னவென்றால் அதுவரை அவர் சம்ஸ்கிருதத்தில் ஸ்லோகம் எழுதினதில்லையாம்!

கருணை முகம்

● சுமார் பத்தாண்டுகள் முன்பு நடந்த சம்பவம்:

காஞ்சியில் வியாஸ ஸ்ராந்தாஸ்ரய் ஆலயத்தில் பெரியவாள் தங்கியிருந்தார். இங்கிருந்து பிரதான சாலைக்குச் சற்றுத் தூரம் நடந்து செல்லவேண்டும். மழை பெய்து பாதை சொத சொதப்பாக இருந்தது. பெரியவாளைத் தரிசிக்க ஒரு வடக்கத்தியக் குடும்பம் வந்திருந்தது. உடல் நலம் சரியில்லாத நிலையில் நடந்து வர முடியாத குடும்பத் தலைவி காரிலேயே தங்கிவிட்டாள். மற்றவர்கள் பெரியவாளைத் தரிசித்து, குடும்பத் தலைவி பற்றிக் கூறி, அவளுக்கும் அங்கிருந்தே அருளவேண்டும் எனக் கோரினர்.

பெரியவாள் திடீரெனக் கிளம்பி, அந்த அஸ்தமன வேளையில் மழை சகதி பொருட்படுத்தாது கார் அருகில் வந்து தன் முகத்தில் டார்ச் லைட் அடித்து அம்மாதுக்கு அருள் தரிசனம் அளித்த காட்சியை என்னால் என்றும் மறக்க முடியாது!

பக்தி வசீகரம்

● சிசுபாலனுக்குக் கிருஷ்ணர் பயத்தை அளித்தார். ஆனால் அர்ஜுனனுக்கு கிருஷ்ணர் விசுவரூப தரிசனம் அளித்தபோது அவனுக்கும் பயம் தோன்றினாலும் அது பயம் கலந்த பக்தியாகும். ப்ரீதி கலந்த பயமாகும். காளிதாசர் எழுதிய மாளவிகாக்னி மித்திரத்தில் இத்தகைய பக்தி பற்றிய இலக்கணம் கொடுக்கப் பட்டுள்ளது. எவ்வளவுதான் நெருங்கிப் பழகியிருந்தாலும் எவ்வளவுதான் அவரது அனுக்கிரகத்தைப் பெற்றிருந்தாலும் ஒவ்வொரு தடவையும் பெரியவாளைத் தரிசிக்கும்போது பக்தர்கள் மனத்தில் ஒரு பயம் கலந்த ப்ரீதி தோன்றுவதை எவராலும் மறுக்க முடியாது. இவர் ஓர் மகா புருஷர் என்பது இதிலேயே புலனாகிறது.

குறிக்கோள் :

● பெரியவாள் சொன்ன ஓர் அறிவுரை.

''சூரியனை நோக்கி சூரிய ஒளியில் நாம் போகும்போது நமது நிழலானது நம்மைத் தொடர்ந்து வருகின்றது. அதை விடுத்து நாம் நிழலைப் பிடிக்க வேண்டும் என்று சூரியனை நோக்கிய பாதையிலிருந்து திரும்பி நிழலைத் தொடர்ந்து போனால் நிழலைப் பிடிக்க முடியாது. சூரியனை நோக்கிய ஒளியான பாதையிலிருந்து திரும்பியதுதான் மிச்சமாகும்.

இது மாதிரி மனிதன் ஒவ்வொருவனும் அவனவனுக்கென்று விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்து வருவானேயாகில் பணம், பதவி, புகழ் ஆகிய சிறப்புக்கள் தாமாக நிழல் போல் தொடர்ந்து வரும். இதை விடுத்து, பணம், பதவி, புகழைத் தேடி இவன் செல்வானேயாகில் அவைகளை அடையவும் முடியாது. தனக்கென விதிக்கப்பட்ட கடமைகளினின்று வழுவியதுமாகும்.

ஆத்ம பலம்

● தென்னாட்டில் பெரியவாள் யாத்திரை செய்தபோது ஒரு பெரியவர் தம் மகளுக்குத் தமது தங்கை மகனைத் திருமணம் செய்ய முடிவு செய்திருப்பதாகவும் இதில் அனைவருக்கும் ப்ரீதியானாலும் ஜாதகங்களைப் பார்த்த ஜோதிடர்கள் இத்திருமணம் நடந்தால் தம்பதிகளுக்கு விபரீத விளைவுகள் ஏற்படும் என்று கூறியதாகவும் மனம் நொந்து பெரியவாளிடம் கூறி, அவர் அருளை வேண்டினார். அப்பெரியவர் சொன்னதையே ஒரு தடவை தாமும் உரக்கக் கூறிய பெரியவாள், கை நிறையக் குங்குமத்தை அள்ளி அவரிடம் கொடுத்து ''தைரியமாகத் திருமணத்தை நடத்துங்கள்'' என்று மிக உறுதியான குரலில் சொன்னார்!

சத்திய முகம்


● காளிதாசரின் குமார சம்பவத்தில் கூறப்பட்ட ஒரு நிகழ்ச்சி.

சிவபெருமான் தபஸ் செய்து கொண்டிருந்தபோது கன்னியாஸ்திரீயான பார்வதி அவரை வணங்குகிறாள். 'மனைவியைத் தவிர வேற்று ஸ்திரீகளிடம் நாட்டம் கொள்ளாமல் எவன் ஒருவன் இருப்பானோ அத்தகையவன் உனக்குக் கணவனாவான்' என்று சிவபெருமான் பார்வதிக்கு அருளுகிறார். அதே மாதிரி தமது சரீரத்தில் பாதியையே பார்வதிக்கு அளித்த சிவபெருமானே அவளை மணக்கிறார்.

யோக சூத்ரத்தில் கூறப்படுவது போல் சத்தியத்தைக் கடைப்பிடித்து வாழ்கிறவன் சொல்கிற வாக்கியத்தின் அர்த்தமென்னவோ அதே மாதிரி காரியங்கள் நடக்கும்.

பெரியவாள் விஷயத்தில் இது நூற்றுக்கு நூறு பொருந்துகிறது. அவர் வாயார ஒரு வாக்குச் சொன்னால் அதை அனுசரித்துக் காரியங்கள் நிகழ்வதை நாம் கண்ணுக்கு மெய்யாகக் காண்கிறோம்.

பேட்டி: பி. ரங்கநாயகி


பஜன்லால்
ஹரியானா ஆட்சியுரிமை
கவர்னர் தபஸே
ஸ்டீபன்
மீண்டும் தபால் கட்டணங்கள் உயர்வு!
சகோதரர்களே! சகோதரிகளே! தாய்மார்களே! பெற்றோர்களே! மாணவர்களே! ஆசிரியர்களே! கல்வித்துறை நிபுணர்களே! எதிர்க்கட்சித் தலைவர்களே!.. இந்தக் 'காப்பி' அடிக்கும் தீமையைக் கண்டு பிடித்து உடனே ஒழித்துக் கட்ட.. ....
அரங்க நாயகம்
தமிழ் நாடு கல்வித் துறை
காப்பியடிக்கும் தீமை

அகாதமி அவசியம்தானா?

குஷ்வந்த் சிங் ராஜ்ய சபையில் வெளுத்து வாங்கிய பிறகு சாகித்திய அகாதமி மறுபடி சந்தி சிரிக்க ஆரம்பித்திருக்கிறது.

'இதுவரை இருபத்தைந்து ஆண்டுகளில் சாகித்திய அகாதமி பரிசு தந்துள்ள 300 நூல்களும் அடுத்த இருபது ஆண்டுகளில் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்' என அவர் குறிப்பிட்டது கோபத்தில் மிகைப்பட மொழிந்ததாக இருக்கலாம். ஆனால் அவர் சீற்றத்தில் நியாயமில்லாமலும் போகவில்லை.

இவ்வாண்டு டிவாரி என்பவர் எழுதிய பஞ்சாபி கவிதைகளுக்கு அகாதமி பரிசு கிடைத்துள்ளது. இது பஞ்சாபி இலக்கிய வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பரிசைப் பெற டிவாரி தேவையான முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டு விட்டார் எனவும் அந்தக் கவிதைத் தொகுப்பு வெறும் குப்பை, அதை யாருமே படித்ததில்லை எனவும் குற்றச்சாட்டுகள் தாராளமாகவே சுமத்தப்படுகின்றன.

தெலுங்கு மொழிக்கான சாகித்திய அகாதமி பரிசைத் திருப்பித் தந்துவிடப் போவதாக அறிவித்துள்ளார் என். வி. ராவ். காரணம் இவர் எழுதிய நூலுக்குப் பரிசு தந்த கையோடு அதனை ஏகமாகக் குறை கூறி சாகித்திய அகாதமியே தனது ஏடு ஒன்றில் விமர்சித்துள்ளது! விமர்சனத்தை எழுதியவர் சாகித்திய அகாதமியிலேயே பணியாற்றுகிறவர்!

தமிழ் நாட்டிலும் சாகித்திய அகாதமி பரிசு பல ஆண்டுகளில் கண்டனத்துக்கு உள்ளாகி இருக்கிறது. பொதுவாக சிருஷ்டி இலக்கியத்துக்கன்றி ஆராய்ச்சி நூல்களுக்குப் பரிசு வழங்குவது அகாதமியின் நோக்கத்துக்கு முரணானதாகக் கருதப்படுகிறது. குறிப்பிட்ட ஆண்டில் ஒருவர் சிறந்த நூல் எழுதாவிடினும் அதற்கு முன்னரோ பின்னரோ ஒப்புயர்வற்ற இலக்கியம் படைத்திருக்கலாம். மேலும் பரிசுத் தொகையான ரூ 5000 அற்பத் தொகையாக இன்று ஆகிவிட்டது.

அகாதமி புத்தகங்களை வெளியிடக் கையாள்கின்ற நடைமுறையும் வெளியிட்டபின் அதன் விற்பனைக்கு ஆகிற காலதாமதமும் இதர தனியார் துறை நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் நகைப்புக்கு இடமளிப்பனவாக உள்ளன.

மக்களின் வரிப்பணம், சாகித்திய அகாதமிக்கு - அதன் பல்வேறு கிளைகளுக்கு, நடவடிக்கைகளுக்கு — செலவாகிறது. அகாதமி லாபகரமாக இயங்குவதாகவும் தெரியவில்லை.

இந்நிலையில் இந் நிறுவனம் நீடித்திருக்க வேண்டுமா என்ற அடிப்படைக் கேள்வியே எழுப்பியாகிவிட்டது! கட்டிடம் எழும்பிய பின் சாரத்தைக் கலைத்து விடலாம் தானே என்பதும் ஒரு வாதம்.

சாகித்திய அகாதமி நிறுவப்பட்டது பாரத ஒருமைப்பாடு கருதி. ஒருமைப் பாட்டினைக் குலைக்க அரசியல் ரீதியாகப் பல காரியங்களைச் செய்து கொண்டே இருக்கையில் இலக்கியப் பரிவர்த்தனை எந்த அளவுக்கு உதவப்போகிறது?

நாட்டின் பல்வேறு மொழி இலக்கியங்களும் அவரவர் தாய் மொழியிலேயே கிடைக்கவேண்டும் என்று ஆசைப்பட்டார் நேருஜி. ராதாகிருஷ்ணன், ஆஸாத், ராஜாஜி போன்றோர் ஆமோதித்தனர். சாகித்திய அகாதமி தோன்றியது.

இந்த நோக்கங்களை இன்று நிறைவேற்ற வேறுபல நிறுவனங்களும் தோன்றிவிட்டன. தேசிய புத்தக நிறுவனம் தவிர பல்கலைக் கழகங்களும் இவ்விஷயத்தில் கவனம் செலுத்துகின்றன. 'போதுமே' என்கின்றனர் பலர்.

இத்தனை எதிரிடை வாதங்கள் இருப்பினும் சாகித்திய அகாதமிக்குத் தனது அத்தியாவசியத் தன்மையையும் தேவையும் பாரபட்சமின்மையையும் நிரூபிக்க மேலும் சில காலம் வாய்ப்பளிக்கப் படுவதையே விரும்புகிறோம்.



கல்கி
1982 ஜூன் 6
துந்துபி வைகாசி 23
மலர்: 40. இதழ்: 45
தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்



21

அரண்மனை விளாகத்திலன்றிப் படைவீடு பகுதியில் அதிகாலையில் ஜெயசிங்கனையும் அராபிய நண்பனையும் சந்திப்பதாகவும் குதிரைகளுடன் வருமாறும் செய்தி அனுப்பியிருந்தார் மன்னர். இது விஜயாலயனின் நோக்கங்களுக்கு வாய்ப்பாகவே அமைந்தது. உற்சாகத்துடன் அவன் குறித்த நேரத்துக்கு முன்னதாகவே நண்பனை அவசரப்படுத்தி அழைத்துச் சென்றான். முன் அனுமதியின்றி யாருமே நுழைய முடியாத பகுதி. அலுவல் உள்ளவர்கள்கூட இலச்சினை காட்டிய பிறகு தான் கதவம் திறக்கும். இவர்களையும் வேல்கள் வழிமறித்தன.


''மன்னரின் உத்தரவு. இங்கு வந்து சந்திக்குமாறு வாய்மொழியாகச் செய்தி அனுப்பினார்'' என்று ஜெயசிங்கன் சொல்லிப் பார்த்தான். ''அந்த ஆணை எங்கள் செவிக்கு எட்டவில்லை ஐயா!'' என்று மரியாதையுடன் பதில் கிடைத்தது.

விஜயாலயனுக்கு 'முணுக்'கென்று கோபம் வந்தது. ''தடையை மீறிச் செல்வோம். இந்த வேலியைத் தாண்டுவது என் குதிரைகளுக்கு அசாத்தியம் அல்ல'' என்று ஜெயசிங்கனிடம் முணு முணுத்தான். ''கூடாது'' என்று கெகிகத்தான் ஜெயசிங்கன். ''இதோ பார்! இங்கே உன் முன்கோபமெல்லாம் பயன்படாது என்பதுடன் நம்மை ஆபத்தில் சிக்கவும் வைக்கும்!''

''இதிலென்ன ஆபத்து? மன்னரின் அனுமதி நமக்கு இருக்கிறது. இந்த மூடர்கள் அரச ஆக்ஞைக்கும் நமக்கும் இடையில் நிற்கிறார்கள்.''

''மன்னருக்கு நாங்கள் வந்திருப்பதைத் தெரிவியுங்கள்!'' என்று உரக்கப் பேசினான் ஜெயசிங்கன்.


''அரண்மனை விளாகத்தில் போய்ச் சொல் லுங்கள்'' என்று பதில் கிடைத்தது.



ரவிகுல திலகன்

செம்பியன்

திரும்பிவிடலாமா என்று அவர்கள் ஏமாற்றத் துடன் எண்ணியபோது, ''ஹோய், ஹோய்! ஹோய், ஹோய்!'' என்று சீரான ஒலி எழுப்பிக்கொண்டு பல்லக்குத் தூக்கிகள் அந்தத் தாள கதிக்கு ஏற்ப அடியெடுத்து வைத்து ஓடிவருவது கேட்டது. பல்லக்கின் பிடியில் வரிசையாகக் கட்டியிருந்த சிறு வெண்கல மணிகளும் அதே தாள கதியில் ஒலித்து இன்னிசை எழுப்பின. அந்தக் குளுமையான அதிகாலை நேரத்தில், சூரியன் உறக்கத்திலிருந்து விழித்தெழுந்து கடமையைத் தொடங்கலாமா வேண்டாமா என்று கண்ணைக் கசக்கி யோசித்துக் கொண்டிருந்த வேளையில், நிழல்கள் நீண்டு சிலுசிலுப்பை அதிகரித்துக் கொண்டிருந்த சமயத்தில், உலகம் இன்னும் அமைதியிலேயே ஆழ்ந்திருந்த தருணத்தில் ஜன நடமாட்டம் இல்லாத சுற்று வட்டாரத்தில் பல்லக்குத் தூக்கிகள் மணிகள் ஆகியவற்றின் ஒலியானது மிகத் தெளிவாகக் கேட்டுச் சிலிர்ப்பையும் ஆவல் குறுகுறுப்பையும் ஏற்படுத்தியது.



'பல்லக்கில் வருவது யாரா: யிருக்கும்? படைவீடு நோக்கித்தான் வருகிறார்களா? அல்லது வேறெங்கேனும் பாதையோடு போகிறார்களா?' என்று யோசித்து முடிவதற்குள் அது அருகே வந்துவிட, பக்கத்தில் குதிரை மீது ஆரோகணித்து நிமிர்ந்த பார்வையுடன் ஒருவன் வருவதும் தெரிந்தது. அவன் முகத்திலேயே ஆணவம் அப்பிக் கிடந்தது.

''முத்தரையரின் குதிரைப் படைத் தளபதி திவாகரனின் ஆணை! கதவைத் திறவுங்கள்!'' என்று கட்டளை பிறப்பித்து இலச்சினை காட்டவும் வாயில் காப்போர் வணங்கிக் கீழ்ப்படிந்தனர்.

'ஏதடா இங்கே இரண்டு பேர் நிற்கிறார்களே; எதற்கு, ஏன்?' என்ற விசாரமின்றித் திவாகரன் பல்லக்கும் பின்தொடர உள்ளே செல்வதைக் கண்டு விஜயாலயனுக்கு மட்டுமல்ல, இப்போது ஜெயசிங்கனுக்கே பொறுக்கவில்லை. அறிமுகமாகாதவரு அவன்!

''திவாகரா! மன்னரின் ஆணை அம்மட்டுதானு?'' என்று உரக்கவே கேட்டான். ''எங்களை இங்கு சந்திப்பதாகச் செய்தி அனுப்பினுரே!''

அவனை அப்போதுதான் கவனித்ததுபோல் திரும்பிப் பார்த்த திவாகரன், ''யார்! ஜெயசிங்களு? அடடா! அடையாளமே தெரியவில்லை!'' என்றுநடித்தான். ''பார்த்து நாளாயிற்றல்லவா?''

இதற்குள் பல்லக்கின் திரை விலகி, காலை இளம் பரிதிக்குப் போட்டியாக இன்னொரு ஒளி வட்டம் தோன்றிக் குளிரை விரட்டிச் சூடேற்றியது. ''வாருங்கள், ஜெயசிங்கரே!'' என்று வரவேற்றவள் கைகளை இரண்டு முறை தட்டவும் பல்லக்குக் கீழிறக்கப் பட்டது. பாற்கடலிலிருந்து திருமகள் தோன்றியது போல் பல்லக்கின் உள்ளிருந்து வெளிப்பட்டாள் உத்தமசீலி.

''தாங்களும் தங்கள் நண்பரும் வருவீர்கள் என்று கூறி வரவேற்குமாறு என்னை மன்னர் முன்னதாகவே அனுப்பி வைத்தார். அவரும் வருகிற நேரம்தான்.'' என்று அவள் சொன்ன போது அந்த வட்டாரமே அவள் அழகால் பொலிவது உணர்ந்து பிரமித்தான் விஜயாலயன். 'இந்த வசனமே இன்னிசையாய் ஒலிக்கும்போது இவள் பாடவே ஆரம்பித்தால்....' என்ற எண்ணத்தில் கரைந்தான்.

ஒய்யாரமாக ஆனல் தன் தகுதிக்கேற்ற நிமிர்ந்த நடையுடன் நாலடி எடுத்து வைத்து நெருங்கி வந்த பாவை நகர்ந்தபோதெல்லாம் எழில் சிந்திச் சிதறியது. ஒவ்வொரு அடி எடுத்து வைத்தபோதும் அங்கங்கள் ஒவ்வொன்றும் ஓராயிரம் அழகுகளை உணர்த்தின. சின்னஞ் சிறு அசைவும் உன்மத்தம் கொள்ள வைத்தது.

நேற்று மாலை பார்த்ததை விடச் சிறந்த முறையில் அவள் தன்னை இப்போது அலங்

கரித்துக் கொண்டிருந்தாள். பொன்னிறப் பூக்களுடன் கூடிய தளிர்ப் பச்சை நிறத்தில் இடைக்குக்கீழே நீண்ட கால்களைத் தழுவிய பட்டாடை மேலேயும் உயர்ந்து அதே நிறத்திலான கச்சணிந்த மார்பைத் தழுவிப் பின் சென்று தாழ்ந்து வளமான பிருட்ட மேடுகளைத் தொட்டது. நெற்றித் திலகம் அழகின் வெற்றித் திலகமெனத் திகழ, கருவண்டு மைவிழிகள் தன்னை மொய்க்காதா என அளகபாரக் கொண்டையை அலங்கரித்த தாமரை ஏங்க, செம்பவழ வாய் கழுத்தைச் சுற்றிய நல் முத்துக்களைப் பரிகசிக்க, கால் சதங்கைகளோ அவள் சிரிக்கும்வரை நம் ராஜ்யம்தான் என மகிழ்ந்தன!

''நாங்கள் முன்னதாகவே வந்திருந்து உங்களை வரவேற்க வேண்டும் என்பது மன்னரின் கருத்து. ஆனால் நீங்கள் காத்திருந்து எங்களை வரவேற்கும்படியாகி விட்டது!''.

''பாதகமில்லை'' என்றான் ஜெயசிங்கன். ''நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். இந்தக் காவலர்கள் எங்களை உள்ளே விட மறுத்து விட்டார்கள்'' என்று அவர்களைச் சுட்டிக் காட்டினான்.

அந்தச் சைகையிலிருந்தே உரையாடலைப் புரிந்து கொண்டவன் போல அராபியன், ''கடமை வீரர்கள், வாழ்த்துக்குரியவர்கள்'' என்றான்.

ஜெயசிங்கன் இதனை மொழிபெயர்க்க, நன்றிப் புன்முறுவலுடன் ஏற்ற உத்தமசீலி; ''அரசர் குறித்த நேரத்துக்கு வெகு முன்னதாகவே வந்து விட்டீர்கள்! அதனால்தான் இந்தக் குழப்பம்'' என்றாள்.

''இவன்தான் ஒரேயடியாக அவசரப் பட்டான்'' என்றான் ஜெயசிங்கன். ''நீங்களும் இங்கே வருவீர்கள், சந்திக்க வாய்ப்புண்டு என்று இவனுக்குக் காலைக் கனவிலே ஒரு புறா வந்து சொல்லிற்றாம்!''

கலீரென்று சிரித்து அவள் புருவங்களை உயர்த்தி அராபியனைப் பார்க்க, விஜயாலயன் தன் நெஞ்சைத் தாக்கியது மலர் விழிகளா அல்லது காமன் கணைகளா என்று புரியாமல் தவித்தான்.

அவளுடைய அந்தச் சிரிப்பு திவாகரனுக்கு வெறுப்பூட்ட, ''சரி சரி, வாருங்கள், மன்னர் வரும் நேரமாகிறது'' என்று கூறிக் குதிரையைச் செலுத்திக் கொண்டு முன்னேறினான்.

பெருநகை மென்னகையாகி புன்னகையில் நிலைக்க அவள் பல்லக்கில் மறுபடியும் ஏறிக் கொண்டாள். நான்குதோள்கள் அதன் சுமையைப் பகிர்ந்துகொள்ள, முன்வாசலைக் கடந்த அவர்கள் வெகு சீக்கிரமே ஒரு பக்கமாக இருந்த இளைப்பாறு மண்டபத்தை அடைந்தனர். வழியில் ஆயுதங்கள் உருவாகும் கொல்லன் பட்டறைகளையும் தேர்ப்பாகங்கள் செய்யப்படும் தச்சுப் பட்டறைகளையும் சில கிடங்குகளையும் நோட்டம் பார்த்துக் கொண்டான் விஜயாலயன். முத்தரையரின் நாற்படை வளத்தின் ஒரு பகுதியே இந்தப் படைவீடு; இதனையும் முழுதும் சுற்றிப் பார்க்கத் தனக்கு வாய்ப்புக் கிட்டுமோ கிட்டாதோ? எனினும் இந்த ஒரு பகுதியின் உயர்வு தாழ்விலிருந்து அவனால் முத்தரையரின் முழுப் படை பலத்தின் தன்மையைப் பெருமளவு அனுமானிக்க முடியும்.

இளைப்பாறு மண்டபத்தில் பயணக் களைப்புத் தீரப் பழரசம் கொண்டு வரச் சொல்லி அவர்களை உபசரித்து முடிவதற்குள் முத்தரையர் வந்து விட்டார். வெண்கொற்றக் குடை பிடித்தவன் அவர் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் தடுமாற விரைந்து நடந்துவந்த அவர், நரை முடிகள் தோன்ற ஆரம்பித்திருந்த நிலையில் நடுத்தர வயதினராக விளங்கினார். ஆயினும் உடலில் சிறிதும் தளர்ச்சி இல்லை.

''ஜெயசிங்கா! நலமா? வாணிபம் வளமா?'' என்றார்.

''தங்கள் நல்லாதரவு இருக்கும்போது எனக்கென்ன குறை அரசே!''

''நல்லது. படைவீடுகளுள் ஒன்றை அதிகாலையில் பார்வையிடுவது என் வழக்கம். அதோடு சேர்த்தாற்போல் நீ கொண்டு வந்துள்ள குதிரைகளையும் சோதித்துப் பார்த்துவிடலாம் என எண்ணினேன். எங்கே அவை?''

''இம்மண்டபத்தின் பின்புறம் அவற்றை மேய விட்டிருக்கிறேன் பிரபோ! ஆனால் சோதனை எதற்கு? நீங்கள் சோதிக்கும்படியாகவோ உங்களைச் சோதனையில் ஆழ்த்தும்படியாகவோ எந்தப் பொருளை நான் உங்களுக்கு விற்றிருக்கிறேன்?'' என்று தன்னம்பிக்கையோடு கேட்ட ஜெயசிங்கன், அராபியனை அணைத்து மன்னர் அருகே அழைத்து வந்து நிறுத்தி, ''இம்முறை அருமையான அராபியக் குதிரைகளை மட்டுமின்றி அராபியக் குதிரை வியாபாரியையும் உடன் அழைத்து வந்திருக்கிறேன்'' என்றான்.


சலாமிட்டான் அராபியன். பேசினான்.

''என்ன சொல்கிறான்? ஒன்றும் விளங்கவில்லையே'' என முத்தரையர் முகவாயைத் தடவ, ''பிரபோ! இவனைப் போன்ற இதர அராபிய வணிகர்கள் துறைமுகத்திலேயே

வேலைக்காரன்: எஜமான்! இந்த சோபாவிலே ஒரே மூட்டைப் பூச்சியா இருக்கு!

முதலாளி: அப்போ, அதைக் கொண்டு போய் விசிட்டர்ஸ் ஹாலில் போடு.

-வல்லபதாஸ்




வேடிக்கை உல-கம்.
கேளிக்கைச் சு-கம்...
நியூட்ரின்
பபுல் கம்.
nutrine BUBBLE GUM
ஊதிப் பார்...
உவகையின் உருவகம் இது.
மலையத்தனை, கடுகத்தனை
-விளையாட்டுக்கள்
எத்தனை எத்தனை!
நியூட்ரின் பபுல் கம்.
ஊதிக்களிப்பாய்
—உவகைச் சுரங்கம்
இன்பச் சுகம்
—அதுவே நிகரில்லாத
நியூட்ரின் பபுல் கம்.
nutrine
தின்னத்தின்ன
திகட்டாத மிட்டாய்!
நியூட்ரின் சூயிங்-கம்
புரொடக்ட்ஸ் கம்பெனி
(பிரைவேட்) லிமிடெட்
சித்தூர்-517 002 (ஆ.பி.)
CAS.NC.1-82 TAM.A

குதிரைகளை என் போன்ற வியாபாரிகளிடம் விற்றுவிட்டுத் திரும்பிவிடுவார்கள். ஆனால் இவன் தன் குதிரைகளை ஒரு வியாபாரப் பொருளாக மட்டும் கருதுவதில்லை. அவற்றை அறிவாற்றலும் உடலுறுதியும் மிக்க ஆண்டவனின் சிருஷ்டிகள் என்று கருதி அசாதாரண அன்பு செலுத்துகிறவன். 'என் குதிரைகளை வாங்குவோர் அவற்றை நான் கற்றுத் தருகிற மாதிரி பராமரிக்க வேண்டும்' என்று சொல்கிறான்! அதனால்தான் உள்நாட்டில் இவ்வளவு தூரத்தில் இவனை நீங்கள் காண்கிறீர்கள்!''

''ஆச்சரியமாக இருக்கிறதே!'' என்றார் முத்தரையர். ''குதிரைப் பராமரிப்பில் எங்களுக்குத் தெரியாத எதை இவன் சொல்லித் தரப் போகிறான்?''

ஜெயசிங்கன் அரசரின் சந்தேகத்தை அராபியனிடம் விளக்க, அவன் மிகுந்த பரபரப்போடும், சற்றுக் கோபத்தோடும் ஏதோ பொரிந்து தள்ள, முத்தரையர் 'இதென்னடா வம்பாய்ப் போயிற்று. மொழி புரியாத இவனைப் போய் நம்மிடம் அழைத்து வந்து உபத்திரவப்படுத்துகிறானே' என்பது போல் நெற்றியைப் பிசைந்து விட்டுக் கொண்டு உத்தம சீலியைப் பார்த்துப் புருவங்களை நெரிக்க அவள் அவரது நகைச் சுவையை அடக்கத்துடன் ரசித்துப் புன்முறுவல் பூத்தாள்.

''மன்னவா! குதிரைகள் பராமரிப்பில் நமக்கு அடிப்படை அறிவு கூட இல்லை என்கிறான் என் அராபிய நண்பன்!''

ஒரு ஆவேச ஹுங்காரத்துடன் திவாகரன் ஓரடி முன் வைத்து உடைவாள் மீது கரத்தைப் போட, மன்னர் விரல் அசைவாலேயே அவனை அடக்கினார். ஜெயசிங்கன் தொடர்ந்தான்.

''ஆனால் தவறு நம்முடையது மட்டுமல்லவாம். அராபிய வியாபாரிகளின் தந்திரமும் ஒரு காரணமாம்.''

''தன்னையும் சேர்த்துக் கொண்டுதானே பேசுகிறான்?'' என்றான் திவாகரன். உத்தம சீலி கலகலத்தாள். விஜயாலயன் உள்ளத்தில் எரிமலை குமுறத் தொடங்கியது.

''திவாகரா! என் நண்பன் நல்லவன்; ஆனால் கோபக்காரன். அவனுக்குத் தமிழ் தெரியாதது நல்லதாயிற்று. இல்லையேல்...''

''இல்லையேல்...?'' திவாகரனின் வாள் அதன் உறைக்குள்ளிருந்து விடுபடத் துடித்து உலோக ஒலி எழுப்பியது.

''அமைதி!'' என்று கண்டிப்புக் குரலில் சொன்னார் மன்னர். ''ஜெயசிங்கா! நீ மேலே பேசு! என்ன தந்திரத்தைக் குறிப்பிடுகிறான் உன் நண்பன்?''

''மன்னவா! வியாபாரிகளுக்குச் செல்வம் ஈட்டுவது ஒன்றுதான் குறிக்கோள். எனவே அராபியக் குதிரை வணிகர்கள் அவற்றைப் பாதுகாப்பது எப்படி என்பதைத் துறைமுகப் பட்டினத்தில் தாம் சந்திக்கும் தமிழ் வணிகர்களுக்குச் சொல்லித் தருவதில்லை. அப்படியே கற்றுக் கொடுத்தாலும் அந்த ரகசியங்களை நமது வியாபாரிகள் மன்னர்களிடமோ தளபதிகளிடமோ வெளியிடுவதில்லை. குதிரைகள் எவ்வளவு சீக்கிரம் மடிகின்றனவோ அவ்வளவுக்கு வியாபாரிகளுக்கு லாபம் தானே! மேன்மேலும் குதிரைகளை அதிக விலைக்கு விற்கலாம் இல்லையா?''

திடுக்கிட்டு நிமிர்ந்தான் முத்தரையன். ''இதென்ன, இப்படியும் மோசடி உண்டா?'' என்று கேட்டார்.

(தொடரும்)

இதோ ஒரு ஜோக் படம். ஆனால் ஜோக் எங்கே?

அந்தத்தான் தொலைந்து போயிற்று. பாதகமில்லை; நீங்களே வெற்றிடத்தில் எழுதி அனுப்புங்களேன்!

அழகாயிருந்தால் உங்கள் கையெழுத்தே அச்சாகும். பிரசுரமானால் பரிசு உண்டு.

முடிவு தேதி: ஜூன் 22.


உறையின்மேல் 'ஜோக்கில்லாத ஜோக்' என்று எழுதவும்.



பெயர்: ....

விலாசம்: ....

....



“ரசிகமணி நூற்றாண்டு கட்டுரைப் போட்டி”

கட்டுரைப் போட்டி: பரிசு ரூ 2000

ரசிகமணி நூற்றாண்டு நிறைவை யொட்டி சென்னை டி.கே.சி. வட்டத் தொட்டியும் கல்கி நிறுவனமும் இணைந்து இந்தப் போட்டியை நடத்துகிறது.

சென்னை, வி. நாராயண அய்யர் அறக் கட்டளை ரூ. 2000 பரிசுத் தொகையை வழங்குகிறது.

முதல் பரிசு ரூ. 1001. இரண்டாவது பரிசு இரு கட்டுரைகளுக்குத் தலா ரூ. 501.

தவிர, பிரசுரமாகும் கட்டுரைகளுக்கு கல்கி நிறுவனம் வழங்கும் வழக்கமான சன்மானம் உண்டு.

கட்டுரைகளுக்கான தலைப்புக்கள்: (1) ரசிகமணியின் ரசிக உள்ளம் (2) ரசிகமணியும் கம்பரும் (3) ரசிகமணி வளர்த்த கலைகள் (4) ரசிகமணியின் சமய நோக்கு (5) ரசிகமணியின் கடித இலக்கியம்.

இவற்றில் ஏதேனும் ஒன்று பற்றியோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தலைப்புக்களிலோ கல்கியில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாத அளவில் கட்டுரைகள் எழுதலாம். ஆனால் ஒருவருக்கு ஒரு கட்டுரைக்கு மட்டுமே பரிசு கிடைக்கும்.

நடுவர்கள்: (1) ஜஸ்டிஸ் மகராஜன்; (2) மீ. ப. சோமு; (3) சுந்தா; (4) ல. சண்முகசுந்தரம்; (5) கி. ராஜேந்திரன், ஆசிரியர் கல்கி.

முடிவு தேதி ஜூலை 15.

உறையின் மேல் ''**ரசிகமணி நூற்றாண்டு கட்டுரைப் போட்டி**'' என்று குறிப்பிடவும். பிரசுரமாகாத கட்டுரைகளைத் திரும்பப் பெற விரும்பினால் போதிய தபால் தலைகள் ஒட்டப் பெற்ற சுய விலாசமிட்ட உறைகளைக் கட்டுரையுடனேயே அனுப்புதல் வேண்டும். கடிதப் போக்கு வரத்துக் கிடையாது.

ரசிகமணியின் நூல்களில், ''இதய ஒலி'' (ரூ. 9) ''கம்பர் யார்?'' (ரூ. 5) ஆகியன ''வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, சென்னை-17'' என்ற விலாசத்தில் கிடைக்கும். இவ்விரு புத்தகங்களுக்குமான விலையில் போட்டியில் கலந்துகொள்வோருக்குப் பத்து சதவீதம் தள்ளுபடி உண்டு. ''ரசிகமணியின் கடிதங்கள்'' என்ற ரூ. 20 விலை கொண்ட புத்தகத்தை ரூ. 15 சலுகை விலையில் (பதிவுத் தபால் கட்டணம் ரூ. 5/– தனி) கீழ்க்கண்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்: ''டி. கே. சி. வட்டத் தொட்டி, 6, N. தெரு, கீழ்ப்பாக்கம் தோட்டம் காலனி, சென்னை-10. இந்நூலை வானதி பதிப்பகத்திலும் கேட்டுப் பெறலாம்.

ரசிகமணி நூற்றாண்டு விழா மலர்: விலை ரூ 20 கிடைக்குமிடம் : உலக இதய ஒலி C6, வெங்கடேச அக்ரஹாரம் மயிலாப்பூர், சென்னை-4 (15% தள்ளுபடி உண்டு)

ரசிகமணியின் மற்ற நூல்களான ''கம்பர் தரும் ராமாயணம்'', ''முத்தொள்ளாயிரம்' ஆகிய இரண்டும் பொது நூலகங்களில் உள்ளன.

வட்ட மேஜை:

சமூக இயலைச் சாடுவோர்?



● சமூக இயல் (Sociology) பிரிவில் பட்டம் பெற்றதால்தான் தனக்கு வேலையே கிடைக்கவில்லை என்ற தவறான கருத்தில் ரா.முருகேசன் என்பவர் எழுதியுள்ள 25.4.82 தேதியிட்ட கல்கி இதழைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தேன்.

சமூக இயல் (Sociology) என்பது Scientific study of Society or Science of society. இது 'மக்கள் நல இயல்' என்று போற்றப்படுவது. ஆயிரம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட சரித்திர காலப் போர்களைப் பற்றி சமூக இயல் கவலைப்படவில்லை. தனி மனிதனின் அன்றாட வாழ்க்கையில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் நிகழ் காலப் போரை ஆராய்கிறது.

உலக அரங்கின் சமூக அமைப்பில் சிறந்து விளங்கும் அமெரிக்காவில் பல பல்கலைக் கழகங்களில் சமூக இயல் பாடம் முதன்மைப் பிரிவில் போதிக்கப்பட்டு வருகிறது. ஆனால் நம் நாட்டிலோ சமூக இயலின் அவசியம் கவனிக்கப்படாமலேயேபோய்விட்டது. நாம் வாழும் சமுதாயத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளாமலேயே, அதன் முன்னேற்றத்திற்காக நாம் 'திட்டமிட்டு நிறைவேற்றி' வரும் திட்டங்கள் எத்தகைய வெற்றிகளைக் குவித்து வருகின்றன என்பதைத் தினமும் உயரே உயர்ந்து கொண்டிருக்கும் விலைவாசி உணர்த்துகிறதே!

காலம் காலமாக இருந்து வரும் சமூகக் கொடுமைகளால் புரையோடிக் கிடக்கும் இந்திய சமுதாயத்தை உய்விக்க உதவுவதே சமூக இயல். இந்திய மக்களின் வாழ்வைப் போலவே சமூக இயல் பாடத்தின்முக்கியத்துவமும் கவனிக்கப் படாமலேயே இருந்து வருகிறது. இதைப் புரிந்து கொள்ளாமல் 'சமூக இயல் படித்து என்ன பயன்? எனக்கு வேலை கிடைக்க வில்லையே' என்று திரு முருகேசன் புலம்புகிறார். எந்தத் துறை படித்தவர்களுக்குத்தான் இங்கு வேலைகிடைக்கிறது?

அண்ணாமலைநகர் நா. கண்ணன்

● உண்மையான தமிழ்நாடு அதன் 16,543 கிராமங்களில்தான் உள்ளது. தமிழ் நாட்டின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் கண்ணாடியே இக்கிராமங்களில் வாழும் 48.3 மில்லியன் மக்கள். இவர்களது சோதனைகள், வேதனைகள் பற்றிக் கூறும் இதோ ஒரு கிராமம் பகுதி மிகவும் பயனுள்ளது.

ராஜபாளையம் வெங்கடேசன்

16–5–82 கல்கி இதழில் பங்களூரில் எஸ். வி. சேகர் நாடகம் பார்க்க வந்த ரசிகர்களை ஏப்ரல் ஃபூல் செய்தது பற்றி ஒரு செய்தி வந்தது. உண்மையில் அந்த யோசனையை வெளியிட்டதும் அரங்கில் மைக் மூலம் நாடகத்தின் பெயரை மாற்றி அறிவித்ததும் நான் தான்.

சென்னை-18 கே. சுந்தரராமன்
காரியதரிசி, நாடகப்ரியா

● புத்தக மூட்டைகளை வெளியிட்டு வெள்ளி விழாக் காணும் வானதி திருநாவுக்கரசு பற்றிய துணுக்கு மூட்டைகள் அருமை.

உடுமலைப்பேட்டை ஏ. சாகுல் அமீது

● 23–5–82 இதழ் தலையங்கத்தில் தாங்கள் எழுப்பியுள்ள வினாக்களுக்குப்பிரதமர்இந்திரா காந்திக்கு விடை தெரியாவிட்டாலும் இந்திய மக்களுக்குத் தெரியாமல் போகாது.

சென்னை-102 எஸ். வனஜா

● சாதனை சாதனை பகுதியில் வந்த திரு ஸ்ரீதரனின் சாதனை இமாலயச் சாதனைதான். இன்னல் வரும்போது எதிர்த்து நின்று உடலால் ஊனமுற்றாலும் உழைப்பால் உயர்ந்து நிற்கும் அவருக்கு நமது பாராட்டுக்கள்.

சென்னை-45 கே.எஸ். கணபதி சுப்பிரமணியம்

● பாமா கோபாலனின் 'டயரியிலிருந்து சில பக்கங்கள்' பிரித்துப் பார்த்து (படித்து) ரசித்தேன். நல்ல'காதல் கதை கிடைத்தது.

சென்னை-4 மயிலை கோபி

● ஞான பீடத்தின் பரிசினைப் பெற்ற பொற்றேக்காட் அவர்களின் சிறப்பான ஒரு பகுதிக் கதையான ''கவிதைக் கனவுகள்'' மிகவும் நன்றாக இருந்தது. ஒரு பகுதியே இத்தனை சிறப்பாக இருந்தது எனில் முழுமையும் இன்னும் சிறப்பாக இருக்குமே!

பெங்களூர் ப. மூர்த்தி

அசல் க்ளுகோன்-டி Ⓣ
ஒன்றே ஒன்று தான் உண்டு.
அதனைத் தயாரிப்போர் க்ளாக்ஸோ.

வழக்கமான பச்சை
உறையின் மேலே
வெள்ளையில் அச்சிட்ட
க்ளுகோன்-டி® பெயர்
இருக்கிறதா பாருங்கள்.



மட்டமான போலிகள் பலவற்றுள், க்ளாக்ஸோ நிறுவனத் தயாரிப்பான அசல் க்ளுகோன்-டி யினை நீங்கள் வாங்குவது முக்கியம். இல்லையெனில், போலிகள் மூலம் உங்கள் குடும்ப உடல்நலத்திற்கே பேராபத்து வரலாம்.

க்ளாக்ஸோ நிறுவனத்தின், முற்றிலும் நம்பிக்கைக்குரிய தயாரிப்பாகும் க்ளுகோன்-டி; வைட்டமின் D_3, ஃபாஸ்ஃபரஸ், கால்ஷியம் ஆகியன செறிந்த தூய க்ளுகோஸ் பவுடர் அடங்கியது. தங்களுக்குத் தேவையான போது சக்திபெற லட்சக் கணக்கானோர் அருந்துவது இது.

க்ளுகோன்-டி தயாரிப்போர், க்ளாக்ஸோ — பலவகை உணவுப் பண்டங்களுக்கும், உயிர்காக்கும் மருந்துகளுக்கும் புகழ்பெற்ற நிறுவனம். வாங்கும் க்ளுகோன்-டி பேக்கெட் அசல்தானா எனப் பார்த்து வாங்குங்கள்.

க்ளுகோன்-டி Ⓡ சக்தியை மீட்டுத்தர நம்பகமானது.
க்ளாக்ஸோ நிறுவனம் அளிக்கிறது.

HTB-GLI-7027-TL

Ⓣ டிரேடுமார்க்



9

தன் உடலை மட்டுமே துணையாகக் கொண்டு உயிர் வாழ்வது என்ற தீர்மானத்துக்கு வந்து விட்ட ராம நாராயணன் முதலிரண்டு ஆண்டுகள் பிழைப்புக்காகப் பார்த்த வேலைகள் ஏராளம். தாயினிடத்தில் சொல்லிவிட்டு வந்த மொழிகளை அவன் மறக்கவில்லை. சௌகார்பேட்டையின் சந்தடிச் சூழ் நிலையில், வியாபார நேர்த்திகளையும், பெரும் வியாபாரியாக ஆவதற்கு அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய யுக்திகளையும் கூர்ந்து கவனித்தான்.

எந்தத் தொழிலிலும் முன்னேற அடிப்படைத் தேவை தன்னம்பிக்கை. அது மட்டுமே போதாது. துணிவு, விரைவாகச் செயலாற்றும் தன்மை, தொழிலின் நுட்பயுக்திகளை அறிந்து கொள்ளும் பாங்கு இவைகளும் இன்றியமையாதவை என்பதை அந்த இளம் வாலிப உள்ளம் புரிந்து கொண்டது.

சிந்தாதிரிப்பேட்டையில் அறை வாடகைக்கு எடுத்துக் கொண்டு சௌகார்பேட்டையில் வேலையில் இருப்பது சற்று சிரமமாக இருந்தது. சௌகார் பேட்டையை யொட்டிய தெருக்களில் தனி நபருக்கு அறை கிடைப்பது சிரமமாக இருந்தது. தன்னைப் பற்றிப் பிறருடைய மனத்திலும் ஒரு நல்லெண்ணம் உருவாக வகை செய்யவேண்டிய அவசியத்தை அவன் உணர்ந்தான்.

இப்பொழுது அவனுக்கு யார் யார் மூலம் எந்தக் காரியத்தைச் செயலாக்க முடியும் என்று யோசித்து முடிவுக்கு வரும் நிதானம் ஏற்பட்டது. எவ்வளவு தான் கெட்டிக்காரனாக இருந்தாலும் ஒரு தனி ஆள் தானாகவே எல்லாக் காரியங்களையும் சாதித்து விட முடியாது. அவன் வேலை பார்த்த கம்பெனியின் முதலாளி ஒரு ஸேட்ஜி. அவருக்கு வயது அறுபதை நெருங்கிக் கொண்டிருந்தது. ராஜஸ்தானத்திலிருந்து நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் திரும்பிப்போக ரயில் கட்டணமின்றிச் சென்னைக்கு வந்த அவர் இன்று பல லட்சங்களுக்கு அதிபதியாக இருக்கிறார். அவர் பேசுவதைக் கேட்டுப் புரிந்துகொள்ளும் அளவுக்கு ராமநாராயணனுக்கு இந்தி தெரிந்திருந்தது. பள்ளியிலும் கல்லூரிகளிலும் கிடைக்காத அனுபவப் பாடங்கள் வாழ்க்கையிலே கிடைக்கின்றன. சொல்லப் போனால் ஒவ்வொரு மனிதனும் ஒரு புத்தகம்தான். ஆனால் எந்த விதமான நூல்களைப் படிப்பதனால் நமக்குப் பயன் ஏற்படும் என்பதை ஒருவன் தெரிந்து வைத்துக்கொள்வது அவசியம் போல் எந்த மனிதருடன் பழகினால் நமக்கு லாபம் என்று யோசிக்க அவன் முற்பட்டான்.


புத்தகங்களை உபயோகித்துக்கொள்வதைப் போலவே மனிதர்களையும் உபயோகித்துக் கொள்ள வேண்டும். "யூஸ் அதர்ஸ் நாலெஜ், தெயர் பவர், தெயர் எனர்ஜி" ஸேட்ஜி ஒரு நாள் தம் மகனுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்.

ராமநாராயணன் சேட்ஜியின் மகனை விட இரண்டு வயதுதான் இளையவன். அதனால் அவன் இவனிடம் சற்றுத் தாராளமாகவே பழகினான்.

"மதன்லால்!" பெரிய ஸேட்ஜி தம் மகனைக் கூப்பிட்டார்.

"ஜீ!" என்று குரல் கொடுத்துக்கொண்டே அவன் வந்தான்.

"நான் வெளியே போய் வருகிறேன். அரை மணி நேரம் எங்கும் போகாமல் போனை அட்டண்ட் பண்ணு" — இந்தியில் சொல்லிவிட்டு அவர் எழுந்தார். தொந்தி குலுங்கியது. தார்பாய்ச்சு வேஷ்டியைச் சரி செய்து கொண்டார். ரோல்ட் கோல்ட்



பிரேம் போட்ட மூக்குக்கண்ணாடியைத் துடைத்துப் போட்டுக்கொண்டார்.

''ஏய் ராம் நாராயண்! சின்ன ஸேட் கிட்டே சொல்லிட்டு வெளியே எங்கும் போயிடாதே! நான் வந்த பொறவு காப்பி குடிக்கப் போகலாம்'' அரை குறைத் தமிழில் சொன்னார். சில வினாடிகளில் அவர் கார் புறப்பட்டது.

மதன்லால் சொன்னான்: ''டேய் ராம் நாராயண்! எனக்கு ஒரு ஹெல்ப் செய்யணும். நீ போன் கிட்டே உட்கார். பத்து நிமிஷத்திலே வந்திடறேன்.''

''சரிங்க முதலாளி!''

''இன்னிக்குத்தாண்டா அந்தப் பொண்ணு கிட்டே வரேன்னு சொல்லியிருந்தேன். மணி ஆயிடுச்சு. அப்பா அரை மணின்னு சொன்னார்னா ரெண்டு மணி நேரம்னு அர்த்தம்.''

''நீங்க பத்து நிமிஷம்னு சொன்னா?''

மதன்லால் சிரித்து விட்டான்.

''அரை மணிலே நிச்சயம் வந்திடுவேன். உனக்கு எட்டணா பக்ஷிஸ். இன்னிக்கு ஸ்வீட் சாப்பிடு. அப்பா கிட்டே நான் வெளியே போய் வந்ததைச் சொல்லக் கூடாது.''

''சரிங்க!''

''எங்கப்பா எனக்குக் கல்யாணம் நிச்சயம் செய்யப் போருர்னு நினைக்கிறேன். இந்தப் பொண்ணை நான் எப்படி மறக்கிறது? இவ தெலுங்குப் பொண்ணு. ரொம்ப அழகா இருப்பா. இவளை ஒரு நாள் பார்க்கலேன்னுக் கூட எனக்குக் கஷ்டமா இருக்குது ராம் நாராயண். சரி வர்றேன்.''

சொல்லிவிட்டுச் சைக்கிளை எடுத்தான். என்ன நினைத்துக் கொண்டானே மீண்டும் கடைக்குள் வந்து கல்லாப் பெட்டியைத் திறந்தான். முழுசாக இரண்டு பத்து ரூபாய்த் தாள்களை மடித்துச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டான். கல்லாப் பெட்டிச் சாவியை ராம் நாராயணனிடம் நீட்டு முன்பு ''உள்ளே அறுபத்தேழு ரூபாய் எட்டணு இருக்குது. வியாபாரம் நடந்தா அந்தப் பணத்தைத் தனியா வச்சிடு. இதிலே கை வைக்காதே!'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

ராம்நாராயணனுக்கு இது புதிதல்ல. ஆனல் இருபத்தி இரண்டு வயதுக்குள்ளாகவே வாழ்க்கையின் எல்லா அனுபவங்களையும் மதன்லால் துணிச்சலாகப் பெறுவதும், அதைப் பெரியவருக்குத் தெரியாமல் செய்வதும் அவனுக்கு ஆச்சரியத்தை அளித்தன. இல்லை பெரியவருக்குத் தம் மகனின் செய்கைகள் தெரிந்தும் தெரியாதது போல் இருக்கிருரா? பெரிய இடங்களில் பல விஷயங்கள் இப்படித்தான் இலைமறை காய் மறையாக நடந்து விடுகின்றன.

தான் இனியும் இதே சேட்டின் கீழ் வேலை செய்வதில் பயனில்லை என்பது போல் தோன்றியது. சுதந்திரமாக ஏதாவது செய்ய வேண்டும். அதற்கு மூலதனம் தேவைப்படும். சிறிய தொகையாக இருந்தாலும் பரவாயில்லை. சம்பளத்தில் சேர்க்க முடியவில்லை. ஆனல் எப்படியும் மூலதனம் சேர்க்க வேண்டும்.

அவன் இனிய தன் எதிர்காலத்தைப் பற்றிய கற்பனையில் ஈடுபட்டான்.

தன்னுடைய கற்பனை யதார்த்தமான உண்மையாக இவ்வளவு விரைவில் மாறும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. மதன்லால் கடையை விட்டுச் சென்று முக்கால் மணி நேரத்தில் சைக்கிளில் வேகமாகத் திரும்பி வந்தான்.

'ராம்நாராயண்!'' என்று உரக்கக் கூவிக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

''சின்ன முதலாளி! ஏன் இப்படி இருக்கீங்க? உங்களுக்கு என்ன ஆச்சு? ரொம்பப் பதற்றமா இருக்கீங்களே ஏன்?'' என்று கேட்டான் ராமநாராயணன்.

''தண்ணி கொஞ்சம் கொடு'' என்ருன் மதன்லால்.

கழுத்து நீண்ட மண் கூஜாவிலிருந்து விளிம்பற்றிருந்த தம்ளரில் குளிர்ந்த நீரை விட்டுக் கொடுத்தான் ராம நாராயணன். மதன்லால் அவ்வளவு தண்ணீரையும் ஒரே மூச்சில் குடித்தான்.

''அந்தப்பெண்ணுக்காக இந்த ஆறு மாசத்திலே ரெண்டாயிரம் ரூபா நான் செலவு பண்ணியிருக்கேன். இன்னிக்கு நான் அவளோட சந்தோஷமா இருக்கிற சமயத்திலே கதவைத் தட்டிஞங்க. நான் பயந்திட்டேன். அவதான் கதவைத் திறந்தா. அவளோட மாமான்னு சொல்லிக்கிட்டு ஒரு புட்டா ஆத்மீ (கிழவன்) அங்கே இருப்பான். இருட்டு ராஸ்கல். அவனுக்கே பக்ஷீஸ் தினமும் ஒரு ரூபா கொடுப்பேன். அவன் இன்னிக்கு ரகளை பண்ணிட்டான். அவளுக்குக் கல்யாணம் செய்ய முடியாதாம். நான்தான் அவளைக் கட்டிக்கணுமாம். அவ வவுத்திலே என் பச்சா இருக்காளும். எப்படி கதை?

''நான் சரின்னு சொல்லல்லேன்ஞ இங்கே பஜார் மேலே வந்து அந்தப் பொண்ணையும் இட்டாந்து கடை முன்னுடி கலாட்டா பண்ணுவாங்களாம். அந்த புட்டா ஆத்மீ கூட ரவுடிப் பசங்க மாதிரி ரெண்டு பேர் சேர்த்துக்கிஞங்க. ஷுவுட்டிங். கெட்ட கெட்ட வார்த்தை பேசிஞங்க. ராம்நாராயண், என்ஞ செய்யறது? அப்பாவுக்கு விஷயம் தெரிஞ்சா என்னைக் கொன்னுடுவாரு. பஜாரிலே நான் தலை காட்ட முடியாது. என்ஞ பண்றது ராம்நாராயண். அந்த துஷ்மன் இங்கே இன்னும் தர்ட்டி மினிட்டிலே வருவான். அப்பாவுக்குத் தெரியாம சால் ஜாப்பு சொல்லிச் சமாளிக்கணும். நீதான் ஹெல்ப் செய்யோணும் ராம் நாராயண். நான் உனக்கு நூறு ரூபாய் தர்றேன். என்னைக் காப்பாத்து!'' என்ருன் மதன்லால்.


ராம்நாராயணன் தன் இடது கையினுல் மோவாயைத் தடவிக் கொண்டான். மதன்லால் பெரிய புள்ளியின் மகன் என்று தெரிந்துதான் அந்தப் பெண்ணைச் சேர்ந்தவர்கள் பழக விட்டிருக்கிருர்கள். இப்பொழுது

மிளகாய்விதை எண்ணெய்!

அனந்தப்பூரில் உள்ள எண்ணெய் தயாரிப்புக்கான ஆராய்ச்சி நிறுவனம் இப்போது மிளகாய் விதையைப் பிடித்துவிட்டது. 26 சதவிதம் எண்ணெய் இந்த மிளகாய் விதைகளில் உள்ளது என்று கண்டறிந்துள்ளார்கள். சோயா எண்ணெய் மாதிரி இது இருக்குமாம். இதய நோய்களைக் குணப்படுத்த வல்ல 'லினோலெயிக் அமிலம்' இந்த மிளகாய் விதை எண்ணெயில் எழுபது சதவிதத்துக்கு மேல் இருக்கிறதாம். உணவுக்கு மட்டுமில்லாமல் பெயின்ட், சோப் தயாரிக்க என்று தொழில் துறையிலும் இது பயன்படும்.

எண்ணெய் எடுத்த பிறகு கிடைக்கும் மிளகாய் விதைச் சக்கையையும் ஊறுகாய் மசாலா வியாபாரங்களுக்குப் பயன்படுத்தலாமாம்.

-யெஸ்பால்




கவிதை பாடும் கண்களுக்கு...
ஐடெக்ஸ்
விழிகள் மொழிபேச ஐடெக்ஸ்
பெண்மை பளிச்சிட இளமை எழில்
கொஞ்சிட வனிதையர் வதனம்
கவர்ச்சி மிளிர்ந்து கண்கள்
கவிதைபாடும் ஐடெக்ஸ் கண்மை
சாஸ்திரீய முறையில் தயாராகும்
ஐடெக்ஸ் மை கண்களுக்கு
குளுமையூட்டி பாதுகாக்கிறது.
எவ்வித தீங்கும் விளைவிக்காது
ஐடெக்ஸ் 38 ஆண்டுகளாக உங்கள்
நம்பிக்கையின் மகத்தான சின்னம்
EYETEX
அரவிந்த் லாபரட்டரீஸ் சென்னை 600033
Imageads-AL 1293 Tam

அவர்களுக்கு அவன் தந்துவந்த பணம் போத வில்லை போலும். ஒரேயடியாக, ஒரே தவணையில் கணிசமான ஒரு தொகையை மதன் லாலிடமிருந்து பெறத்திட்டமிட்டுள்ளார்கள். அதற்காக இப்படி ஒரு நாடகம் போலும்!

''ஜீ! கவலைப்படாதீங்க. நீங்க உடனே ஒரு ஆயிரம் ரூபா பணத்துக்கு ஏற்பாடு செய்யுங்க. அவனுங்க வந்தா நான் கவனிச்சுக் கிறேன். கவலைப்படாதீங்க. இவனுங்களுக்கு மேலே ரவுடிங்களை யெல்லாம் எனக்குத் தெரியும்'' என்றான் ராம் நாராயணன்.

''அடிதடி வேணும் ராம் நாராயண். போலீஸ் கேஸ் ஆயிடப் போறது. உஷாரா காரியத்தை முடிக்கணும்.''

''ஜீ! நீங்க எதுக்கும் கவலைப்படாதீங்க.!''

சொல்லிவிட்டு ராமநாராயணன் மதன் லாலின் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப் பட்டான். மதன்லால் மௌனமாக இருந் தான்.

''முதலாளி! நான் இன்னும் அரை மணிக் குள்ளே வந்திடுவேன். நீங்க பயப்படாம இருங்க. அதுக்குள்ள அவனுங்க வந்துட் டாங்கன்னு போலீசுக்குப் போன் செஞ் சிடுவேன்னு சொல்லிப் பயமுறுத்துங்க. ரூபாய் தயாரா இருக்கட்டும். விஷயத் தைக் காதும் காதும் வச்சாப்பலே நான் முடிக்கிறேன்'' என்று சொல்லிவிட்டுப் புறப் பட்டான். ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் திரும்பி வந்தான்.

''அந்தப் பொண்ணு அட்ரஸ் என்ன முத லாளி?''

''ஏன் ராம் நாராயண்?''

''சும்மா சொல்லுங்க. யாருக்கும் எந்த விதமான தொந்தரவும் வராம நான் காரி யத்தை முடிக்கிறேன்'' என்றான்.

மதன் லால் அவன் அருகில் சென்று காதோடு சொன்னான்.

''ஓகே!'' ராம்நாராயண் புறப்பட்டான்.

அவனுக்கு வயது இருபதுதான் ஆகி யிருந்தது என்றாலும் துணிச்சலும், பிரச்சி னைகளை அணுகும் பாங்கும், வீட்டை விட்டுத் தனியாக வந்த இரண்டு வருடங்களில் நேர்த்தியாகத் தெரிந்திருந்தன.

நேராகக் கொத்தவால் சாவடிக்குப் போனான். அங்கே இவனுக்கு மிகவும் பழக்க மான இரண்டு நபர்களைத் தேடிக் கண்டு பிடித்தான். விஷயத்தை ரத்தினச் சுருக்க மாகச்சொல்லி அவர்களைஅழைத்துக்கொண்டு மதன்லால் சொன்ன விலாசத்துக்குச் சென் றான். தன் சகாக்கள் இருவரையும் வெளியே நிற்க வைத்துவிட்டு மிகவும் துணிச்சலுடன் உள்ளே நுழைந்தான்.

''கிருஷ்ணவேணிங்கிற பொண்ணு வீடு இதுதானே?''

அவன் கேட்ட கேள்வியும் முறையும் அங்கே இருந்த இரண்டு பேர்களையும் திடுக் கிட வைத்தது. அவர்களில் ஒருவன் அவ ளுக்கு மாமன் முறை கொண்டாடியவன். வயது ஐம்பது இருக்கும் போலிருந்தது. அவன் இவனை முறைத்துப் பார்த்தான். சிறிது நேரம் பதில் பேசவில்லை. பிறகு கேட்டான். ''நீங்க யாரு தம்பி?''

''நான் அந்தப் பெண்ணைப் பார்க்கணும்.''

''நீங்க யாருன்னு சொல்லலையே?''

''புரோக்கர் அவ பேரைக் கேட்டாலே போதும்னுதானே சொன்னான். அட்ரஸ் தர்றதுக்கே அவனுக்கு ரெண்டு ரூபா தண் டம் கொடுத்தேனே!'' என்றான்.

மாமன் முறைகொண்டாடியவன் திடுக் கிட்டுக் கேட்டான்: ''புரோக்கரா? யாரு அவன்? என்ன இதெல்லாம்?''

''யோவ்! என்னய்யா ஒண்ணும் தெரியாத மாதிரி பேசறே. பிஸினஸ் நடத்தறதே நீதானே? அம்பது வயசுக்காரர் ஒருத்தரு இருப்பாரு. அவருதான் இன்சார்ஜ். அவ ரைக் கான்டாக்ட் செய்யுன்னு சொன்னானே அந்த புரோக்கர்!''

''கெட் அவுட்!''

ராம் நாராயணன் உரக்கக் கத்தினான்:

''ஐயோ... அம்மா....!''

அவனுடைய சகாக்கள் உள்ளே நுழைந் தனர்.

''என்னய்யா இந்த வீட்லே. யாரையோ கொலை பண்றாப்பலே சத்தம் கேட்டுதே!'' என்று ஒருவன் உரக்கக் கத்திப் பேசினான்.

முதியவனால் எதிர்பாராத இந்தத் தலை யீட்டைத் தவிர்க்க முடியவில்லை.

''ஒண்ணுமில்லீங்க. இந்த ஆளு இங்கே வந்து தகராறு செய்யறாரு!''

''என்ன தகராறு தம்பி?''

''இந்த வீட்லே இவங்க... பிஸினஸ் செய்யறாங்க!''

''பொய்... பொய்.... நம்பாதீங்க!'' முதி யவன் குறுக்கிட்டான்.

''அட இருய்யா... நீ சொல்லு தம்பி!''

''ஒரு புரோக்கர் பய என்கிட்டே இருபது ரூபாய் பணமும் ரெண்டு ரூபாய் கமிஷ னும் வாங்கிக்கிட்டு இங்கே அனுப்பினான். நான் வந்து கேட்டா இவரு கெட் அவுட்னு சொல்றாரு!''

''ம்....! ஏன்யா பெரியவரே ஒண்ணு அந்தப் பொண்ணு கிட்ட இவரை அழைச் சுக்கிட்டுப் போங்க. இல்லே பணத்தைக் கொடுத்திடுங்க!''

''இல்லீங்க! அந்த மாதிரி யெல்லாம் இல் லீங்க. அந்தப் பொண்ணு ஒரு சேட்ஜியோட சம்சாரம். இங்கேதான் குடியிருக்குது. அந்த சேட்ஜிக்குத் தெரிஞ்சா இவனைக் கொன்னுப் போட்டுடுவாரு!''

ராமநாராயணனும் மற்ற இருவரும் பல மாகச் சிரித்தார்கள். ''எந்த ஸேட்ஜியா உங்க வீட்டு மாப்பிள்ளை? உன்னைப் பார்த்தா தெலுங்கன் மாதிரித் தெரியுது!'' என்றான் ஒருவன்.

''நான் தெலுங்கன்தான். அந்த ஸேட்ஜி பேரு....''

''சொல்லு...''

''வேணாமுங்க.....''

''ஏன்?''

''சொல்லக் கூடாதுங்க.''

''மாப்பிள்ளை பேரைச் சொல்ல ஏன் பயப் படணும்? இல்லே ஆளையாவது காட்டு. நாங்க விசாரிக்கிறோம்.'' என்று கேட்டான் அவன் கையைப் பிடித்தபடியே.

(தொடரும்)

வீட்டில் அனைவரின் கேசப் பராமரிப்புதானே? அதற்கு நம்பகமானது, விசேட ஃபேமிலி ஷாம்பூ பாமோலிவ்.



பாமோலிவ் ஷாம்பூ:
ரெகுலர், அல்லது
கூடுதலான
போஷாக்கிற்கு எக்



பாமோலிவ், எல்லா வகைக் கேசத்திற்கும் ஏற்ப விசேட முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அது, வளமையான நவீன ஷாம்பூ. உங்கள் கேசத்தை நன்கு தூய்மை துலங்க வைக்கிறது. குழந்தைகளின் மென்மையான கேசத்திற்கோ மிகவும் ஏற்றது.

அது மட்டுமா? இவ்வகை ஷாம்பூக்களிலே சிக்கனமானது, பாமோலிவ் ஷாம்பூ—குடும்ப பட்ஜெட்டிற்கும் ஏற்றது.

குடும்பத்தினர் கேசப் பராமரிப்புக்கு நேசமானது-உங்கள் பட்ஜெட்டிற்கும் ஏற்றது

GK&E.PS.7 TM

யேசுவுக்கு ஒரு ஞானத் திருப்புகழ்

மதப் பொறையுடையது இந்து மதம். அதனால் இந்து மதப் புலவர்களில் பெரும்பாலானவர்களும் சமயப் பொதுமையை வற்புறுத்திப் பாடினர். மகாகவி பாரதியும் எல்லா மதக் கருத்துக்களையும் ஆராய்ந்த பின்னர், மதங்கள் எல்லாவற்றின் உட்கருத்து ஒன்றுதான் என்றும் அது ஒவ்வொரு மனிதனையும் கடவுளாகக் கருதுவது என்றும் கூறினன். ''சாமி நீ; சாமி நீ; கடவுள் நீயே'' என்பது மதங்கள் யாவினும் உட்புதைந்த கருத்து என்றான் பாரதி.

சைவ, வைணவச் சமயப் புலவர்கள் இறைவன் திருப்புகழை வியந்து ஓதுவது போலவே ஏக பிரான் மீதும் ஒருவர் ஞானத் திருப்புகழ் பாடினர். 'சமயப் பொறையே இங்ஙனம் ஒரு சமயத்தைப் போலப் பிறிதொரு சமயமும் வழிபட வழிகோலுகிறது' என்று அவரே தெரிவித்துத் தம் நூலைப் பாடினர்.

மனிதனுக்கு ஏற்படுகின்ற அபிலாஷைகள், சலனங்கள் இவற்றுக்கெல்லாம் என்ன காரணம்? விலக்கப்பட்ட கனியை அறிவு மரத்திலிருந்து ஆதாம் ஏவாள் உண்டதே மனித இனத்தின் கேடுகளுக்கெல்லாம் காரணம். மில்ட்டனும் தன் ''இழந்த துறக்கத்'' துக்கு (Paradise lost) மையக் கருத்தாகக் கொண்டதும் இதனையே.

"So saying her rash hand in evil hour
Forth reaching to the fruit;she plucked she eat
Earth felt the wound and nature from she set
Sighing through all her works,gave signs of woe
That was last..."

வானத்தே பரமனை எதிர்த்து வந்த சாத்தான் சதித் திட்டம் வெற்றி பெற்றது. மனித இனம் உண்ணாததை உண்டது. ஆசை மேவியது. அதனால் அது ஆசை வலையினின்றும் விடுபட ஆண்டவனையே வேண்ட வேண்டியுள்ளது.

''உணர்ச்சிக் கனி, அறிவு மரத்தினின்றும் பிரிந்துவிட்டால் அந்த உணர்ச்சிக் கனியை உண்டவர்கள் நிலை என்ன என்பதையே இன்றுவரை உலகம் காட்டி வருகிறது.''

மகாத் தேவனை விளங்கும் இறைவன் கட்டளையை மீறியதால் ஏற்பட்ட ஜனச் சாலம் இவ்வாழ்க்கை எனத் தெரிகிறது.

''இறைவா, என் உயிர் என்னும் கப்பல், உணர்ச்சிச் சரக்கை ஏற்றிக் கொண்டு பாவக் கடலில் பிரயாணம் புறப்பட்டு விட்டது. உன் வரம் என்னும் சிறு காற்று வீசிக் கொண்டிருக்கிறது. இறை நட்பு, மனித நட்பு என்னும் பாய்களை விரித்துக் கட்டியிருக்கும் வரை கப்பல் பிரயாணம் நன்றாகவே இருக்கிறது. எப்படியோ பிரயாணத்தில் கப்பலைக் கவிழ்ப்பதற்கு உள்ளே பாவநீர் புகத் தொடங்கியது. அது உன்னால் அருள் பெற்ற பாவ விமோசனக் கப்பலாய் இருந்ததால் அறிவு என்னும் மாலுமி மோட்சம் என்னும் துறைமுகத்துக்கு வாழ்க்கைக் கப்பலைக் கொண்டு போய்ச் சேர்ப்பித்தான்!''

''மண்ணுலகத்திலேயே நரக சொர்க்கங்கள் இருக்கின்றன என்பதை மனிதன் உணருமாறு செய்திருப்பவன் நீ! இத்தரை உலகில் நன்றென்பார் இசைந்திடும் நரகினில் விழுபேய்கள்; நெஞ்சுறு வினையறிந்து உன் திருவடி தொழுவார் உலகினில் சொர்க்கத்து உலவிடுவர்!''

''இராப் போசன அரங்கில் தூய அருளப்பர் தன் மார்பின் மீது சாய்ந்திருக்க அருள் புரிந்தோய்! ' அந்த அருளப்பரும் அஞ்சுமாறு நடுத் நீர்ப்புக்காக, காட்சியில் வான மேகத்தை ஆசனமாகக் கொண்டு சீடர்களுடன் தோன்றிய முதல்வோனே!''

புலவர் அந்தோணிக்குட்டி அண்ணவியார் 18ம் நூற்றாண்டைச் சார்ந்தவர். வீரமா முனிவர் காலத்தவர். தூத்துக் குடியில் பிறந்தவர். அவர் பாடியது ''இயேசு நாயக சுவாமியின் ஞானத் திருப்புகழ்'' என்ற நூல். அதில் ஒரு பாடல் இது. 120 விருத்தங்களைக் கொண்டது.

வான்ஒப் பாரிய காவினிலே நர
மேல்உற் றேஅவன் ஏவிய
ஏவனும்
மாதுக்கு ஓதி உணுதவை
யேஉண—நசைமேவி
மாகத் தேவுரை மீறிட வேபுவில்
ஜனிப் பேய்து வீசிய காதக
ஜனச்சாலம் இதாம்என வே
அறி — வியாகி
தேனைத் தேமொழி பேசிய
மாசறி
வேசைக் கேமுறி யாகிய
தால்உறு
நிமைச் சாகர வாரியிலே திசை
— தெரியாது
சீரற் றேயுழல் ஆவலை மாகல
மானப் பாவிஎன் ஆருயிரேதினை
சீதச் சேவடி யார்அரு ளால்
உறு — விசுவாச
ஞானத் தாள்உட னேயதி
லேஇசை
வாகச் சூழ்ஒரு தேவசி நேகமும்
ஞாலத் தீதுஅறு சமமும் ஆம்,
இவை—பாயாக
நாடித் தூவர மேசிறு கால்என
வீசப் பாவம தாகிய நீரது
நாடப் பாவவி மோசன
மாகிய — ஒருபேழை
ஆனத் தால்அது வேஒழி வாக
வும்
மேலுற் றேஅறி வானது
மாலுமி
யாகிச் சேண்எனும் மாதுறை
யேயுற —
அருள்தாராய்
ஆகத் தேதுயில் ஆர்ஒரு மாத
வன்
ஆடச் சேடெழு மேகவி மான
மது
ஆகச் சீருடனே அதிலேவர —
முதலோனே!


இலக்கியத்தில் இறையுணர்வு

சதீஷுக்குச் சகிக்கவில்லை. என்னதான் இன்ஸ்பெக்டராக இருக்கட்டுமே!

முகத்தில் லேசான கருநீலப் பூச்சு. திறந்த கண்களில் வெறித்த பார்வை. மூட மறந்துவிட்ட வாய். இளமையாய் இருந்து இப்போது இறுகிப்போன சதை. உடம்புக்குக் கொஞ்சம் கூட இஷ்டமில்லாமல் இறந்திருக்கிறாள். சாவு வரவழைத்ததா, வற்புறுத்தலா — சதீஷுக்கு நெற்றிக் கோடுகள் எண்ணிக்கையிலும் நெருக்கத்திலும் அதிகமாயின.

இறந்தவளின் உடலைப் பார்த்துக் காமிராவின் கண் சிமிட்டல்கள். பலன் இல்லாத முயற்சிகளில் ஃபிங்கர் பிரிண்ட்ஸ் நிபுணர். சர்வ சத்தமாக இருந்தது அந்தக் குடிசை. வெளியே—

வெறித்த பார்வை, பய மூச்சு. இறந்த வாய் — இவற்றுடன் கருமையான கடினமான சக குடிசை வாசிகள்.

''ராத்திரி எங்க வூட்டுப் பக்கம் பேயா சுத்துவாளே, கஸமாலத்துக்குச் சாவறதுக்கு இந்த இடம்தான் கெடச்சுதா, புள்ள குட்டிங்க பயந்து சாவுமே!'' — நிச்சயமாக இப்படியெல்லாம் நினைத்திருப்பார்கள்.

'இதுகளை விசாரணை என்று அணுகினால் வாயே திறக்காது. பேசாமலேயே முடிந்ததை வாங்க வேண்டும்'. காதைக் கூர்மையாக்கினான் சதீஷ்.

''இப்பத்தான் ஒய்ங்கா ஒரு வூட்லே மூணு மாசமா வேலைக்குப் போயி வந்தா, பாவி. இன்னைக்கு வாயைத் தொறந்து போயிட்டாளே...''

கோணவாய்ப் புகையிலைக் கிழவியின் புலம்பல்.

குடிசை வாசலை ஒட்டினாற் போல் தெருப் பக்கம் ஒரு அட்டை டப்பா. அதன்மேல் என்ன பாஷையோ படிக்க முடியவில்லை, சதீஷால். விபூதியும் பொட்டும் வைத்தது மாதிரி இங்கிலீஷின் தலைமேல் கோடுகளும் சிறகுகளும். சம்பந்தமில்லாத மூன்று நான்கு பாஷைகள். ஏதோ வெளிநாட்டு '120' ரோல் ஃபிலிம் அட்டை டப்பா. துடைத்து விட்ட மாதிரி இருந்தது. பளபளத்த வார்னிஷ் பூச்சு. ஒருபக்கத்தில் Mfd. Apr '81' என்று வேறு. ரேகைகள் ஏதாவது... சந்தேகம் தான். எந்த நாட்டுச் சரக்கு? — ஸ்பானிஷ்? ஃபிரெஞ்ச்? சதீஷ் யோசித்தான். பாஸ்போர்ட் ஆபீஸ், ஏர் இந்தியா ஆபீஸ் இங்கெல்லாம் தேடுவது 'திருப்பதியில்



மொட்டை'க்கதைதான். 'முதலில் போஸ்ட் மார்ட்டம் முடியட்டும்!

புகையிலைக் கிழவி சொன்ன வீடு. ராமநாதன் ஹிண்டு பேப்பரில் க்ளாஸிஃபைட் அட்வர்ட்டைஸ்மெண்டை மேய்ந்துகொண்டிருந்தார். சதீஷ் உள்ளே நுழைந்ததைப் பார்த்து 'இவன் ஏன் இங்கே'யைப் பார்வையில் கலந்தபடி சற்றே எழுந்தாற் போல் உட்கார்ந்தார்.

சதீஷின் பல விசாரணைகளுக்கும் கிடைத்த ஒரே பதில் — ''எங்களுக்கு ஒண்ணும் தெரியாது சார். அவ வேலைக்குச் சேர்ந்து மூணு மாசந்தான் ஆறது... பொதுவா நல்லவ....''

''சரி, ராமநாதன், வரட்டுமா...''

''இன்ஸ்பெக்டர் மாமாவுக்கு டாட்டா சொல்லுடா மனோஜ்.... அந்தக் கையிலே சொல்லுடா'' பேப்பர் சுருள் கத்தியை இடது கைக்கு மாற்றி வலது கையில் டாட்டா சொன்னான் மனோஜ்.

குடிசைக்காரிக்கு சயனைட்? எப்படி சாத்தியம்? போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் சதீஷுக்குப் பிரச்னைகளைமொத்த வியாபாரி போல் லாரியில் அனுப்பியது. முக்கியமான விஷயம் — இறந்தவளின் வயிற்றில் இரண்டு மாத வளர்ச்சி வேறு! 'நிச்சயமாக அது கொலைதான்....'

''ஹாய் ஜகன் எப்படிடா இருக்கே?''

''வாடா, இன்ஸ்பெக்டர், எங்கே ரொம்ப தூரம்?''

''சும்மாத்தான். யூஷுவல் ரொட்டீன் லேயிருந்து கொஞ்சம் விலகி ரிலாக்ஸ் பண்ணலாம்னு... இதென்ன புதுசு புதுசா புக் ஷெல்ஃபிலே குண்டு குண்டா நியூ அடிஷன்ஸ் ''

''எல்லாம் ஒரு புது இன்ட்ரஸ்ட், சதீஷ். ஃபோட்டோகிராஃபிக் சொஸைட்டியிலே மெம்பரானேன். கேமரா, வீட்டிலேயே ஒரு டார்க் ரூம், எக்விப்மெண்ட்ஸ், அது சம்பந்தமான புக்ஸ் அவ்வளவுதான்.''

புக் ஷெல்ஃபின் பக்கம் போனான் சதீஷ். ஃபோட்டோகிராஃபிக் தியரி, — ப்ரின்ஸிப்பிள்ஸ்.... இப்படிப் பல. தனக்குத் தெரிந்த ஒரு வார்த்தையாவது இதில் இருக்கிறதா? சதீஷ் ஒரு புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டினான். இன்டெக்ஸ் — 'சயனைட், பொட்டாசியம் சயனைட், பி.213.'

குடிசை. இறுகிய சதை. தோளுக்கு மேலே ரவிக்கையிலிருந்து விலகி விடுபட்ட வெண்மையான காஸ்ட்லி ப்ரா ஸ்ட்ராப். இவ்வளவு ஃப்ளாஷ் பேக்குக்கும் மூல காரணம் 'சயனைட், பி. 213'.

''ஏய், சதீஷ், அதிலே என்ன இ.பி.கோவைத் தேடறியா ....''

''இல்லே ஜகன், சீக்கிரமா இங்கே வா. 213ம் பக்கத்திலே எனக்கு வேண்டிய விஷயம் இருக்கும் போல இருக்கு.''

''ஏண்டா, நீயும் ஏதாவது கேமரா, மேரா வாங்கப் போறியா''

''டேய், விளையாடாதேடா, சயனைட் பத்தி இப்ப நான் சீக்கிரமா இந்த புக்



மூலமாக் கொஞ்சம் விஷயம் தெரிஞ்சுக்கனும்....''

''பொட்டாஷியம் ஸயனைட் — டெட்லி பாய்ஸன். ரொம்பவும் ஜாக்கிரதையா ஹாண்டில் பண்ணனும். ஃபோட்டோபிலிம் பேப்பர்— இதிலெல்லாம் மேலே பூசற கலவையை, அதான்... எமல்ஷனைக் கரைச்சி அதிலே இருக்கிற வெள்ளியின் அளவையைக் கண்டுபிடிக்கப் பயன்படும். அப்புறம்...ஆமா, சம்பந்தா சம்பந்தம் இல்லாம நீ என்ன சங்கீதஉபந்யாசம் மாதிரி நான் சொல்றதையெல்லாம் கேட்டுக்கிட்டே இருக்கே?''

ராமநாதனின் குழந்தை, வலமிருந்து இடம் மாற்றிய பேப்பர் சுருள் கத்தி—கருப்பும் வெப்புமான ரோல் ஃபிலிம் சுற்றும் பேப்பரினாலான சுருள் கத்தி..... சதீஷின்மூளை போட்டி போட்டுக்', கேள்விகள் கேட்க ஆரம்பித்தது.

''ஃபோட்டோக்ராஃபியிலே இன்ட்ரஸ்ட் இருக்கிறவங்களுக்கும் சயனைடுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமா, ஜகன்?''

''அவசியம் இல்லே. இருந்தாலும் சான்ஸ் இருக்கு.''

''ஓ.கே. ஜகன். ஸ்டேஷனுக்கு ஒரு நிமிஷம் போகலாம்.''

ஸ்டேஷனில்—

''ஜகன், இந்த ரோல் ஃபிலிம் டப்பாவைப் பார் இது எந்த மேக் தெரியுமா?''

''இது ஃப்ரான்ஸ்லே தயாரானது சதீஷ்.''

சதீஷ், ஜகன் இரண்டு பேரையும் வீட்டின் உள்ளே வரவேற்றார், ராமநாதன். காப்பி கொடுத்தாள் அவருடைய மனைவி.

''வா, ஜகன், உள்ளே போய்ப் பார்க்கலாம். உனக்கும் உபயோகமா ஏதாவது ஐடியாஸ் கிடைக்கும், வாங்க ராமநாதன் சார்....' — சதீஷ் தொழிலில் தீவிரமானான்.

ராமநாதனுக்கு வயிற்றில் மிக்ஸி அரைக்க ஆரம்பித்தது.

''இந்த ஸெல்ஃப் ஸெட் என்ன மேக்? டெவலப்பிங் எல்லாம் எங்கே?'' ஜகன் அவரைக் கேள்விக் கடலில் மூழ்கடித்த போது—

சதீஷ் திறந்த ஒரு டிராயில் அந்த வேலைக்காரி, விதம் விதமான — (உடைகளில் அல்ல) உடையே இல்லாமல் விதவிதமான போஸ்களில், கற்பனைக்கு வேலையே இல்லாமல்.


ராமநாதனைச் சுற்றி அந்த அறை ரங்கராட்டினமானது. அவருடைய காமிராவைத் திறந்ததும், ஜகன் அதிலிருந்த காலி ஸ்பூலைப் பார்த்துசதீஷிடம் சந்தோஷமாகப்போனான்.

''சதீஷ், ஸ்டேஷன்லே காமிச்சியே ரோல் ஃபிலிம் டப்பா, அதுவும், ஃபிலிம் சுத்தப் பயன்படற இந்த ஸ்பூலும் ஒரே மேக். ஃபிலிமை மாத்திரம் கழுவ எடுத்தாச்சு. ஸ்பூல் நமக்காகக் காமிரா உள்ளேயேவெயிட் பண்ணியிருக்கு....''

இதற்கு மேலும் யோசிப்பதில் பயனில்லை என்பதனால்தானோ என்னவோ, ராமநாதனின் முகம் இறுகிற்று.

கொலைகாரனைக் கண்டுபிடித்த ஆனந்தத்தில் சதீஷ் ஜகனை அழைத்துக்கொண்டு வெளியேறினான்.

பிலிப்ஸ் நான்கு பாண்டு ரேடியோக்கள் இன்றுபோல் என்றுமே விளங்கிடும் இதன் சிறப்பு.



ஸ்கிப்பர் FM

- இந்தியாவின் முதன் முதல் நான்கு பாண்டு FM ரேடியோ
- 1000mW அவுட்புட்; 15 செ.மீ.x10 செ.மீ லவுட் ஸ்பீக்கர்
- மின்சாரத்தில் தடங்கல் ஏற்படின் எலெக்ட்ரோமாடிக் சுவிட்ச் ஓவர் மூலம் பாட்டரிக்கு மாற்றிக் கொள்ளும் வசதியுடையது மின்சார மாடல்

வாலியண்ட்

- 4 பாண்டு
- உள்ளே பாட்டரி எலிமினேட்டரை பொருத்தி மின்சாரத்தில் இயக்கலாம்

வழங்குவோர் பிலிப்ஸ். 50 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் இல்லங்களெங்கும் முழங்கும் நம்பகமான பெயர்

பிலிப்ஸ்

பைகோ எலக்ட்ரானிக்ஸ் அண்ட் எலக்ட்ரிகல்ஸ் லி.

CASPR-806-104 TAM

கருணைக்கடல்

அவர் வாழும் காலத்தில் நாம் வாழ்கிறோம். அவர் பாதம் பட்டுப் புனிதமடைந்த பூமியில் நாம் நடக்கிறோம். கருணைக் கடலென விளங்கும் அவர் கண்களைப் பார்க்கிறோம். பிறவிக் கடலைக் கடக்க மட்டுமின்றி இன்று நாம் சந்தோஷமாக வாழவும் வழி சொல்லும் அவரது ஞான போதனைகளைக் கேட்கிறோம். நமது பெரும் பாக்கியம் இது.

காஞ்சிப் பெரியவர்—

வேத வியாசரைப் போன்ற மகரிஷி.

வியாசரை நாம் கண்ணால் பார்க்க முடியாது. நாராயணனையோ பரமேசுவரனையோ பிரத்யட்சமாகக் காண்பது நமக்கு இயலாத காரியம். அந்த ஆற்றல் பிரகலாதன், கஜேந்திரன், வியாசர், தியாகபிரும்மம் போன்ற பரம பக்தர்களுக்கே' உண்டு.

நமது பரமாச்சாரியாளுக்கும் உண்டு.

ஆனால் அவர் இன்றுள்ள வேறு பலரைப் போல் தாம் ஆண்டவனைப் பார்த்துப் பேசியதாகக் கூறிக் கொள்வதில்லை.

'பிறரை மகிழ்வித்தால் நீயும் ஆனந்தமாய் வாழலாம்' என்று கற்றுத் தருகிறார். தாமும் அவ்வாறே வாழ்ந்து காட்டுகிறார்.

'இவனைக் காப்பாற்றவே முடியாது. இவனுக்கு உய்வே கிடையாது' என்று இவர் யாரைப் பற்றியும் நினைப்பதில்லை. கடந்தகால ஞானிகள் பலரைப்போல இவரும் இவ்விஷயத்தில் கருணையே வடிவாய் இருக்கிறார்.

அவரது ஆசிகள் யாருக்கும் மறுக்கப் படுவதில்லை. கிரேக்க அரசியானாலும் சரி, பிரதமர் இந்திரா காந்தியானாலும் சரி, எளியவரினும் எளியவராயினும் சரி, அனைவருக்கும் அவரது அருட் கடாட்சம் உண்டு. அவரைத் தரிசிக்



பின் அனைவரும் அவர் நினைவாகவே இருப்பது மட்டுமின்றி மனம் இலேசாகியும் திரும்புகின்றனர்.

'பகவான்' என்று அழைக்கப்படுவதைப் பெரியவாள் விரும்புவதில்லை. அற்புதங்களைத் தாம் நிகழ்த்துவதாகக் கூறுவதில்லை. ஆனாலும் லோக க்ஷேமத்துக்காக அவர் செய்யும் பூஜைகளின் பலனை, அவரிடம் ஆறுதலும் விமோசனமும் வேண்டிச் சென்ற ஆயிரக் கணக்கானவர் பிரத்யட்சமாக அனுபவித்திருக்கின்றனர். பெரியவாள் அருளால் தங்கள் கஷ்டங்கள் விடிந்ததைக் கதை கதையாகச் சொல்கிறார்கள்.

அவர் திரிகால ஞானி என்பதில் ஐயமில்லை. ஆனால் தமக்குள்ள சக்திகளைப் பற்றி அவர் பேசுவதே இல்லை. மனித குலம் முழுவதற்குமாகப் பிரார்த்திக்கிறார்; ஆசி நல்குகிறார். அதோடு சரி.


அவர் பெருமைகள் அனைத்திலும் தலையானது அவரது பரந்த மனப்பான்மை. சாசுவதஉண்மையை நாடிய ஞானிகள் யாவரும் அவருக்குச் சம்மதமே. ஆதி சங்கரரைப் போலவே இவருக்கும் இறைவன் ஒருவனே. பஜகோவிந்தம், மூக பஞ்ச சதி, ஸ்ரீராம ஜெயம் எழுதுதல், நமசிவாயம் ஜபித்தல்; ஆழ்வார்கள், நாயன்மார்கள் எல்லாருமே அவருக்கு முக்கியம்தான். பக்தி, ஞானம், கர்மா அனைத்தும் அவசியம்தான். நம்மிடையே நாம் செய்த பாக்கியத்தால் வாழும் பரமாசாரியருக்கு சமஸ்கிருதம், தமிழ் இரண்டுமே புராதனமானவை, புனிதமானவை.

அவர் போதனைகளை எண்ணிப்பார்ப்போம். அவை அனைத்தும் அவரது அளப்பரிய கருணையிலிருந்து பிறந்தவை என்பதை உணர்வோம்.

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம்:
குட்டிகிருஷ்ணன்
மேலட்டை புகைப்படம்:
டி. வி. கிருஷ்ணசாமி
வண்ணம் தீட்டியவர்: கல்பனா

● 'குளிர் விட்டுப் போச்சு' என்றால் பயம் போச்சு என்று அர்த்தம். நமக்குப் பயம் போக வேண்டும். பயத்தைப் போக்குபவன் ஈசுவரன்தான். குளிரை அவன்தான் போக்குகிறான். அவனுக்குப் பரம சீதளமான உபசாரங்களை யெல்லாம் பண்ணித் தாபத்திலே கொந்தளித்துக் கொண்டிருக்கும்படியான நம்முடைய உள்ளத்திலே, இருதயத்திலே அந்தக் குளிர்ந்த மூர்த்தியை வைத்து க்ஷண காலம் தியானம் செய்தால் போதும், நம்முடைய தாபங்கள் எல்லாம் நிவிர்த்தியாகி நம்முடைய உள்ளமும் குளிர்ந்து ஆனந்தமாக இருக்கும்.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்



ஆன்றோர் வாக்கு...

● ஒரு யோகியின் உள்ளத்தில் உண்மையறிவு எங்ஙனம் ஏற்படுகிறதோ, அதேபோல புத்தம் புதிய தளிர்கள் மரக்கிளையில் தோன்றுகின்றன. முனிவர்கள் இதயத்தில் பெண்ணாசை ஏற்படாதது போல் கடும் மழைக்குப் பின்னர்கூட களர் நிலத்தில் (உப்பு மண்ணில்) புல் முளைப்பதில்லை. ஆனந்தம் பேராசையை அழிப்பது போல் கதிரவன் பரந்து தேங்கியுள்ள தண்ணீரை உறிஞ்சுகிறான்.

—துளசிதாஸர்

● மணம் செய்துகொள்வதற்குப் பணம் தரவேண்டும் என்று கேட்கிற இளைஞனை மணக்கப் பெண் மறுத்துவிட வேண்டும். தன்னை மணக்க அவன் விதிக்கும் இழிவான நிபந்தனைகளுக்கு உட்படுவதைவிட, ஆயுள் காலம் முழுதும் கன்னியாய் இருந்து காலம் கழிக்கப் பெண்கள் மன உறுதி கொள்ள வேண்டும். இவ்விதமான மன உறுதியும் மறுப்பு உணர்ச்சியும் ஏற்படும் வகையில் பெண்களுக்குப் பெற்றோர் கல்வி அளிக்க வேண்டும்.

—மகாத்மா காந்தி

● தமிழ் மிகச் சிறந்த மொழியாக இருப்பதற்குக் காரணமே அது எந்தப் பிற மொழியையும் இகழாமல் எதிர்ப்பட்ட எல்லா மொழிகளையும் தழுவி வளர்ந்திருக்கிறது என்ற ஒன்றுதான். தமிழ் எந்தப் பிற மொழியையும் தன்னுள் அடக்கிக் கொள்ளக் கூடிய சரித்திரமும் இலக்கணமும் உடையது.


—நாமக்கல் கவிஞர்

● தனது அயல் வீட்டான் தன் அருகே பசித்திருக்க, வயிறார உண்பவன் உண்மையான இறை விசுவாசியாக இருக்க மாட்டான்.

-நபிகள் நாயகம்

● எதிர்காலத்தைப் பற்றி எதற்காகக் கவலைப்படுகிறாய்? நிகழ் காலத்தையே நீ சரியாக அறிய மாட்டாயே! நிகழ்காலத்தைக் கவனி, போதும்; எதிர் காலம் தன்னைத் தானே கவனித்துக் கொள்ளும்! —ரமண மகரிஷி

3 மாதத்திற்குப் போதுமான இரும்புச்சத்துடன் குழந்தை பிறக்கிறது



3 மாதம் ஆனபின், குழந்தைக்குத் தேவையான இரும்புச்சத்து பாலில் மட்டுமே கிடைப்பதில்லை.

இரும்புச்சத்து அதிகமுள்ள ::பாரெக்ஸ் கொடுங்கள்

"தாயிடமிருந்து ஏராளமான இரும்புச் சத்தைப் பெற்று குழந்தை பிறக்கிறது. பிறந்த பிறகு மெல்லமெல்ல இரும்புச் சத்தின் அளவுக் குறையத் தொடங்குகிறது. பால் நல்ல உணவாயிருப்பினும் இரும்புச் சத்துப் பற்றுக் குறையினால் அது முழுமையாவதில்லை. ஆகவே, குழந்தைக்கு இரும்புச் சத்து அடங்கிய திட உணவுத் தேவைப் படுகிறது."

—Dr. Subhash C. Arya "Infant & Childcare for the Indian mother"

டாக்டர்கள் ::பாரெக்ஸ். சிபாரிசு செய்யக் காரணம்?


குழந்தைக்கு திட உணவைத் துவங்குவதற்கு தனிப்படத் தயாரிக்கப் பட்டது ::பாரெக்ஸ்—குழந்தையின் இளம் ஜீரண சக்திக்கு ஏற்ப பக்குவம் செய்யப்பட்டது. இதில் விரைந்த வளர்ச்சிக்கான புரதச் சத்து; சக்திக்கான கார்போஹைட்ரேட், கொழுப்பு; எலும்புகளை திடமுடனும் பற்களை பலமுடனும் வளரச் செய்திடப் போதுமான கால்ஷியம், பாஸ்பரஸ், வைட்டமின்கள் உள்ளன. குழந்தையின் இரத்தத்திற்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அவசியமான இரும்புச்சத்தும் ஏராளமாக. அடங்கியது—::பாரெக்ஸ்.






டாக்டர்கள் சிபாரிசு செய்வது ::பாரெக்ஸ்
குழந்தையின் விரைந்த முழுவளர்ச்சிக்கு உன்னதமான திட உணவு

CASGLF-30-203 TAM


இவையும் பேசினால்...
கருத்து: எஸ். சந்திரமௌலி
ஃப்ரிட்ஜ்
இந்த ஸம்மர்ல அடிக்கடி 'கரண்ட் கட்'டாயிடுது. வேர்த்து ஊத்துது. ரொம்ப பேஜார்.
டெலிபோன்
ஹையா! நளினி வரா! ராஜேஷ் கூட பேசப் போறா! நமக்கு பதினேஞ்சு நிமிஷம் கிளுகிளுப்பு தான்.
பேனா
ஏன் சார்! ரொம்ப கஷ்டப்பட்டு எழுதறீங்க? இந்த கதையும் திரும்பித்தானே வரப்போகுது!
இஸ்திரிப்பெட்டி
டாக்டர் சார்! உடம்பு அனலா கொதிக்குது. ஏதாவது மருந்து கொடுங்களேன்.
ஊசி
அம்மா! இந்த டாக்டர் கொஞ்சமும் கைராசி இல்லாதவரு! எதுக்கும் கொஞ்சம் ஜாக்கிரதையாவே இருங்க.


மைக்
ஏனய்யா பேச ஆரம்பிச்சதுலேந்து எட்டு சோடா குடிச்சுட்டே! எனக்கு ஒண்ணு தரக் கூடாதா?
டி.வி
ஐயோ! தமிழ் டிராமாவா? அறுவை தாங்காம பாக்கறவங்க திட்டித் தீர்த்துடப் போறாங்க.
பஸ் டிக்கெட்
கண்டக்டரே! ஒனக்கு எத்தினி தடவை சொல்றது! டிக்கட்டைக் கிழிக்கும் போது எச்சில் தொடாதேன்னு சொன்னா புரியாது?
சார்! சார்! ராத்திரி லைட் இல்லாம தனியா இருட்ல நிக்க பயமா இருக்குது. ஒரு சின்ன மெழுகு வத்தி கொண்டு வந்து வையுங் களேன்.
விளக்குக் கம்பம்
பேனர்
ஜெயமாலினி போஸ்டர் தின்னு 'கிக்' இல்லீங்க. ஸ்மிதா போஸ்டர் தான் டக்கர்!

இனிமைக் கனவுகள்

மன்னார்குடி விசுவநாதன்



அந்தப் பள்ளியில் பணிபுரிய அவன் சேர்ந்து அன்றுடன் ஒரு வார மாகிவிட்டது.

அந்தக் கிராமத்தினுள் 'அப்பாயின்ட் மெண்ட் ஆர்டரை எடுத்துக் கொண்டு வியர்க்க விறுவிறுக்கநுழைந்த அவனைவழியில் பார்த்த சிறுவர்கள் சிலர், ''எங்கே போறீங்க பள்ளிக்கூடத்துக்கா? இன்னைக்குப் பள்ளிக் கூடம் லீவ. எல்லா வாத்தியாரும் டவுனுக் குப் போயிட்டாங்க'' என்று வழி மறித்துச் சொன்னதைக் கேட்ட குமாரன் முகம் சுளித்துக் கொண்டே நின்று விட்டான்.

''எதிர்பாராத விதமாக இன்னைக்குப் பள்ளிக்கூடத்திலே உள்ள நான்கு டீச்சர்களிலே மூணு பேருக்கு சென்ஸஸ் டூட்டி போட்டிருக்காங்க. மீதி ஒருத்தர் லேடி டீச்சர். பாவம்... அந்தம்மாவாலே தனியாப் பள்ளிக்கூடத்தை நடத்த முடியாதுன்னு நான் இன்னிக்கு விடு முறை விட்டுட்டாங்க...''

''ம்.... அப்ப பள்ளிக்கூடத்திலே யாருமே இருக்க மாட்டாங்களா?'' என்று சற்றே வெறுப்புடன் கேட்டான் குமாரன்.

''ம்.... அந்த லேடி டீச்சர் மேரி மட்டும் இருப்பாங்க... பாவம்... அவங்களுக்குப் பள்ளிக்கூடத்தை விட்டா வேறேகதியேஇல்லே.''

அந்த இளைஞன் சொன்ன வார்த்தைகளின் பொருளை முழுதுமாகப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் குமாரன் தனது கால்நடைப் பயணத்தைத் தொடர்ந்தான்.

உடம்பு முழுதும் வியர்வை ஆறுகப் பெருகி வழிந்தோட, அந்தப் பள்ளிக் கட்டிடத்தினுள்போய் நுழைந்தான் குமாரன்.

நான்கைந்து பிள்ளைகள் உட்கார்ந்து ஏதோ பாடம் எழுதிக் கொண்டிருந்தார்கள்.

நாற்காலியில் உட்கார்ந்தவாறு ஏதோ பாடப் புத்தகத்தை ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தாள் மேரி.

அவளுக்கு வயது முப்பது இருக்கலாம். மாநிறம்தான். ஆனாலும் கவர்ச்சிகரமான தோற்றம். இன்னும் திருமணம் ஆகவில்லை என்றுதான் தெரிகிறது.

பரஸ்பரம் அறிமுகம் முடிந்த பின், மேரி, ஒரு பையனை அனுப்பிப்பக்கத்திலிருந்த டீக் கடையிலிருந்து டீ வாங்கி வரச் செய்து அவனைக் குடிக்குமாறு வற்புறுத்தினாள்.

''ஹெச். எம். இல்லே போலிருக்கே... நான் இன்னிக்கு 'ஜாயின்' பண்ணிடலாமா?'' என்று கேட்டான் குமாரன்.

''ஹெச். எம். இல்லேன்னாலும் நீங்க ஜாயின் பண்ணிடலாம். ஆனால் இன்று விடு முறை நாள் என்று அறிவித்தாகி விட்டது. அதனாலே நீங்க நாளைக்குத்தான் ஜாயின் பண்ண முடியும். ஹெச். எம். கூட அப்படித் தான் சொல்லிட்டுப் போனாங்க.''

''நான் மேனேஜ்மெண்டிலே நாலு வருஷம் ஒர்க் பண்ணியிருக்கேன். நேத்து சாயந்திரம் ரிலீவிங் ஆர்டர் வாங்கிட்டேன். இன்னிக்கு எப்படியும் 'ஜாயின்' பண்ணிட்டா சர்வீஸ் தொடர்ச்சி கிடைக்கும்னு சொன்னாங்க....'' — தயங்கியவாறே சொன்னான் குமாரன்.

''நீங்க பார்த்த மேனேஜ்மெண்ட் வேலையோட சர்வீஸ் இந்த யூனியன் சர்வீஸோட சேராது சார்.... பென்ஷன், கிராஜுவடி— இதுக்கெல்லாம் 'கவுண்ட்' ஆகுமே தவிர சர்வீஸ் தொடர்ச்சிக்கு அது எடுபடாது. யாரோ உங்களுக்குத் தவறான தகவல் கொடுத்திருக்காங்க....''

சிறிது நேரம் நின்றவாறே குழம்பினான்.

பிறகு பிள்ளைகளைப் போகச் சொல்லிவிட்டு மேரியும் குமாரனும் பள்ளிக்கூடத்துக்கு வெளியே வந்து மேலோட்டமாகக் கிராமத்தை ஒரு சுற்றுச் சுற்றினார்கள்.


''உண்மையில் கிராம வாழ்க்கை ரொம்ப அமைதியானதுதான். மனத்துக்கு இதமானது தான்'' என்றான் குமாரன்.


'பேசாம இங்கேயே செட்டில் ஆயிடுங்களேன்'' என்றாள் மேரி.

அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தவாறே, ''ஓ... ஐ ஆம் ஸாரி... நான் ஒரு பிரம்மச்சாரி. அப்பா அம்மா சொந்த ஊரை விட்டு இங்கேவர மாட்டாங்க'' என்றான்.

மேரிஅவளைஒரு மாதிரியாகப் பார்த்தாள்.

தினம் இருவரும் பஸ்ஸுக்கு ஒன்றாகச் செல்லத் தொடங்கினர். அன்றும் அப்படி நடந்து சென்று கொண்டிருந்தார்கள்.





''மேரி.... நீங்க தினமும் பஸ் ஏறிக் கும்பகோணம் போறீங்க .. நான் தினமும் பஸ் ஏறித் தஞ்சாவூர் போகிறேன். நாம் போகின்ற பாதைகளின் திசைகள் வெவ்வேறாக இருந்தாலும் நமது எண்ணங்கள் ஒன்றாகத்தான் இருக்கும் என்று நான் திடமாக நம்புகிறேன். என்ன...என்நம்பிக்கை சரியானதுதானே?''

திகைப்புடன் ஏறிட்டாள் மேரி.

''இந்தக்காலத்தில் கணவனும் மனைவியும் சேர்ந்து சம்பாதித்தால் தான் காலம் தள்ள முடியும். அதனால்.... நீங்கள் சம்பாதிப்பதால் நான் உங்களைத் திருமணம் செய்து கொள்ளத் தயாராக இருக்கிறேன்.''

மேரி சிறிது நேரம் தயங்கி நின்றுவிட்டுக் கேட்டாள்: ''ஏன்... உங்கள் சொந்தத்தில் வேலை பார்க்கும் பெண் யாரும் கிடைக்கவில்லையா?''

''இல்லை. பொதுவாக எங்கள் சொந்தத்தில் எல்லாம் பெண்களை அதிகம் படிக்க வைப்பதே அரிது. அப்படியே படிக்க வைத்தாலும் வேலைக்கு அனுப்புவது அதைவிட அரிது.''

''சரி... நான் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவள் என்பது தெரியுமா?''

''தெரியும். நீ சரியென்று சொன்னால் நான் உங்கள் மதத்தில் சேர்ந்துவிடத் தயா

ராக இருக்கிறேன்.'' — மிகவும் உரிமையுடன் அவனிடம் பேசத் தொடங்கினான்.

''என் அம்மாவுக்குக்கூடக் கொஞ்சம் உடம்பு சுகமில்லே. பத்து நாள் லீவு போடலாம் என்று நினைக்கிறேன். லீவு முடிந்து வந்ததும் என் முடிவைத் தெரிவிக்கிறேன்'' என்றாள் மேரி.

சிரித்துக் கொண்ட அவன், ''மேரி... நீ சொல்லப்போகும் முடிவு நல்ல முடிவாக இருக்கட்டும்....'' என்றான்.

பதினோராம் நாள்அவள் பள்ளிக்கு வந்தாள்.

வகுப்பு நேரம் எப்பொழுது முடியும் என்று துடித்துக் கொண்டிருந்தான் சுகுமாரன்.

வெளியே வந்தவுடன் அவளை நெருங்கி, ''மேரி.... நான்கூட எங்கள் ஊர் பிஷப்கிட்டே கேட்டேன்... என்னை முறைப்படி சர்ச்சிலே வைத்துக் கிறிஸ்தவ மதத்திலே சேர்த்துக்கிறதாச் சொல்லிட்டாரு...'' என்றான்.

மேரி மெல்ல வாய் திறந்து பேசினாள்: ''மிஸ்டர் சுகுமார்... நாம் வாழ்வின் சிறப்பு மற்ற எவருடைய கண்ணீரிலும் அமையக் கூடாது. நம் மகிழ்ச்சி மற்ற எவருடைய வேதனையிலும் தோன்றக் கூடாது. இது பொதுவான தத்துவம். இந்தத் தத்துவத்திலே உங்களுக்கு நிச்சயம் நம்பிக்கை இருக்கும்னு நான் நம்பறேன்...''

''ஓ.... அதனால் என்ன... அது வந்து மேரி.... நீ சொல்வது உண்மைதானே... அதிலே என்ன தப்பு'' — கொஞ்சம் தடுமாறினான்.

''தப்பு ஒன்றும் இல்லே.... நாளைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே... காலையிலே என் வீட்டுக்கு வந்துடுங்க. எங்க அப்பாவும் அம்மாவும் உங்க கிட்டப் பேசணும்னு சொன்னாங்க.... அப்புறம் எங்க வீட்டிலேயே ஒரு நல்ல முடிவு எடுத்துடலாம்... ஓ.கே...''

சுகுமாரனுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

''ஓ.கே. மேரி... நாளைக் காலை நிச்சயம் நான் அங்கு வந்து விடுகிறேன். முடிவுகள் நல்ல முடிவாகவே இருக்கட்டும்'' என்று சொல்லிவிட்டு முன்னதாக வந்த பஸ்ஸில் ஏறிக்கொண்டு புறப்பட்டான் சுகுமாரன்.

அவன்: ஏண்டா பாஸ்கர! உன்னைச் சும்மா கோட்டா பண்ணிட்டிருக்காரே உங்க வீட்டுக்கு விருந்தாளியா வந்திருக்கும் உங்க மாமா, அவர் எங்கிருந்து வந்திருக்கார்?

பாஸ்கரன்: ஸ்ரீ ஹரி கோட்டாவிலிருந்து!

கே. ஆர். எம்.



அவன் நெஞ்சு நிறைய இனிமைக் கனவுகள் குதியாட்டம் போடத் துவங்கியது.

மேரியின் வீட்டினுள் நுழைந்த சுகுமாரனுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது.

மேரியின் தாய் ரோசியும் தந்தை தாமசும் அவனை அன்புடன் வரவேற்றுப் பேசினார்கள்.

மேரியைக் காணவில்லை.

''ஞாயிற்றுக் கிழமைகளில் மேரி தவறாமல் 'சர்ச்'சுக்குப் போவது வழக்கம். இப்ப... இன்னும் கொஞ்ச நேரத்திலே வந்துடுவா... அதுக்குள்ளே நாம சில விஷயங்களை மனம் விட்டுப் பேசிக் கொள்வது நல்லதுன்னு நினைக்கிறேன்.'' மேரியின் தந்தை தாமஸ்தான் பேசினார்.

''ஓ.... தாராளமாகப் பேசிக் கொள்வோமே'' என்றான் சுகுமார்.

ஒரு படத்தின்மீது அவன் பார்வை பட்டபோது மின்சார அதிர்ச்சி ஏற்பட்டது அவனுக்கு.

''சார்..... அது..... அந்தப் படத்திலே இருக்கிறது... மேரிதானே...''

''ஆமாம் தம்பி... அது மேரிதான்! அவ பக்கத்திலே நிக்கறது அவ புருஷன் ஜார்ஜ்... பக்கத்திலே நிக்கிற குழந்தை ரூபி அவங்களோட ஒரே குழந்தை.....''

தாமஸ் சொன்னதைக் கேட்டதும் சுகுமாரனின் அதிர்ச்சி மேலும் பன்மடங்காகப் பெருகியது.

''தம்பி, எப்பவும் உண்மையே பேசணும்! அதுவும் இது ... இதிலே ஒளிவு மறைவுக்கே இடம் இருக்கக் கூடாது. அதாவது தம்பி... மேரிக்கும் ஜார்ஜுக்கும் ஐந்து வருடங்களுக்கு முன்பு கல்யாணம் நடந்துச்சு. நாலு வயசிலே அவங்களுக்கு இப்ப ஒரு குழந்தையும் இருக்கு.... ஆறு போன வருஷம் ஜார்ஜ் இறந்து போயிட்டான்..... ''

''ஓ... மை காட்.....''

''ஆமாம். ஜார்ஜ் ஒரு ராணுவ வீரன். பயிற்சி விமானத்திலே போய்க்கிட்டிருந்தப்ப எதிர்பாராத விபத்து... இறந்து போயிட்டான்.... என் மகள் விதவை ஆயிட்டா.''

சில நிமிடங்கள் வரை அங்கே பயங்கர மௌனம் நிலவியது.

''சார்.... எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லே. மேரி விதவையாக இருந்தாலும் சரி, நான் சீர்திருத்த உணர்வுகளோடு அவளைத் திருமணம் செய்து கொள்ளத் தயாராக இருக்கிறேன்.... அதுமட்டுமில்லே. குழந்தை ரூபியை என் குழந்தையாகவே கருதி வளர்க்கிறேன்....''

வெளியே யிருந்து உள்ளே நுழைந்த மேரி, அவன் சொன்னதைக் கேட்டுக் கைதட்டி ஆரவாரம் செய்து கொண்டே வந்தாள். கூடவே அவள் மகள் ரூபியும் வந்தாள்.

''மிஸ்டர் சுகுமார்... உலகத்திலே மனித மனம்தான் எப்படி யெல்லாம் மாறிப் போயிடுது... என்னாலே நம்பவே முடியலே. வர்ற வழியிலே ஒரு தகராறு. தன் கையிலே இருக்கிற சுவையான கனியைச் சுவைக்காமல் அடுத்த வீட்டுக்காரன் தோட்டத்தில்

"यस्मिन्देशेहि यो जातः तस्मै तज्जौषधं हितम् ॥"

"எந்த தேசத்தில் (சீதோஷ்ண நிலையில்) எவன் பிறந்திருக்கிறானோ அவனுக்கு அந்நாட்டு மூலிகைகளே சிறந்த பலனை அளிக்கும்."

—(சரகஸம்ஹிதை)



கும்பகோணம் "லலிதா பார்மஸி" மருந்துகளின் சிறப்பு அம்சங்கள்

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட பகவான் ஸ்ரீ தன்வந்திரியின் ஸன்னதியில் மருந்துகள் தயாராவது.

பல வருஷங்கள், முறைப்படி "ஆயுர்வேதத்தை" அத்யயனம் செய்த நிபுணர்களின் நேர்பார்வையில் மருந்துகள் தயாராவது.

எந்த மருந்தையும் எளிதில் முறைப்படி தயாரிக்க உதவியாகப் பல உயர் வைத்ய நூல்கள் கொண்ட புத்தகசாலை, சிறந்த மூலிகைசாலையுடன் இணைந்து விளங்குவது.

★

சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு

லலிதா பார்மஸி

(ஸ்தாபிதம் 1942)

தலைமை ஆபீஸ் :

கும்பகோணம் Pincode: 612001

போன் : 123

DRUG LICENCE No. 40/78

(மத்திய அரசால் சட்டுத் தொகைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

கிளைகள்

மஹாதானத் தெரு, மாயூரம் 609001

போன் : 379

வடக்கு வீதி, சிதம்பரம் - 608001


நெ. 39, ரங்கநாதன் தெரு,
சென்னை - 600 017

போன் : 441454

நெ. 105, கச்சேரி ரோடு,
சென்னை — 600 004

போன் : 73007

கடிதம் மூலம் வைத்திய ஆலோசனை பெற விரும்புவோர்கள்
35 பைசா தபால் தலையுடன் தலைமை அலுவலகத்திற்கு எழுதக் கோருகிறோம்.
(கடிதங்கள் ரகசியமாக வைக்கப்படும்.)



கிருமிகளற்ற குடிநீருக்கென உன்னத போரஸ் சக்தி வாய்ந்த கேண்டில்

நீரைத் தூய்மைப் படுத்துகிறது.
நீங்கள் ஆரோக்கியத்தைப்
பாதுகாக்கையில்...

தூய்மையான கிருமிகளற்ற குடிநீருக்கென பஜாஜ். உன்னத போரஸ் சக்தி வாய்ந்த கேண்டிலை உபயோகிக்கிறது. எளிதில் மாற்றலாம். முறையாக தூய்மைப் படுத்த எளிதில் கழற்றவும் செய்யலாம்.

பஜாஜ் வாட்டர் ஃபில்டர்கள் பலரக சைஸ்களிலும் கொள்ளளவுகளிலும் கிடைக்கிறது. எந்தக் குடும்பத்திற்கும் ஏற்றது. மிகக் கடுமையான விதிகளின்படி தயாரிக்கப் படுகின்றன...பஜாஜின் சொந்த கடுமையான விதிகள் உட்படத்தான். திறமைமிகு தரக் கட்டுப்பாட்டின் பின்பலம் கொண்டது. 3500 விற்பனையாளர்கள் கொண்ட திறமை வாய்ந்த அணி உண்டு— உடனடி விற்பனைக்குப் பின் சேவைக்கென... ஆம். இந்தியாவில் எங்கிருந்தாலும். இவை போன்ற காரணங்கள்தான் அபிமானமிக்க தலைமையிடத்தை பஜாஜ் வகிக்க உதவுகின்றன.

சிறந்ததையே வாங்குவீர் bajaj பஜாஜ் வாங்குவீர்

அணில் கடித்துச் சிதைந்து கீழே விழுந்து கிடக்கும் கனியைத் தின்ன ஒருவன் போட்டி போட்டுக் கொண்டிருந்தான். அந்த விநோத மனிதனின் விபரீத ஆசையைப் பார்த்து அதிசயித்துக் கொண்டே வந்தேன்.'' என்றாள் மேரி.

'இவள் இப்பொழுது எதற்காக இந்தக் கதையைப் பற்றி இங்கே சொல்கிறாள்?' என்று புரியாமல் விழித்தான் சுகுமாரன்.

திரைச்சீலையை விலக்கிக் கொண்டு நிர்மலாவும் அவளைத் தொடர்ந்து மூன்று வயது ரவியும் அங்கே ஹாலுக்குள் பிரவேசித்தார்கள்.

அவர்களை — அங்கே — அந்தச் சந்தர்ப்பத்தில் பார்த்ததும் துடித்துத் திகைத்துப் போனான் சுகுமாரன்.

''என்ன மிஸ்டர் சுகுமார்... ஆச்சரியமாக இருக்கிறதா? உங்கள் மனைவியையும் மகனையும் நீங்கள் இங்கே எதிர்பார்க்கவே இல்லை அப்படித்தானே? உங்களை — உங்கள் கொள்கையை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. கணவனும் மனைவியும் வேலை பார்த்தால்தான் இந்தக் காலத்திலே குடும்பம் நடத்த முடியும் என்றுசொல்கிறீர்கள்... கை நிறையச் சம்பாதிக்கும் உங்கள் மனைவியை அனாவசியமாகச் சந்தேகித்து ஒதுக்கிவைத்து விவாகரத்துநோட்டீஸ்கொடுத்திருக்கிறீர்கள் வேண்டுமென்றே மானேஜ்மெண்ட்வேலையை விட்டுவிட்டு யூனியன் வேலைக்கு வந்து சேர்ந்த போதே உங்களைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தேன்.''

''மேரி... உனக்கு உண்மை புரியாது. அவள் நர்ஸ் வேலை பார்க்கிறாள்... யாரோ ஒரு நோயாளியுடன் இரவு பகல் என்று பாராமல்.....''

''சட்! நிறுத்துங்கள்... நான் கூடத்தான் உங்களைப் போன்ற ஆண்களுடன் பள்ளியில் நெருங்கிப் பழகுகிறேன். அதனால் என்ன குடியா முழுகிப் போய்விட்டது? நர்ஸ் என்றால் செவிலித்தாய் என்று தமிழில் பொருள். ஒவ்வொரு நோயாளிக்கும் நர்ஸ் தாய் போன்றவள். அருவருப்பு,முகச் சுளிப்பு களைப்பு, சோர்வு எதுவும் இல்லாத மிக உயர்ந்த பண்பு கொண்டவர்கள் அவர்கள். அவ்வளவு ஏன்? நீங்கள் சந்தேகப்பட்ட நோயாளி வேறு யாருமில்லை மிஸ்டர் சுகுமார்... என் கூடப் பிறந்த அண்ணன் வில்லியம்தான். புற்று நோயாளியான அவன் உங்கள் மனைவியிடம் தவறாக நடந்திருப்பானா?... அதோ பாருங்கள்... படமாகத் தொங்குகிறான் என் அண்ணன்...''— கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அப்படியே தரையில் உட்கார்ந்து விட்டாள் மேரி.

''மேரி.... என்னை மன்னித்துவிடு'' என்றான் சுகுமாரன், கண்களில் கண்ணீர் மல்க!

''மன்னிப்புக் கேட்க வேண்டியது என்னிடம் இல்லை.'' என்றாள் மேரி.

ரவியைத் தூக்கிக் கொண்டு, நிர்மலாவின் கரத்தைப் பற்றியவாறு வெளியே நடந்த சுகுமாரனின் நெஞ்சில் மேரி மிகவும் உயர்ந்து நின்றாள்.

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி '82



முதல் பரிசு	**ரூ. 1000**
இரண்டாவது பரிசு	**ரூ. 500**
மூன்றாம் பரிசு	**ரூ. 500**

(இரு கதைகளுக்குத்தலா ரூ. 250வீதம்)

ஆக மொத்தம் ரூ. 2000 பரிசுகளாக வழங்கப்பெறும்.

- தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 100 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.
- கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும்வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தரவேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.
- முடிவு தேதி ஜூன் 15.
- உறையின்மேல்'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாதகதைகளை திரும்பப் பெறப்போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருத்தல் நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர், கல்கி, சென்னை-600 032

தேவை ஒரு பார்வை!

ஆர். பி. சாரதி

இரு......க்லகுக!

ஆம்! தமிழ் நாட்டை மட்டுமல்ல... இந்தியாவை.... ஏன், இன்னும் சொல்லப்போனால் பத்திரிகை படிப்பவர்கள் உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் அத்தனை மூலைகளிலும் அதே 'கலக்'.....!

இத்தனைக்கும் 'நங்கையர் உலக'த்தில் மட்டும்தான் விளம்பரமாக வந்திருந்தது!

மாதர் சங்கக் கண்டனங்கள்... தீர்மானங்கள்... ஆசிரியருக்குக் கடிதங்கள்... இவ்வளவு பரபரப்பை ஏற்படுத்தியது அந்த ஐந்தாறு வரி விளம்பரம்தான்.

''தலையில் வழுக்கையும், கண்ணில் குழியும், நான்கே பற்களும் விழுந்த 50 வயது எழுத்தாளர் விசாகனுக்கு 25 வயதுள்ள அழகிய நிரந்தர வருமானமுள்ள மணமகன் தேவை. புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும் அழைக்கப்படுபவர்க்கு மட்டும் நேர்முகம். அறை எண் 27, ஸ்ரீராம் லாட்ஜ், சென்னை-5, த. பெ. எண் 999. விண்ணப்பிக்க — மணக்க' இசையும் காரணத்துடன்.''

பத்தோடு பதினொன்றாக இத்திருமண விளம்பரத்தை ஒதுக்கித் தள்ளிவிட முடியாததற்குக் காரணம் எழுத்தாளர் விசாகன் அப்படி ஒரு விளம்பரத்தை வெளியிட்டிருந்தது தான்!

'அவர் எழுதப் போகும் மர்மக் கதைக்கு ஒரு விளம்பரமாக இருக்கும்...'

'நகைச் சுவைக் கதையாக இருக்கலாம்...' இப்படியும் சில ஊகங்கள்.

இத்தனை அமர்க்களத்தையும்செய்து விட்டு ஒன்றுமே நடக்காதது போல் அந்த ஓட்டல் அறையில் மேஜை முன்னே அமர்ந்து கொண்டு சுவாரஸ்யமாகப் புகையிலையைக் குதப்பிக் கொண்டிருந்தார் விசாகன். அவர் எதிரே கட்டுக் கட்டாகக் கடிதங்கள்....

ஆனால் அவர் தேர்ந்தெடுத்த தேவிகா குறிப்பிட்டிருந்த காரணம்.... அதுதான் அவளைத் தேர்ந்தெடுக்கவே அவரைத் தூண்டியது.

''இனிமேல் இப்படி எந்த ஆணும் தைரியமாக இப்படி ஒரு திருமணத்தைச் செய்து கொள்ள முன்வரக் கூடாது என்பதை நிலைநாட்ட.''

விசாகன் அதைத் திரும்பத் திரும்பப் படித்தார்.

புகைப்படத்தையும் பார்த்தார்.

அழகான முகம், விசாலமான நெற்றி... கூர்மையான விழிகள்... எடுப்பான மூக்கு...

பி.காம் பட்டதாரி. ஸ்காலர்ஷிப் உதவியால் படித்தவள்.... பாங்கில் வேலை... எண்ணூறு ரூபாய் சம்பளம்.... ஏழைக் குடும்பம்தான்.

தகப்பனார் ஓய்வுபெற்ற ஆசிரியர். தாயார் ஓய்வு பெறாத நோயாளி... மைனஸ் இரண்டு படித்துக் கொண்டிருக்கும்... எட்டாவதில் முட்டியடிக்கும் தம்பி... அவனேதான் இப்படி எழுதியிருந்தான்.

அவளுக்கு மட்டும்தான் விசாகன் அழைப்பு அனுப்பியிருந்தார். அவளை எதிர்பார்த்துத் தான் அங்கே காத்துக் கொண்டிருந்தார்.



மணி 5–30. சரக்...சரக்...சரக்...செருப்பொலி அறையை நெருங்கிக்கொண்டிருந்தது.

''உள்ளே வரலாமா?'' பாதாம்கீர் குரலில் பச்சை மிளகாய் அரைத்திருந்தது.

''வித் பிளஷர்... வாருங்கள்!''

எதிரே நின்ற தேவதை... சாரி... தேவிகா போட்டோக்களின் பலவீனத்தைப் பறைசாற்றிக் கொண்டிருந்தாள். இதுவரை அவர் பேனாவோ அவர் கதைக்குப் படம் போடும் ஓவியர்களின் பிரஷ்ஷோ விவரிக்காத அளவுகள்.... அழகு....

''உட்காருங்கள்...''அவர் சொல்லவில்லை; அவளாகத்தான் உட்கார்ந்தாள்.

''உங்கள் தகப்பனார்....?''

''யாரும் உடன் வரவில்லை. தனியாக வர எனக்குப் பயமில்லை.'' – கைப் பையைத் துழாவி இரண்டு ஆப்பிள் பழங்களை எடுத்து மேஜை மீது வைத்தாள்.

'' பெரியவர்களையும் குழந்தைகளையும் பார்க்கப் போகும்போது வெறுங் கையுடன் போகக் கூடாது என்பாள் என் அம்மா.''

''நான் குழந்தையா, பெரியவரா?''

''குழந்தை ஆசை விடாத பெரியவர்!''

''என்னை உங்களுக்குப் பிடித்துப் போய் விட்டது.... உங்கள் மனைவிக்கு மகனுக்கு?''

''உங்களை யாருக்குப் பிடிக்காது? வரதட்சிணை... சீர் வரிசை... செலவு எதுவுமில்லை.

''எனக்கு ஒரே சந்தேகம்... என்னை நீ மணக்க விரும்பிய அல்லது சம்மதித்த காரணம்.....''

''நான் உங்களைப் படுத்தும் பாட்டில்... நீங்கள் கதறிக் கதறிக் கண்ணீர் விட்டுக் கதை கதையாய் எழுதினால் எந்த வயதான வருக்கும் இளம்* பெண்களைக் கல்யாணம் செய்துகொள்ளத் தைரியமே வராது.''

''ஐயய்யோ... நான் இப்போதே உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள மறுத்தால்?''

''உங்களை யாரும் கல்யாணம் செய்து கொள்ள விடாமல் தடுப்பது... கல்யாணம் செய்து கொண்டாலும் அவளிடம் சொல்லி யாவது உங்களை ஆட்டி வைக்கச் சொல்லி..''

''இதெல்லாம் கொக்குத் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பது போல... இதுவரை இரண்டாந் தாரம் மூன்றுந் தாரம் என்று கல்யாணம் செய்து கொண்டு படாத பாடு பட்டவர்கள் பல லட்சம் பேர் உண்டு. அவர்களை யெல்லாம் பார்த்துத் திருந்தாத என்னைப் போன்ற ஏமாளிகள் எத்தனையோ பேர் இருக்கத்தான் போகிறார்கள்.''

''பார்க்கலாம்.... நீங்கள் என்னை மணக்க விரும்பும் காரணம்?''

''என் மகன்... என் மனைவி....''

''பாகப்பிரிவினையா? சொத்துத்தகராறு?''

''சொத்தே இல்லையே தகராறு ஏது?''

''பின்....?''


''என் மனைவி... ஒரு கல்யாணம் கார்த்திகையைப் பார்த்துவிட்டுத்தான் கண்ணை மூடுவாளாம்.''

''ஏன், நீங்கள் உங்கள் மனைவியை வெளியில் கல்யாணம் கார்த்திகை பார்க்க அழைத்துப் போவதில்லையா?''

''இது ஜோக்கா? ஹி....ஹி....ஹி....''

''உங்கள் கல்யாணத்தையா பார்க்க விரும்புகிறீர்கள்? ... நோயாளியா? கைக்குழந்தை... சின்னஞ் சிறிக என்று....''

''ஐயய்யோ! அப்படி எதுவும் இல்லை.... ஒரே. பின்னை...பின்னை பிறக்கவேண்டிய வயது....''



''ஐயய்யோ பேரன் எடுக்கும் வயதிலா கல்யாண ஆசை?''

''என்ன செய்வது? என் மனைவிக்குக் கூடத்தான் பேரப் பிள்ளையைக் கொஞ்ச ஆசை.''

''அதற்கு என்ன? உங்கள் மருமகளுக்கு என்ன குறை?''

''மருமகளே வரவில்லை... அதுதான் குறை!''

''அதனால்தான் நீங்களே விளம்பரம் கொடுத்தீர்களா?''

''என்ன செய்வது? என் பையன் கல்யாணம் செய்து கொள்ள மாட்டானாம்!''

''ஏனாம்?''

''வேலை கிடைக்க வேண்டுமாம்!''

''கிடைக்காதா?''

''எப்படிக் கிடைக்கும்? எம்ப்ளாய்மென்டில் எழுதி வைத்து ஏழு வருடமாகிறது... பி.எஸ்.ஸி. பஸ்ட் கிளாஸ்... டைப், ஷார்ட்ஹேண்ட் ஹையர்....''

''வேலை கிடைக்கவில்லையா?''

''ஃபார்வர்ட் கம்யூனிடி.... மீனாட்சிபுரம் மதம் மாறுதல் மாதிரி ஷெட்யூல்ட் காஸ்ட் டிரைபா மாற வழி இருந்தால் மாறலாம்.''

''பிள்ளை கல்யாணம் செய்துக்க மறுத்ததனாலே நீங்க கல்யாணம் செய்துக்கிட்டு ஜனத்தொகையைப் பெருக்கி இன்னும் வேலை இல்லாத் திண்டாட்டத்தை....''

''ஹோல்டான்... ஹோல்டான்..நிறுத்து நிறுத்து... நாங்க அவனைக் கல்யாணம் செய்துக்கக் கட்டாயப்படுத்தறோம்'னு ஊரை விட்டே ஓடிட்டான்.''

''அடப் பாவமே!''

''திரும்பி வான்னு விளம்பரம் செய்யக் கூடாதா?''

''வருவானா?''

''அதனாலேதான் கல்யாண விளம்பரமா?''

''அப்பா கல்யாணத்துக்காவது மகன் வரமாட்டானா?''

''அப்பா....'' — குரலைத் தொடர்ந்து புயலென உள்ளே புகுந்தான் சீனு.

''வாடாப்பா வா... தேவிகா... இவன்தான் என் பிள்ளை சீனு பி. எஸ்.ஸி.... சீனு இவதான் தேவிகா.பி. காம்... பாங்க் ஆப் பரோடா....''

''இதெல்லாம் என்னப்பா கூத்து? உங்க வயசென்ன... இவங்க வயசென்ன?''

''எனக்கு வயது ஐம்பது. அதிலே பாதி இருபத்தைந்து தேவிகாவுக்கு... உனக்கு இருபத்தெட்டு''

''ஷட் அப்... இதெல்லாம் என்ன? எங்க அப்பாதான் அநியாயமா இப்படி விளம்பரம் கொடுத்தால் நீங்க கூடவா சம்மதிக்கிறது?''

''என்ன செய்யறது மிஸ்டர் சீனு? உங்க மாதிரி இளைஞர்கள் கல்யாணம் செய்து கொள்ளப் பயந்து வீட்டை விட்டு ஓடினால் நாங்க கெழம் கட்டைகளைத்தான் கட்டிக்கணும்'' — தேவிகாவுக்கு விசாகன் விளம்பரத்தின் பொருள் புரிந்து விட்டது.

''எனக்கு வேலை கெடைக்கலையே!''

''எப்போ கிடைக்கும்?''

''யாருக்குத் தெரியும்?''

''அம்பது வயசிலே உங்களுக்கு வேலை கெடைச்சால் நீங்க மட்டும் அப்போ கெழம் இல்லையா?''

''அதனாலே அப்பா சொல்றமாதிரி பத்திரிகை ஆபீசிலே புரூஃப் திருத்தி இருநூறோ முந்நூறோ வாங்கிண்டு குடும்பம் நடத்த முடியுமா?''

''நடத்தி ஆகணும்...ஏதாவது தொழிலோ வியாபாரமோ முயற்சி செய்யணும்.... வாழ்க்கையைக் கண்டு பயந்து ஓடக் கூடாது. எதிர்த்துப் போராடணும்.''

''அதற்குத்தாம்மா தேவிகா உன்னைத் தேர்ந்தெடுத்தேன்! உனக்குச் சம்மதமானால்...''


''போங்க மாமா'' என்றாள் நாணத்துடன். குனிந்த தேவிகாவின் கண்களும் சீனுவின் கண்களும்....

பேனாவை எடுத்தார் விசாகன், பத்திரிகைக்கு எழுத அல்ல!

திருமணப் பத்திரிகை எழுதத்தான்!


உங்கள் கேசம் அடர்த்தியின்றி
சக்தியின்றி இருக்கிறதா? உங்கள்
கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும்
ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தியின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும் காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம் நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப் படியவைத்து அதற்குத் தேவையான எல்லா ஊட்டங்களையும் அளிக்கிறது. உங்கள் கேசம் அழகாக ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரைவளம் உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும் தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு
EGG
Halo
SHAMPOO

HES. G. 4. TP



ஓவியக் கவிதைகள்

11 - 4 - 82 இதழில் வெளியான ஓவியக் கவிதைப் போட்டியில் பரிசுபெறும் புதுக் கவிதைகள்:

கொவ்வைக்
கனியிதழ்கள்
கக்கிய
வெப்பக் காற்று
விலைவாசி
உயர்வின்
வரைபடக் கீற்று!

—சிறுமுகை செல்வராசு
கோவை

அன்பே
ரோஜா இதழ்
விரித்தால்
மல்லிகை மலரும்
அதிசயத்தை
முதன் முதலாக
நான்
உன் முகத்தில்தான்
பார்த்தேன்.

வன்மீக வெங்கடாசலம்
மாயூரம்.

இது—
அடுத்தவர்
வந்து
முத்துக்குளிப்பு
நடத்தியதால்
இதழ்களின்
தீக்குளிப்பா?
முத்துப் பற்களின்
மோதலால்
மூண்ட
பெருந்தீயா?
சிரித்தபடி
உயிர்த்தெழுந்த
கல்லறைச் சவமா?
ஓயாமல்
பேசிய மனைவிக்கு
ஓவியரின்
சாபமா?
எப்படியோ
'ஒரு
ஜூனியர்
மோனோலிசா
வீணாகிவிட்டது!

—எஸ். நாகராஜன்
விராலிமலை

சிந்தையில் சிருஷ்டித்த
சிங்கார அழகு
மனதின் இளமையை
இசைத்தபோது—
வயதின் முதுமையை
மொழிய வந்த வழுக்கை
வழியின்றி ஜால்ரா அடித்தது!

—போஜராஜ்
நீலகிரி

அற்பனுக்கு
வந்த
ஐஸ்வரியம்
போல
அரை வேக்காடு
அம்புஜத்துக்கு
அடித்தது
ஐந்து
லட்சம்
அரியானா
லாட்டரியில்
லிப்ஸ்டிக்
உதட்டில்
தலைகீழாய்
வைத்து
சாப்பிட்டாள்
கோன் ஐஸ்கிரீம்
அந்தோ பரிதாபம்!

-வி. ச. கிருஷ்ணரத்னம்
காட்டாங்கொளத்தூர்

ஒலியத்தைத் தீட்டிவிட்டு
மூன்றாகப் பிரித்து விட்டால்
யாரென்று இனம்காண
எங்களால் முடியாதா?
ஒரு முகத்தை வைத்துக் கொண்டு
ஓராயிரம் முகம் காட்டும்
அரசியல்வாதிகளையே
இனம் கண்டு கண்டு
அலுத்துப் போனவர்கள் நாங்கள்.
எங்கள் அனுபவம் பெரிது!

—பாரத்வாஜன்
திருநெல்வேலி



ஓ.... மனிதனே!
ஆக்கம், அழிவு
இரண்டும் உன்னிடமே!
'நியூட்ரான்' குண்டும்
நிலவுப் பயணமும்
நினது செயல்களே!
உனது அறிவின் அலைகள்
மனிதகுல அழிவுக்கல்ல;
ஆக்கத்திற்கே, மறந்துவிடாதே!

—சோலை நேசன்
சென்னை—61

புதுக் கவிதைப் பொருளாக
மாடர்ன் ஆர்ட்டாக
தேடியும் கிடைக்காத தேர்வு வினாவிடையாக
ஒளிந்துகொண்டாலும்
உன்னை நான் அறிவேன்
உழைக்குங் கரமில்லை — உண்ண வாய் உண்டு
கேட்கக் காதில்லை — பேச வாய் உண்டு!
ஆம்....நீ
இந்நாட்டு மக்கள் தொண்டன்!

-ஆர். பி. சாரதி
கேளம்பாக்கம்

சினிமா திரைஞானி சினிமா

நெஞ்சில் ஒரு ராகம்

அன்புள்ள டி. ராஜேந்தருக்கு,

தாங்கள் இயக்கியுள்ள நெ. ஒ. ரா. படத்தைப் பார்த்தேன். ராகம்... ராகம்... ராகம்.....! எந்தப் படம் எடுத்தாலும் அதில் எப்படியோ ராகத்தைப் புகுத்தி விடுகிறீர்களே! அது ஏன் சார்? — அதுமட்டுமல்ல.

உங்கள் படத்தில் காதலித்துக் கொள்பவர்கள் கூட இசைக் கலைஞர்களாகவே இருக்கிறார்கள்! தாங்கள் இசையமைப்பாளர் என்பதால் ஏற்பட்ட பாதிப்புத்தானோ இது?

யாராக இருந்தால் என்ன? அவர்களைக் காதல் ரீங்காரம் பண்ண வைத்துவிடுகிறீர்கள். ஆனால் அந்த ரீங்காரத்தில் பாமரர்களுக்குப் புரியும்படியான எளிமை சற்றுக் குறைந்திருப்பதைத் தாங்கள் உணர்வீர்களா சார்?

சரிதாவை நன்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். கடைசிக் காட்சிகளில் அவர் தமது கணவனை மீண்டும் ஏற்றுக் கொள்ள நினைக்கும்போதெல்லாம் பழைய கொடுமைகள் அவரை நிலைகுலையச் செய்வதை மிக அழகாகக் காட்டியிருக்கிறீர்கள். குறிப்பாகத் தராசு காட்சியைச் சொல்லலாம்.

எனினும் அவர் கணவனை ஏற்றுக் கொண்ட அடுத்த நிமிடமே புதுக் குழப்பத்தை உண்டு பண்ணுகிறீர்களே அது என் சார்? ராஜீவ் குழந்தையைச் சுவீகாரம் கேட்பதும், சரிதா அதற்கு இசைவதும், தியாகராஜன் திமர் என்று கோபித்துக் கொண்டு வேதாளம் முருங்கை மரம் ஏறின மாதிரி மறுபடியும் மனைவியைச் சந்தேகப்பட்டு டெலிபோனில் சாடுவதும்...

சோம்பல் முறிக்க வைக்கிறது சார்!

'டிரம்மர்' தியாகராஜனிடம் படம் முழுவதும் வேலை வாங்கியிருக்கிறீர்கள். ஓகே! அடிபட்டுக் கண்களை இழந்த பிறகு அவரைப் பிச்சைக்காரனாக்கித் தெருத் தெருவாக அலைய விடாமல் இருந்திருக்கலாமே என்று எனக்குத் தோன்றுகிறது. சரியா சார்?

ராஜீவின் கதாபாத்திரமும் நடிப்பும் மனத்தில் மென்மையாகப் பதிகிறது.

பலே கில்லாடி சார் நீங்கள்! கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், இசை, டைரக்‌ஷன் இந்த ஆறும் போதாதென்று ஏழாவதாகக் குடிகாரனாக வேறு நடிக்க வந்துவிட்டீர்கள்! பெண்களைப் பார்த்து விசிலடிக்காத நல்ல குடிகாரன்!

சுருக்கமா ஒண்ணு சொல்லட்டுமா சார்! நீங்க நினைக்கிறதை யெல்லாம் திரையிலே சொல்லணும்கிற ஆசைக்கு ஒரு கடிவாளம் போடுங்க சார்! அந்த ஆசை இந்தப் படத்தில் நிரம்பி வழியறதினாலே படம் 'ஸ்லோ மோஷன்'லே போகிற மாதிரி ஒரு ஃபீலிங்.

● பிரபல ஆங்கில நடிகர் ரிச்சர்ட் பர்டன் தாம் இன்னும் ஐந்து ஆண்டு காலமே உயிரோடு இருக்கப் போவதாக நம்புகிறார். பார்வை மங்கி, கைகள் நடுங்க ஆரம்பித்து விட்டன இவருக்கு.





இ-வரிசை வேட்டி

('இ' வரிசையில் சில வார்த்தைகளுக்குத் தேங்காய் சீனிவாசன் சொன்ன விளக்கம்.)

இட்லி

ஆரோக்கியமான உணவு. நான் திருச்செந்தூர் போகும்பொழுதெல்லாம் அங்கே உள்ள ஒரு சின்னக் கடைக்குப் போகாமல் இருக்க மாட்டேன். மல்லிகைப் பூ மாதிரி இருக்கும். தொட்டுக்கொள்ள மிளகாய்ப் பொடி எண்ணெய். இப்ப நெனைச்சாலும் வாயிலே தண்ணீர் ஊறுகிறது.

இளிச்சவாயன்

என்னையே சொல்லலாம். எத்தனையோ பேரிடம் பணம் வாங்காமல் ஏமாந்திருக்கேன். என்னெஸ்கே உயிரோட இருந்த காலத்திலே அவரை நடிக்க வைக்க இந்தப் பெயரில் ஒரு படம்.எடுக்க டைரக்டர் பஞ்சு நினைத்தார். அவர் காலமான பிறகு என்னை வச்சு அந்தப் படத்தை எடுக்க நெனைச்சாரு. அப்புறம் ஏனோ எடுக்கலே.

இம்பாலா

ரொம்ப நாளைக்கு முன்னாடி பிரைட்டன் தியேட்டர் முதலாளி காரிலே போனப்போ இம்பாலா வாங்கறயான்னு கேட்டார். அப்போ நான் அஞ்சு ஆறு படத்திலே மட்டும் நடிச்சிருந்தேன். ''நான் நிக்கறதுக்கே இடம் இல்லே.... இம்பாலாவை எங்கே நிறுத்துவேன்?''னு பதில் சொல்லிட்டேன்.

பதினேழு வருஷமா என் கூடவே இருக்கிறது பியட் சூபர் செலக்ட் எம். எஸ்.எம். 4497 கார் ஒண்ணுதான். ரொம்ப ராசியான கார்.

ஒரு சமயம் ஒரு கார் புரோக்கர் என்கிட்ட வந்து ''உங்க காரை வித்துத் தரட்டுமா?''னு கேட்டான். அவ்வளவுதான். கோபம் வந்து விரட்டிட்டேன்.

இந்திரா காந்தி

நான் அ. தி. மு. க.விலே இருந்தப்போ தேர்தல் கூட்டத்திலே பேச மதுரைபோயிருந்தேன். அப்போ அங்கே அம்மையாரும் வந்திருந்தாங்க. ஊர்வலமா வரும்போது ஓடிப் போய்க்கை நீட்டி என்னை நானே அறிமுகப் படுத்திக் கொண்டேன். அவங்க கூட கை குலுக்கினேன்.

இறப்பு

எனக்கு இறப்புப் பற்றிய பயம் கிடையாது. ஏரோப்ளேன்லே நான் பயணம் செய்யும்போது எங்க அம்மாதான் பயப்படுவாங்க.

இரத்தம்

'ஒரு விரல்' படத்திலே காமெடியனா அறிமுகம் ஆனபோது அம்பாடி எஸ்டேட்டில் ஷூட்டிங். மேக்கப்பைக் கலைக்க மோட்டார் சைக்கிளில் வி. ஆர். திலகத்துடன்போய்க் கொண்டிருந்தேன். திடீர் என்று பைக் சரிந்து கீழே விழுந்து காலில் ரத்தம் வந்தது. என் ரத்தத்தைப் பார்த்துவிட்டு நானே மயக்கமடைந்து விட்டேன். இப்போ நினைச்சாலும் சிரிப்பு வருது.

இங்கிலீஷ்

இண்டர்மீடியட் வரை (ஃபெயில்) நான் படிச்சிருக்கேன். இங்கிலீஷ் பேசத் தெரியும். என்றாலும் அதிகம் பேசுவதில்லை.

இண்டர் நேஷனல் டூர்

முக்கால் உலகம் சுற்றிய வாலிபன் நான். உலகத்தில் எல்லா நாடுகளுக்கும் போயிருக்கிறேன் – அமெரிக்கா, சைனா இரண்டைத் தவிர.

இராகுகாலம்

இராகுகாலம், எமகண்டம் எல்லாவற்றிலும் எனக்கு நம்பிக்கை உண்டு. அந்த நேரத்திலே எந்தக் காரியமும் செய்ய மாட்டேன்.

> ● அமோல் பலேகர் முதன் முதலாக ஒரு மலையாளப் படத்தில் நடிக்கிறார். கதாநாயகி பூர்ணிமா ஜெயராம். டைரக்டர்: பானு மகேந்திரா.

உணர்ச்சிகளைப் பிழிந்தெடுக்கும் உன்னதமானதொரு கதாபாத்திரத்தை முதன் முறையாக 'ஸ்ரீ' எவ்வாறு ஜீரணித்துக்கொண்டுள்ளார்? அறிய ஆசைப்பட்டேன்.

''முதன் முதலாக நடிக்கிறீர்கள். நடிப்பதற்கு முன்பு நடிப்பைப் பற்றி என்ன நினைத்தீர்கள்? நடிக்கத் தொடங்கிய பிறகு என்ன நினைக்கிறீர்கள்?''

''நத்திங். ஐ ஃபீல் வெரி ஈஸி'' என்றார்.

''முதலில் என்னகாட்சியில் நடித்தீர்கள்?''

''ஸ்டுடியோவுக்கு முன்பாக இருந்த பிள்ளையாரைக் கும்பிடுவது போன்ற காட்சியை எடுத்தார்கள். நோ டயலாக்ஸ்.''

மகாலட்சுமி (ஸ்ரீ) ஐந்து வயதுச் சிறுமியாக இருக்கும்போதே அவளைப் பற்றி செய்தி எழுதியவன் நான். அப்பா ராஜன் பம்பாயில் ஒரு நாடகத்தில் நடிக்கும்போது மகாலட்சுமியும்கூடப்போயிருக்கிறாள். நாடகத்தில் அப்பாவை அனைவரும் அடிக்கும் காட்சி வந்ததும் நாடகம் பார்த்துக் கொண்டிருந்த மகாலட்சுமி அழ ஆரம்பித்து விட்டாள்.

இதை இப்போது அவரிடம் சொன்னபோது 'ஸ்ரீ' வெட்கத்துடன் சிரித்துக்கொண்டார்.


''மகாலட்சுமிக்கு பெயரைமாற்றி 'ஸ்ரீ' என வைத்தது யார்?'' என்றதும் புஷ்பலதா வெற்றிலைப் பெட்டியைத்திறந்தவாறே ''அது ஒரு கதை'' என்றார்.

வாரிசு உருவாகிறது!

சினிமா உலகில் பழைய தலைமுறை போய்ப்புதிய தலைமுறை உருவாக ஆரம்பிக்கிறது:


சிவாஜி மகன் பிரபு
ஜெமினி மகன் ஜிஜி
புஷ்பலதாவின் மகள் ஸ்ரீ
பாலையா மகள் மனோசித்ரா
திருச்சி லோகநாதன் மகன் தீபன் சக்ரவர்த்தி
எஸ். எஸ். ஆர். மகன் ராஜேந்திர குமார்
விஜயகுமாரி மகன் ரவி
முத்துராமன் மகன் கார்த்திக்
சாருஹாசன் மகள் சுகாசினி
சின்னப்பா மகன் ராஜாபாதர்
ராதா மகள் ராதிகா
ராதா மகன் ராதா ரவி
கோபிநாத் மகன் சுரேஷ்
மனோரமா மகன் பூபதி
விசுவின் சகோதரர் கிருஷ்
கே. ஆர். விஜயாவின் தங்கை சாவித்ரி

இப்படியாகப் பலர் நடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். போட்டியில் இதுவரை சேராதவர்கள் கே. ஆர். விஜயா மகள் ஹேமாவும் ஸ்ரீதேவி, கமலதா, சத்யகலா இவர்களின் தங்கைகளும்தான்.



எலக்ட்ரானை மிஞ்சும் நியூட்ரான்!

நளினி சாஸ்திரி.



✕ வயிற்றுப் புற்றுக்கு நியூட்ரான் சிகிச்சை பெறுபவர்

எண்பது வருடங்களாக புற்றுநோய் டியூமர் போன்றவற்றைக் கட்டுப்படுத்த எக்ஸ்ரேக்கள் தான் கைகண்ட மருந்தாக இருந்து வந்திருக்கிறது. எக்ஸ்ரேக்களைப் பாதிக்கப்பட்ட பகுதியில் குவியச் செய்து தசைகளை எரித்து அழித்து விடுவார்கள். நோய்ப் பிரதேசத்தை அடைந்ததும் எக்ஸ்ரேக்கள் 'எலக்ட்ரான்களாக அவதாரமெடுத்துப் பிறகே வேண்டாத தசைகளைத் துவம்சம் செய்யும்.

கொஞ்ச நாள் கழித்து ஸீனியர் ஆக்ஸலேடர் எனப்படும் சக்திவாய்ந்த எக்ஸ்ரே மெஷினைப் படைத்தார்கள். சாதாரண எக்ஸ்ரேக் கருவியில் கிடைக்கும் கதிர் 200,000 வோல்ட் சக்தி வாய்ந்தது. ஆனால் ஸீனியர் ஆக்ஸலேடரில் கிடைக்கும் கதிரோ 600,000 வோல்ட் பலமுள்ளது. இதுவும் போதாதென்று மருத்துவ பிரம்மாக்கள் பீட்டாட்ரான் (Betatron)என்ற மகாக் கருவியைக் கண்டு பிடித்தார்கள். ஆசியா-ஆஸ்திரேலியாக் கண்டங்களிலேயே மூன்றுதான் உள்ள இக் கருவியில் ஒன்று நம் வேலூர் ஆஸ்பத்திரியில் சாகசம் புரிந்து வருகிறது. பீட்டாட்ரானில் 4,200,000 எலக்ட்ரான் வோல்ட் சக்தியை உருவாக்கலாம். இது சாதாரண எக்ஸ்ரே கருவிகளை விட 15 மடங்கும், ஸீனியர் ஆக்ஸலேடரை விட 7 மடங்கும் அதிக அளவு வீரியம் கொண்டது. இது எக்ஸ்ரேக்களுக்குப் பதிலாக நேரிடையாகவே எலக்ட்ரான்களை வெளிப்படுத்தும்.

இவ்வளவுஎக்ஸ்ரே,எலக்ட்ரான் படைகள் இருந்தும் புற்று நோய் அரக்கர்கள் டிமிக்கி கொடுத்துப் பெருகிக் கொண்டு வரக் காரணம் எக்ஸ்ரேக்களின் (எலக்ட்ரான்களின்) வீச்சு குறைவாக இருப்பதும், எதிரிகளின்சரியான இருப்பிடத்தைக்கண்டறிய முடியாததும்தான்.குறிப்பாகடியூமரைச்சரியாகஇடங்காண்பது அரிது. மேலும் டியூமரைச் சுற்றிலும் குறைந்த ஆக்ஸிஜனையுடைய ஹைபாக்ஸிக் செல்கள் அரண் போல் விளங்குகின்றன. இவற்றை எலக்ட்ரான்களால்எளிதில்அசைக்க முடிவதில்லை. முதலில் இந்த ஹைபாக்ஸிக் அரணைத் தகர்க்க சில மருந்துகளை உட்செலுத்தி செல்களை ஆட்டம் காண வைத்துப் பிறகே பிரதான எலக்ட்ரான் படையை அனுப்புவார்கள். முன்னே செல்லும் மருந்துப் படை இரத்த ஓட்டம், எலும்புகள் ஆகியவற்றுக்கும் இடைஞ்சலைக் கொடுப்பவை.

விஞ்ஞான பக்கங்கள்

எனவே புற்று நோய்.டியூமருடன் போராடப் புதிய ஆயுதம் தேவைப்பட்டது. அந்தச் சமயம்தான் நியூட்ரான்கள் உதவிக்கு வந்தன. இவை வேகமானவை. வீரியத்துடன் தாக்கக் கூடியவை. நியூட்ரான் சிகிச்சை ஆரம்பித்து 11 வருடங்கள்தான் ஆகின்றன. என்றாலும் அதற்குள் புதிய எல்லைகளைத் தொட்டுவிட்டது.

லண்டனில் உள்ள ஹாமர்ஸ்மித் மருத்துவமனையில் புது நியூட்ரான் எந்திரத்தை வடிவமைத்துள்ளார்கள். இதில் சில குறைகள் இருந்தாலும் 1984க்குள் மிகச்சக்திவாய்ந்த நியூட்ரான் கதிர்களைத் தரக் கூடிய சைக்ளோட்ரான் என்ற கருவியை உருவாக்கப் போகிறார்கள். இதன் கதிரை வேண்டிய திசையில் திருப்பிக் கொள்ளலாம். இது கண்டுபிடிக்கப்பட்ட பின் எமனுக்கு ஏமாற்றம்தான்.

நியூட்ரான் சிகிச்சை இரத்த ஓட்டத்தாலோ வேறு உப மருந்துகளாலோ பாதிக்கப்படுவதில்லை. இது எக்ஸ்ரேக் களைவிடத் திறமையாக ஹைபாக்ஸிக் செல்களை அழிக்கிறது. எக்ஸ்ரேக்கள் திசுக்களை விட பக்கத்தில் உள்ள எலும்பின் மேல் காதல் கொண்டு எலும்பைச் சென்று தழுவுவதால் எலும்பு பாதிக்கப்படுகிறது. ஆனால் மிருதுவான திசுக்களுக்கும் சதைக்கும் நியூட்ரானிடம் பிரியம் அதிகம். இவை நியூட்ரான் கதிர்களை மிகவும் கவர்ந்து கொள்கின்றன. இவற்றிடமிருந்து தப்பித்து எலும்பை அடைவதில்லை. எனவே நியூட்ரான் சிகிச்சையில் பாதிக்கப்பட்ட செல்களில் மட்டும் கதிரியக்கம் நடைபெற்று செல்கள் மரிக்கும்.



✕ வாயில் ஆபரேஷன் செய்யப்பட்டவர்

✕ வாயில் நியூட்ரான் சிகிச்சை பெற்றவர்



படத்தில் உள்ள நியூட்ரான் மெஷின், நோயாளியின் வயிற்றில் உள்ள புற்று நோயைக் குணப்படுத்துகிறது. இந்த மெஷினில் உருவாகும் நியூட்ரான் கதிரால் ஓரளவுதான் உடம்பில் ஊடுருவ முடியுமானதால் படத்தில் உள்ளவர் போல் மெலிந்த தேகம் கொண்டோர்தான் சிகிச்சை பெற முடியும்.


பெரும்பாலானவர்க்கு வாய், உமிழ்நீர் சுரப்பிகள், மூக்கு, மார்பகம் போன்றவற்றில் புற்று நோய் வருவதால் செல்களைத் தாக்கக் கூடிய நியூட்ரானே ஆபத்பாந்தவனாய் உதவிக்கு வருகிறது. சிறுநீர்ப் பை, இரப்பையும் குடலும் சேர்ந்த பகுதி போன்றவற்றில் சாதாரணமாக டியூமர் வருவதால் ஒரு வருடத்துக்கு இங்கிலாந்தில் மட்டும் 45,000 பேர் உயிரிழக்கின்றனர். பெரும்பாலான கேஸ்கள் எக்ஸ்ரேக்களால் கைவிடப்பட்டு, நியூட்ரான்களால் மீட்கப்பட்டுள்ளன. எக்ஸ்ரேக்களால் 19 சதவீதம் மட்டுமே கட்டுப்படுத்தப்படும் ட்யூமரை நியூட்ரான்கள் 76 சதவீதம் மட்டுப்படுத்துகின்றன.

படத்தில் காணப்படும் இரண்டு மனிதர்களுக்கும் வாயில் புற்று. இடதுபுறம் உள்ளவர்க்கு ஆபரேஷன் செய்து தாடை எலும்பையும் பாதிநாக்கையும்எடுத்துவிட்டார்கள். பேச, சாப்பிட, குடிக்க இவர் மிகத் துன்பப்படுகிறார். வலது புறம் சிரிக்கும் ஆசாமியோ நியூட்ரான் சிகிச்சை பெற்றவர். நம்மைப் போலவே சாதாரணமாகக் குடித்து, பேசி, சாப்பிடுகிறார். அவரால் பொய்ப் பல்கூட அணிய முடிகிறது.


ஒருபுறம் நியூட்ரான் குண்டுகள் மனித குலத்தையே அழித்து விடுவேன் என்று பயமுறுத்தினாலும் அதே நியூட்ரான்கள் மறுபுறம் மனிதர்களைக் காப்பாற்றி மனவிப் பாலையும் வார்க்கின்றன.

படம்: ஸ்பெக்ட்ரம்

இம்மாத ரத்தினம்



ஜூன் மாதத்தில் பிறந்தவர்
களுக்குரியது முத்து (PEARL)
என்று சொல்வார்கள்.
இது, இளஞ் சிவப்பு, சாம்பல்
கலந்த வெண்மை, மஞ்சள்
கலந்த வெண்மை, பொன்னிறம்,
பச்சை, நீலம், கருமை ஆகிய
வண்ணங்களில் இருக்கும்.
ரத்தினங்களின் கடினத்
தன்மையை மோஸ் அளவில்
மதிப்பிடுவார்கள். இதன் கடினத்
தன்மை 3—4. முத்து, பொறுமை,
தூய்மை, நம்பிக்கை
ஆகியவற்றைக் குறிக்கும்.



இந்தியன் பாங்க் வாடிக்கையாளர்கள்—நம்பிக்கை நகையை உருவாக்கும் ரத்தினங்கள்

என்றும், எங்கும், ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் ரத்தினம் இந்தியன் பாங்க்

வங்கிகளுக்கு அடிப்படை பணம். தனிநபரும் நிறுவனங்களும், நாடுகளும் செழிப்புற்றிருக்க பணம் உதவுகிறது. ஆக்கப் பணிகளுக்கு பண உதவி தருவதோடு, அனைத்து விதமான நிதி அலுவல்களுக்கும் உதவி செய்கிறோம்.

ஒரு வார்த்தை சொல்லுங்கள். உங்கள் சார்பில் வாடகை, கட்டணங்கள் போன்றவற்றை அவ்வப்போது செலுத்தி விடுவோம். உங்கள் பணத்தை வேறு கிளைகளுக்கோ, வேறு கணக்குகளுக்கோ மாற்றவேண்டுமானால் அதையும் செய்கிறோம். அதோடு உங்கள் செக்குகள், பென்ஷன் தொகை போன்றவற்றை நாங்கள் பெற்றுத்தருகிறோம்.

நலிவுற்றோருக்குக் கடனுதவி அளிப்பதற்காக இந்தியன் பாங்கில் தனிப்பிரிவு இருக்கிறது. சொந்தத் தொழில் நடத்த கடன் தரும் திட்டங்கள் உள்ளன— அதுவும் சலுகை வட்டியில். சிறுதொழில்கள், விவசாயம், ஏற்றுமதி ஆகியவற்றில் தனி கவனம் செலுத்துகிறோம்.

உங்கள் சேமிப்பு, கிடுகிடுவென்று வளர, உங்கள் தேவைக்கேற்ற பல திட்டங்கள் இந்தியன் பாங்கில் இருக்கின்றன.

இந்தியன் பாங்க்

உங்கள் செல்வச் செழுமைக்கு உதவும் வங்கி
இப்போது பவள விழா ஆண்டில் நடைபோடுகிறது.

'21

அந்த வாரம் முழுவதும் சந்தியாவுக்குப் பள்ளிக்கூடத்தில் அதிகப்படியான வேலை.

லீவு எடுத்துக் கொண்டு சென்றுவிட்டிருந்த ஒரு ஆசிரியையின் பொறுப்பை அவள் மற்றும் சில ஆசிரியைகளுடன் பகிர்ந்து கொள்ள நேரிட்டது. ஆனல் வேண்டுமென்றே தலைவி திட்டமிட்டது போல அவள் பங்கு வேலை கொஞ்சம் அதிகமாகவே தான் இருந்தது.

ஓய்வு நேரத்தின்போது ஆசிரியைகளின் அறையில் உட்கார்ந்து முடிக்க முடியாது. தினமும் அவள் மாணவிகளின் நோட்டுப் புத்தகக் கட்டை வீட்டுக்குக் கொண்டுவந்தாள். இரவு வெகு நேரம் உட்கார்ந்து அவைகளைத் திருத்தி முடிக்க வேண்டியிருந்தது.

தலைவி தான் சொன்னதை நிரூபிப்பது போல் இடைஞ்சல் கொடுக்கத் துவங்கி விட்டிருந்தாள்.

ஒவ்வொரு நாளும் நோட்டுப் புத்தகக் கட்டு அவள் பங்குக்கு அதிகரித்துக்கொண்டு போயின.

மறுக்க முடியாத வேலை... மற்றவர்கள் முணு முணுக்காது செய்யும்போது நீ ஏன் தயங்குகிறாய்....தலைவி எல்லார் முன்னிலையிலும் அவளைச் சோம்பேறி போலாக்கி அவமானப் படுத்துவாள். முடிந்தவரை சுமக்கிறேன். என்ன செய்கிறது... தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டு பொறுமையுடன் அதிகப்படி வேலையைச் செவ்வனே கவனித்தாள்.

அந்த வார இறுதியில் அவள் தூக்க மாட்டாத அளவு நோட்டுப் புத்தகங்களுடன்தான் வீடு திரும்பி யிருந்தாள்.

இரவு வெகு நேரம் உட்கார்ந்தும் அவளால் அவைகளைத் திருத்தி முடிக்க இயலவில்லை.

சனிக் கிழமை காலை தோட்ட வேலை வேறு உள்ளதே என்கிற நினைப்பில் விடியற்காலையிலேயே எழுந்து குளித்துவிட்டு வெறும் காப்பியுடன் நோட்டுப் புத்தகக் கட்டுகளைக் கவனிக்க உட்கார்ந்தவள் நிமிரவேயில்லை.

வெகு நேரத்துக்குப் பின்னர் கடைசி நோட்டுப் புத்தகத்தையும் பார்த்து முடித்து, கையெழுத்துப் போட்டுவிட்டு அலுப்புடன் இடது கையால் பிடரியைத் தடவியபடி நிமிர்ந்தாள்.

மாரப்பன் தோட்டத்துக்குள் நுழைவதைக் கவனித்து விட்டாள்.

ஸாம்சனின் உற்சாகமான குரைப்பில் வீடு அதிர்ந்தது. அத்தை ஜகதா சமையலறையிலிருந்து எட்டிப் பார்த்தாள். 'இன்னிக்கு வேணும்னு நான் தோட்ட

சாதாரண மனிதன்

'லக்ஷ்மி'



வேலையைக் கவனிக்கிறேன். நீ ராத்திரி ரொம்ப நேரம் கண் விழிச்சுப் புத்தகங்களைத் திருத்திக்கிட்டிருந்தே பாவம்...'' அனுதாபத்துடன் கேட்டான்.

''நான் தூங்கிப் போனேனு இல்லையான்னு அடிக்கடி தலையைத் தூக்கிப் பார்த்துக்கிட்டு நீங்களும் ரொம்ப நேரம் முழிச்சுக்கிட்டிருந்தீங்க. வயதில் சின்னவள் நான். என்னாலே சமாளிக்க முடியும் நீங்க அடுக்களை



யைக் கவனிச்சுக்குங்க. நான் தோட்டத்தைக் கவனிச்சுக்கிறேன்'' சிரித்தபடி அவள் எழுந்தாள்.

அதற்குள் மாரப்பன் உள்ளே வந்து தாழ்வாரத்தில் தூண் ஓரமாகப் பணிவுடன் நின்றான் — அவன் கையில் ஒரு பழுப்புக் காகித உறை இருந்தது.

''என்னப்பா இது... உன் குழந்தை எழுதின கட்டுரையா பெரிய நோட்டுப் புத்தகம் போல் இருக்கே? நான் சரிபார்த்துத் தரணும்னு கேட்கக் கொண்டு வந்தியா?... இப்பத்தான் ஒரு போர் முடிச்சேன். குடு சரி பார்க்கிறேன்...'' மெல்லிதாக முறுவலித்தபடி கையை நீட்டினாள்.

''இல்லீங்க— வேலை முடிஞ்சதும் கடைத்தெரு சுப்பிரமணி கிட்டக் கொடுத்துக் கண்ணாடி போடணும். காலையில் கொண்டுவரச் சொன்னான். தோட்டத்திலே வச்சா அழுக்காகிடுமேன்னு... இங்கே வச்சுட்டுப் போக நினைச்சேன்.'' — தயக்கமாகத் தலையைச் சொறிந்தான் மாரப்பன்.

''மேஜைமேலேவச்சுட்டுப் போ. நான். வேலை முடிஞ்சதும்எடுத்துக்கிறேன். ஐயாதான் கொடுத்தார். — கண்ணாடி

போட்டு கிளினிக்கிலே மாட்டி வைன்னு உத்தரவு கொடுத்திருக்கிறார். அறையிலே நல்ல நடுப் பாகத்திலே சுவரிலே ஆணி கூட அடிச்சுத் தயாராக்கிட்டேன்.''

''நான் பார்க்கலாமா?''—வேடிக்கையாகக் கேட்டபடி உறையிலிருந்த போட்டோவை அவன் உருவி எடுத்தான்.


அட்டையில் ஒட்டிக் கண்ணாடி போடத் தயாராக இருந்த பெரிய புகைப்படம் அது. ஆஸ்பத்திரி கோட் அலங்காரத்தில் பைகளில் ஸ்தெஸ்கோப் தெரிய முகத்தில் லேசாகப் புன்னகை தெரிய வரிசையாக மூன்று வைத்தியர்கள் நின்று கொண்டிருந்தனர் படத்தில். அதன் கீழ் காணப்பட்ட

'நர்மதா நர்ஸிங் ஹோமில் நாம் மூவர்'. இடதுபுறமிருந்து டாக்டர் சங்கர், டாக்டர் சுந்தர்... என்பதைப் படித்தாள். மூன்றாவதாக முறுவலித்தபடி நின்ற கிரிதரனை வைத்த விழி வாங்காது பார்த்தாள்.

நேரிலேஅவனைப்பார்த்துவிட்டது போன்ற மகிழ்ச்சி மனத்தில்.

''பரவாயில்லையே... இந்தப் பொறுப்பெல்லாம் டாக்டர் உன்கிட்டக் கொடுத்திருக்கார் போலிருக்கே...'' வேடிக்கையாகக் கேட்டுவிட்டு மீண்டும் அவன் படத்தைப்பார்த்தான். இன்னும் சிறிது நேரம் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆர்வம்.

''மாரப்பா... நீயும் கொஞ்சம் காப்பி சாப்பிடு'' என்று அத்தை குரல் கொடுத்ததும் சட்டென்று உறைக்குள் படத்தை



வைத்துவிட்டுக் கூடைகளுடன் பின் பக்கம் சென்றுவிட்டாள் சந்தியா.

மாரப்பனுடன் காய்களைச் சேகரித்துக் கொண்டிருந்தபோது அவளால் மௌனமாக இருக்க முடியவில்லை.

''டாக்டர் தம் கிளினிக் சாவியை உன் கிட்டக் குடுத்திட்டுப் போயிருக்காரா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்.அம்மா.அவர் வர இன்னும் ஒரு வாரம் பிடிக்கும்.''

''நல்லா இருக்கு. ஒரு டாக்டர் இப்படி நினைச்சப்போ ஊருக்குப் புறப்பட்டுப் போய் விட்டால் அவர் கிட்ட வைத்தியம் செய்துகிற நோயாளிங்க கதி?''

''அதுக்குத்தான் தினசரி பூதலூர் கிளினிக்கிலிருந்து இன்னொரு டாக்டர் வந்து பார்த்துக்க ஏற்பாடு பண்ணிட்டுப் போயிருக்காரே. என்னம்மா அப்படிச் சொல்லிட்டீங்க டாக்டர் ஐயாவுக்குத்தான் நோயாளிகளின் மேலே ரொம்ப அக்கறை.''

''அப்போ சாவியை ஏன் உன்கிட்டக் கொடுக்கணும்?''

''என் மேலே அத்தனை நம்பிக்கை. நான் தான் கிளினிக்கைத் தினமும் கூட்டிச் சுத்தப்படுத்தி... தண்ணி பிடிச்சு வச்சு... நோயாளிகளை உட்கார வைக்கக் கவனிச்சுக்கிறேன். அந்தப் புது டாக்டர் வந்து ரெண்டு மணி நேரம் பார்த்துவிட்டுப் போயிடுவாரு.மறுபடி அறையைச் சுத்தம்செஞ்சு அடுத்த நாளுக்குத் தயார் செய்ய வேண்டாமா? முந்தாநேத்து கொஞ்சம் சுண்ணாம்பு வாங்கிச் சுவருக்கு வெள்ளைஅடிச்சேன்.இப்போ கிளினிக் பார்க்க நல்லா துப்புரவா இருக்கு. இந்த போட்டோவுக்குக் கண்ணாடி போட்டு ஆணியிலே மாட்டப் போறேன். நாலு பேர் பார்க்க வேணுமா?... ஏம்மா நீங்க பூதலூர் கிளினிக்கைப் பார்த்திருக்கீங்களா?''

''அதைப் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலை — நல்ல வேளை. ஏன் கேட்கிறே?''

''அங்கே நோயாளிங்க வந்து உட்கார ஒரு பெரிய அறை இருக்கு. அதன் சுவரிலே அழகான படங்களை மாட்டி வச்சிருக்காங்க. ஒரு கண்ணாடித் தொட்டியிலே மீன் குஞ்சுங்க அழகா சுத்தி வர்றதையே நாள் பூரா பார்க்கலாம்.''

''அது மாதிரி யெல்லாம் செய்ய ஆசைப்படுறாரா உங்க டாக்டர்?''

''இப்ப எடுத்திருக்கிற இடம் ரொம்ப நெருக்கமாக இருக்கு மாரப்பா.. தொழில் இந்த ஊரில் நல்லாப் பிடிச்சுக்கிட்டா இங்கே பூதலூர் கிளினிக்கைப் போல ஒரு பெரிய வீட்டிலே வசதியா கிளினிக் வைக்க ஆசைப்படறேன்....' அப்படின்னார்.''

''டாக்டர் கிரிதரன் உன்னைத் தன் பி.ஏ. வாக வச்சிருக்கிறாரா?'' சிரித்தாள் சந்தியா.

''அப்படின்னு என்னம்மா?'' — மாரப்பன் குழப்பத்துடன் விழித்தான்.

''அப்படின்னு அவருடைய அந்தரங்கக் காரியதரிசி — அவரது வேலைகளைக் கவனிச்சு அவருக்கு எல்லா வகையிலும் உதவர ஒரு நெருக்கமான ஊழியர்னு அர்த்தம்.''

''அதென்னவோ டாக்டர் ஐயாவுக்கு என் மேலே நம்பிக்கை. சேலத்திலிருந்து வந்த

ஒரு அம்மா இங்கே தன் உறவுக்காரங்க வீட்டிலே வந்த இடத்திலே சிக்காயிட்டாங்க. டாக்டர் மூணு தபா அவங்களைப் போய்ப் பார்த்தாங்க. அவங்க நல்லாயிட்டாங்க. டாக்டர் ஊருக்குப் போயிருப்பதினாலே அந்தம்மா என் கிட்ட பீஸைக் கொடுத்திட்டு நேத்து சேலம் போறாங்க.''

''பரவாயில்லே. பில் கலெக்டர் வேலையும் செய்யறே. இதுக்கெல்லாம் டாக்டர் ஏதாச்சும்?....'' — முறுவலித்தான் அவன்.

''ஓ! அவர் எனக்கு மாதம் ஒரு சின்னத் தொகை ஊதியமாக் கொடுக்கிறார். அதைத் தவிர என் குழந்தை குட்டிக்கு இனமா தேவைப்பட்டப்போ வைத்தியம் செய்யறார். அவர் ரொம்ப நல்லவர் அம்மா. ஒரு நாளைக்கு நான் ரொம்பத் துணிவாக் கேட்டுட்டேன். உங்களுக்குன்னு ஒரு வீடு வாசல் வேணுமான்னு கேட்டேன்.''

'ஒரு பெரிய வீடா வாடகைக்குப் பார் அல்லது விலைக்குக் கிடைச்சாலும் சொல்லுன்னார்.

''அதைச் சொல்லலே ஐயா... உங்களைப் பொறுப்பாக் கவனிக்க வீட்டிலே விளக்கேத்த ஒரு மகராசி வேண்டாமா... விளங்கச் சொல்றேன். நீங்க கல்யாணம் கார்த்தி செஞ்சுக்கிறதா உத்தேசமே இல்லையான்னு பட்டுன்னு கேட்டுட்டேன்.

''நான் எங்கே போய்ப் பெண் தேடுவேன், சொல்லுன்னு சிரிச்சார்.

'இந்தக் கிராமத்திலேயே தேடிக்கிறது— அப்பத்தான் நீங்க இங்கேயே இருப்பீங்க— ஏழை எளியவங்களுக்கு நல்ல வைத்திய உதவி கிடைக்கும்' அப்படின்னேன்.

''நீயே எனக்குச் சரியான இடம் பார்த்துச் சொல்லேன்.' அப்படின்னு சிரிச்சார்.

'நான் சொல்ற இடம் உங்களுக்குப் பிடிக்கும்னு நானும் கேலியாகத் துணிஞ்சு சொல்லிட்டேன்.... அவர் மூஞ்சியை அப்பப் பார்க்கணுமே... செவேல்னு ஆயிடுச்சு.'''

''எங்கத்தாளையும் மிஞ்சி விட்டே தரகு வியாபாரி யாகி விட்டே நீ மாரப்பா?... என்ன சொல்ல இப்படிச் சுத்தி வளைக்கிறேங்கிறது புரியறது. டாக்டர் இங்கே வந்து போவதும் காரில் என்னைக் கூட்டிக்கொண்டு வந்து விடறதும் தெரிஞ்ச நீ மெள்ள என் மனசை ஆழம் பார்க்கிறே... அந்தக் காலத்திலே மயில் குயில்களைத் தூது விடுவாங்களாம். டாக்டர் தமது ஏடு பிடியையே தூது விட்டிருக்காரா?...'' படபடவென்று சொல்லத் துடித்தாள். அவனது பேச்சைக் கேட்டு மனசில் இருந்த கற்பனையின் இன்பத்தில் திளைத்துப் போனான். சிவந்துபோன தன் முகத்தை மறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

''மாரப்பா... நேரமாச்சு. கூடைகளைக் கொண்டு உள்ளே வை....'' — உத்தரவு போட்டுவிட்டுத் தோட்டத்துக்குள் விடுவிடுவென்று சிறிது தூரம் நடந்தாள்.

அன்று ஒரு நாள் காலை அந்த மல்லிகைப் பந்தல் அருகே நின்றபடி அவன் பேசியது அத்தனையும் நினைவுக்கு வந்தது. மலர் ஒன்றைக் கிள்ளி மெல்ல முகர்ந்து நின்றான்.

'ரொம்ப வாசனையாக இருக்கே. இது மாதிரிப் பூவை நான் பார்த்ததில்லே. இது என்ன வகை யைச் சேர்ந்த மலர் —பேர் என்ன?''

'அன்னிக்குக் கோவில் அர்ச்சகர் சொன்னாரே... அவள் முடிக்காது இளைநியதும் 'ஆமாம்... நினைவிருக்கு. காமபாணம்னு பேர் சொன்னார் என்று சொன்னபடி.' அவளை விழுங்கி விடுவதுபோலப் பார்த்தான். அந்தப் பார்வை அவளை எப்படி மயக்கி விட்டது. அந்தச் சின்னப் பெண் ராதிகா கேட்டாளே— காதல் என்பதைப் பத்தி என்ன நினைக்கிறீங்க டீச்சர்?....'

இப்போ பதில் நல்லாவே சொல்ல முடியும். காதல் என்பது இன்பமும் துன்பமும் கலந்த ஒரு விசித்திர உணர்வு. அதை அனுபவிச்சால்தான் புரியும்.

சே!... என்னத்துக்குக் கண்களில் கண்ணீர்... இப்ப என்ன ஆயிட்டுது? ஸ்ரீதரன் அமெரிக்காவுக்கா போயிருக்கார்? அண்டையில் இருக்கும் பம்பாய் போயிருக்கார். இன்னும் ஒரு வாரத்திலே பறந்து வந்துவிடுவார்....

மாரப்பனுக்குக் கூட அவள் மனம் புரிகிறது... ஸ்ரீதரனுக்கு இன்னமும் புரியலையா?

எல்லாத்துக்கும் ஒரு வரைமுறை இருக்கே!

''சத்தியா!''... அத்தை உரத்துக் கூப்பிடுவது கேட்டது. கன்னத்தில் உருண்ட கண்ணீர்த் துளிகளைச் சட்டென்று துடைத்துக் கொண்டு உள்ளே வேகமாக விரைந்தாள்.

(தொடரும்)

அந்த நாற்காலியில் அமர்வதற்கு முன் ஒரு கணம் தயங்கிய ராஜசேகர் அப்பாவின் ஆளுயரப் படத்தை ஏறிட்டுப் பார்த்தான். மனம் பாறையாய்க் கனக்க, இந்த இடத்தை இட்டு நிரப்பக் கூடிய தகுதி தனக்கு இருக்கிறதா என்ற சந்தேகமும் மெல்லத் தலை தூக்கி அவனைச் சங்கடப்படுத்தியது! அப்பாவின் நினைவு 'குபுக்'கென்று கண்ணீரைத் தள்ளிவிட அதைச் சமார்த்தியமாக விழி ஓரத்திலேயே கர்ச்சீப்பால் வழி மறித்து விட்டு மெல்லப் புன்னகைத்தான். எதிரே நின்றிருந்த சங்கரலிங்கம் அவனுடைய தவிப்பை உணர்ந்து கொண்டவர் போலத் தலையாட்டினார்.

''உட்காருங்க ஸார்! பெரிய பொறுப்பை ஏத்துக்கும்போது கொஞ்சம் நெர்வஸா இருக்கிறது சகஜந்தான். பழகிப்போச்சுன்னா எல்லாமே பழசாயிடும்!''

இந்தச் சங்கரலிங்கத்துக்கு மற்றவர்களின் மனத்தைப் பிடிக்கும் மகா வித்தை கூடத் தெரியும் போலிருக்கிறதே?

ராஜசேகர் வியந்தபடி நாற்காலியில். அமர்ந்தான்! சும்மா சொல்லக் கூடாது இந்தச் சுழல் நாற்காலி ஒரு சுகமான போதையைத் தரத்தான் செய்கிறது! எங்கிருந்தோ ஓடிவந்து பெரியமனுஷதோரணையும், 'மானேஜிங் டைரக்டர்' என்ற பெயருக்குள்ள கௌரவமும் 'கப்'பென்று ஒட்டிக் கொள்கிறது!

'ஸிட் டௌன் மிஸ்டர் சங்கரலிங்கம்' என்று ஒற்றைச் சொல்லாய் அவரை உபசரித்துவிட்டு, அவர் உட்கார்ந்ததும் என்ன பேசுவது என்று தெரியாமல் அறையை ஒருமுறை நோட்டம் விட்டான் ராஜசேகர்.

''மிஸ்டர் சங்கரலிங்கம்... யூ நோ... எங்கப்பாவோட திடீர் மரணம் என்னை ரொம்ப பாதிச்சிருக்கு! இப்படி எல்லாம் ஆகும்னு





புன்னகையின் பொருள்!


நான் எதிர்பார்க்கவே இல்லே! ஒரு 'அப்ரண்டீஸா' இந்தப் பொறுப்பை நான் ஏத்துக்கிட்டிருக்கேன்! என்னை எங்கப்பா அளவுக்குத் தூக்கி விடறதுக்கு உங்க ஒருத்தரால தான் முடியும்னு நம்பறேன்.''

ராஜசேகரின் தன்னடக்கமான பேச்சினால் நெகிழ்ந்துபோன சங்கரலிங்கம் ஆதரவோடு அவன் கைகளைப் பற்றிக் குலுக்கினார்.

''சார்! உங்க நம்பிக்கை வீண் போகாது. நிர்வாகத்தை எப்படி நடத்தணும்கிறதிலே இருந்து, லேபர்ஸை எப்படி 'ஹேண்டில்' பண்ணணும்கிறது வரைக்கும் இன்ச் பை இன்சா உங்கப்பா எனக்குச் சொல்லிக் குடுத்திருக்கார். நீங்க பெரியவரோட மகன்னு சொல்ற பெருமையை விட, பெரியவர் உங்கப்பான்னு சொல்லிப் புரிய வைக்கிற அளவுக்கு உங்களை உயர்த்த வேண்டியது ஒண்ணுதான் அவருக்கு நான் செலுத்தற நன்றிக் கடன்.''

ராஜசேகர் கண்கள் பனிக்கச் சங்கரலிங்கத்துக்கு 'குட்லக்' சொன்னான்.

'பிள்ளை தலையெடுத்து அப்பன் பெயரை அதோகதியாக்கி விட்டான்' என்று நாளை ஊர் பேசுமளவுக்குத் தாம் தாழ்ந்துபோய் விடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கையில் தான் சங்கரலிங்கத்தைச் சரிக்கட்டி வைத்திருந்தான் ராஜசேகர்! அவருக்குத் தெரியும்! எந்த அணுவை அசைத்தால் இந்தத் தொழிலில் அலட்சியமாக முன்னேறலாம் என்று. இந்த அளவுக்குத் தன் மூளையைக் கசக்கிக் கொள்ளும் தர்மசங்கடமான நிலைமைக்குத் தள்ளிவிட்ட அப்பாவின் 'ஹார்ட் அட்டாக்'கை நினைத்து ஆவேசப்பட்டான் ராஜசேகர். அடுத்த நிமிடமே, இந்த அவஸ்தைகளை எல்லாம் நாளுக்காக ஏற்றுக் கொள்வதுதான் தன் அந்தஸ்துக்குப் பொருத்தமானது என்று சமாதானப்படுத்திக் கொண்டு நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தான்.



கொஞ்ச நாள்தான். ராஜசேகர் 'குப்'பென்று உயர்ந்து விட்டான். அவன் வாங்கியிருந்த எம். பி. ஏ. பட்டமும் இயல்பிலேயே அவனுக்கிருந்த நிர்வாகத் திறமையும் அவனை 'ஓகோ' என்று சொல்லுமளவுக்கு உயர்த்தி விட்டது. கம்பெனி நல்ல நிலைமையில் ஓடிக்கொண்டிருந்தது. ஏகப்பட்ட லாபம்—டைரக்டர்களுக்கும், பங்குதாரர்களுக்கும் பரம திருப்தி! கொடுக்கப்பட்ட சம்பளமும் போனஸூம் தொழிற்சாலையின் யூனியன்களை ஒட்டும்படி வைத்துக் கொண்டிருந்தன. இப்போதெல்லாம் சங்கரலிங்கத்துக்கே சாமர்த்தியமான உபதேசங்களை அள்ளித் தெளிக்கும் அளவுக்கு உயரத்தில் இருந்தான் ராஜசேகர்.

கம்பெனி விஷயங்களைப் பற்றிப் பேசி முடித்துவிட்டு எழுந்த சங்கரலிங்கத்தை 'ஒன் மினிட்' என்று கொக்கிபோட்டு நிறுத்தினான் ராஜசேகர். தன் தந்தையின் படத்தில் பொருள் பொதிந்த பார்வையைப் படர விட்டபடி சங்கரலிங்கத்தைப் பார்த்தான்.

''வரப்போகிற மே தின விழாவை விமரிசையாகக் கொண்டாட வழக்கமா நாம குடுக்கிற 'சப்ஸிடியை' இந்த வருஷம் ஐம்பது சதம் உயர்த்தி விடுங்க.''

சங்கரலிங்கம் விழிகள் விரிய அவனைப் பார்த்தார்!

''என்ன அப்படிப் பார்க்கறீங்க — நம் லேபர்ஸ் சந்தோஷமா இருந்தாத்தானே நாம் சந்தோஷமா இருக்க முடியும் மிஸ்டர் சங்கரலிங்கம்!''

''ஹி....ஹி.... நீங்க சொல்றது வாஸ்தவம்தான்... உங்கப்பாவை விட நீங்க....''

''யூ கேன் கோ மிஸ்டர் சங்கரலிங்கம்!'' சங்கரலிங்கம் தம் நெற்றிப் பரப்பில் சிதறி இருந்த வியர்வை முத்துக்களை ஒற்றி எடுத்தபடி நகர்ந்தார்.

சங்கரலிங்கத்தின் அந்தப் புன்னகைக்கு என்ன அர்த்தம்? ஒருகால் தந்தையின் செல்வாக்கைத் தான் இன்னும் பெறவில்லையா?

'ப்பூ இவ்வளவுதானா' என்பது போல் பார்த்தாரே சங்கரலிங்கம்! அந்தப் பார்வைக்குப் பின்னால் பதுங்கிக் கிடக்கும் பொருள் என்ன? 'பொறாமை' என்று—கத்தியது ராஜசேகரின் உள்ளம். இப்போதெல்லாம் சங்கரலிங்கத்திடம் தான் ஏதும் யோசனை கேட்பதில்லை என்ற வயிற்றெரிச்சல் அவர் வாயில் புன்னகையாக விரிந்திருக்குமோ! குழப்பத்தால் மனம் குமைந்தான் ராஜசேகர்.

ஒரு காண்ட்ராக்ட் விஷயத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த ராஜசேகர் ஒர்க்கர்ஸ் காலனி விளக்கு வெளிச்சத்தில் குளித்துக் கொண்டிருப்பதைக்

கண்டு வியந்துபோய் மெதுவாக பிரேக்கை அழுத்தினான். இன்றைக்கு என்ன விசேஷம்? ஓ! மேதினமல்லவா? என்ஜினை ஆஃப் செய்து விட்டுக் கார்க் கண்ணாடிவழியாகத் தூரத்தில் இருந்த அலங்கார மேடையை ஒருமுறை ஆணவம் பொங்கப் பார்த்து ஆனந்தப் பட்டான்.

''மேடைக்கு மொதலாளி வர்ராரா மில்லே!'' என்ற குரல் கேட்டுத் திரும்பி வெளியே பார்த்தான் ராஜசேகர். இருட்டில் பாதை ஓரத்தில் ஒதுங்கி நின்றிருந்த இருவர் உரக்கப் பேசிக்கொண்டிருந்தனர். கம்பெனித் தொழிலாளிகள் போலிருக்கிறது! ராஜசேகர் காதுகளைத் தீட்டிக் கொண்டான்.

''மொதலாளியா? எந்த மொதலாளி?''


''அட நம்ம மொதலாளிதாம்பா — சின்னவரு.''

''ம்க்கும்.. சின்னவரா! மொதலாளிங்கிற ஸ்தானத்துக்குப் பெரியவருதான்யா சரி! ஆயிரமாயிரம் அள்ளிக் குடுத்தாலும் பெரியவரு மாதிரி அனுசரணை இவருகிட்டே இல்லே! பெரியவரு சம்பாதிச்ச பெருமையிலே கால் பங்கு கூட இவரால சம்பாதிக்க முடியாது!''

தெய்வம் இல்லாத கோயில்!

விழுப்புரத்தை அடுத்துள்ள முட்டத்தூர் கிராமத்தில் இந்து, கிறிஸ்துவ, முஸ்லீம் ஒற்றுமையைப் பிரதிபலிக்கும் வகையில் இந்தக் கோயில் கட்டப்பட்டுள்ளது. இந்து முறைப்படி, கோபுரத்துடன் கூடிய மண்டபம்; மேலே சிலுவை; நான்கு பக்கங்களிலும் மசூதியில் உள்ளது போலத் தூண்கள்.

இக்கோயிலின் மற்றொரு விசேஷம் இங்கு எந்த விதத் தெய்வமும் இல்லை. எந்த மதத்தினரும் வரலாம். எந்த முறையிலும் கும்பிடலாம். மதப் பூசல்கள் நிறைந்த இக்காலத்தில் முட்டத்தூர் கிராமம் இப்படியொரு கோவிலைக் கட்டியதற்காகப் பெருமைப்பட வேண்டும். —'லக்ஸானி'



''அட ஏன்யா அப்பிடிச் சொல்றே! பெரியவரு செய்யாத சலுகை எல்லாம் சின்னவரு தான்யா செய்து குடுத்திருக்காரு.''

''இதைப் பாருய்யா! நீ ஆயிரம் ஆயிரமா காசை அள்ளிக் குடு. அதைச் செலவு பண்ண கையோட நம்ம ஆளுங்க மறந்துடுவாங்க. நீயே சொல்லு. நம்ம தொழிலாளிங்க வீட்டு விசேஷம் எதுக்காவது சின்னவரு வந்திருக்காரா? அட நல்லதோ கெட்டதோ ஒரு ரெண்டு நிமிஷம் தலையைக் காட்டிட்டுப் போவ முடியாது? இவ்வளவு ஏன்? நாம யாராவது இப்ப சின்னவரைப் பார்த்துப்பேச முடியுதா? அவரு மொதலாளிங்கிற மொதப்புல இத்தாப்பா இருக்காருய்யா! ஆனா பெரியவரு இப்படியா? அடடா! தொழிலாளிங்களோட தொழிலாளியா பழகுவாருய்யா! இதே மே தினத்துக்கு அவர் மேடை ஏறி ஒவ்வொருத்தருக்கும் 'பிரைஸ்' குடுக்கிற அழகிருக்கே! அடடா! இன்னிக்குப் பாரு சின்னவரைக் காணோம்! எந்தப்பார்ட்டியிலே எந்தக் குட்டியோட கிடக்கிறாரோ!''

''நீ என்னதான் சொல்றே?''

''ம்... காசைக் குடுத்து மனசை வாங்க முடியாதுன்னு சொல்றேன். பணத்தை வாங்கும்போதுதான் வாழ்த்துவானுங்க. அப்பால வயத்துப் பசி தீந்து போச்சுன்னு வைவானுங்க! அதனால தொழிலாளிங்களோட பாக்கெட்டை நிரப்பறதோட நிக்காம அவங்க மனசிலேயும் நிறையணும். இதெல்லாம் உனக்குப் புரியாது. — படிச்சவங்களுக்கே புரியறதில்லே.... நட நட.''

ராஜசேகர் ஆணி அறைந்தாற்போல் உட்கார்ந்திருந்தான். அந்த இருட்டு வேளையிலும் கூட இதயத்தில் ஏதோ புழுக்கம் பரவிக் கண்ணெதிரே புகை மூட்டம் போட்டது போலிருந்தது அவனுக்கு! தூரத்தில் புள்ளிகளாகக் கொண்டிருந்த அந்தத் தொழிலாளிகள் இருவரும் இவனுக்காகவே கிளாஸ் நடத்தினார்களோ!

ஊசியில் பட்ட பலூனாக உள்ளத்துக் கர்வமெல்லாம் ஓடிப்போக, பெரிதும் தொய்ந்து போனான் ராஜசேகர்! இப்போது புரிந்து விட்டது. சங்கரலிங்கத்தின் புன்னகைக்குப் பொருள் என்னவென்று!

கரன்சிக் கட்டுக்களால் கொண்டு வர முடியாத கௌரவத்தையும் அந்தஸ்தையும், சில சமயங்களில் கால் காசுகூடப் பெறாத சில யதார்த்தங்கள் எடுத்து நிறுத்துகின்றன. ஆம் — வெறும் பாக்கெட்டை நிரப்புகிறவன் 'முதலாளி' என்பதோடு முற்றுப் பெறுகிறான். அதற்கும் அப்பால் மனத்தைத் தொடுபவன் மட்டுமே 'மனிதனாக' மதிக்கப்படுகிறான்.

ராஜசேகர் நீண்ட பெருமூச்சில் எண்ணங்களை ஊதி உருமாற்றிக் கொண்டு நிதானமாகக் காரைத் திருப்பினான், மே தினவிழா நடக்கும் கோலாகலமான மேடையை நோக்கி.



Main Dealer: M/s CONCORDE AGENCIES, Madras-600 006



“உங்களுக்கு ஒரு சின்ன விஷயத்தைக் கூடக் கோவையாகக் குழப்பாமல் சொல்லத் தெரியாது'' என்று எனக்கு சர்ட்டிபிகேட் கொடுத்தாள் என் அருமை மனைவி கமலா. இதுமாதிரி பல தடவை நற்சாட்சிப் பத்திரம் அளித்திருக்கிறாள். (ஒரு சின்ன சந்தேகம்: நற்சாட்சி என்பதைவிட துர்சாட்சி என்பது தான் சரியாக இருக்குமல்லவா?) ஏன் இப்படிச் சொன்னாள் என்பதற்கு எங்களுக்குள் நடந்த சம்பாஷணையை எடுத்துச் சொன்னால் போதும். உங்களுக்கு விளங்கி விடும்.

• • •

“ஆமாம், மூன்றாம் பிறை போய்ட்டு வந்தீங்களே என்ன கதை, சொல்லுங்கோ?''

''ஸ்ரீதேவிதான் ஹீரோயின்... அவவந்து''

''மூக்கு ஆபரேஷனுக்கு அப்புறம் எடுத்த படமா இது? ஸ்ரீதேவியின் மூக்குலே ஏதாவது வித்தியாசம் தெரியுதா?''

''மூக்கு ஆபரேஷனும் இல்லே நாக்கு ஆபரேஷனும் இல்லேன்னு அறிக்கை கொடுத்திருக்காங்களே.... படிக்கலேயா?''

''ஆமாம். பெரிய அறிக்கை. அஸ்மாவை நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளலேன்னு திலீப்குமார் கூட முதலில் அறிக்கை விட்டாரே, அப்புறம் என்ன ஆச்சு?''

''கரெண்ட்லே போட்டோஸ்டாட் போட்டுட்டான். அது மாதிரி ஸ்ரீதேவி விஷயத்தில் போட்டோ ஸ்டாட் வர்றவரைக்கும் ஆபரேஷன் பண்ணிக்கலேன்றதை ஒத்துக்கணும். சரி சரி... கதையைக் கேளு.... ஸ்ரீதேவிக்கு அம்னீஷியா.''

''உங்க பெரிய மாமாவுக்கு வந்ததே அதுவா?''

''சீ... அவருக்கு அம்னீஷ்யாவும் இல்லே மலேரியாவும் இல்லே... ப்ளட் ப்ரஷர்... உங்க சித்தப்பாவுக்குத்தான் அம்னீஷியா இருந்தது.''

''உளறுநீங்கோ... எங்க சித்தப்பாவுக்கு ஒரு வியாதியும் கிடையாது. எங்காத்து மனுஷாள்னு எதுவேண்டுமானாலும் சொல்றது. கலியாணத்தப்போ உங்கம்மா சொன்னாளே, 'ஏண்டி கமலா உனக்கு ஒரப் பார்வை மாதிரி இருக்குதே'ன்னு....''

''ஒரப் பார்வைன்னு சொல்லியிருக்க மாட்டாள்.... கோரப் பார்வைன்னு சொல்லி இருப்பா...''

''இருக்கும். உங்க மனுஷாளுக்கு வேறு எது இருக்குதோ இல்லையோ நாக்கு நீளமா இருக்கு.''

''நாக்கு நீளமா இருந்தால் தப்பில்லே, கை நீளமாக இருக்காதவரை.''

''தெரியும்.... தொச்சுவை மனசுலே வெச்சுண்டு இடிச்சுக் காட்டறீங்க...''

''விடு கமலா...கதையைக்கேளு. ஸ்ரீப்ரியாவுக்கு அம்னீஷியா....''

''என்னது.... ஸ்ரீதேவின்னு சொன்னீங்க, இப்போ ஸ்ரீப்ரியான்னு சொல்றீங்க... அது என்ன ஸ்ரீப்ரியா பித்தோ....''

''வாய் தவறிச் சொல்லிட்டால் அது ஒரு தப்பா?....''

''தப்புன்னு சொல்லலே. பித்துன்னு சொன்னேன்.''

''எனக்குப் பித்து ஒண்ணும் இல்லே. நான் தனியாகப் போய்ப் பார்த்துட்டு வந்தது உனக்குக் கோபம்... எரிச்சல்.''

''ஆமாம்.... 'ரயில் பயணங்களில்' என்னை அழைச்சுண்டு போனீங்க... 'தூறல் நின்னு போச்சு'க்கு அழைச்சுண்டு போனீங்க... 'கானத்'துக்கு அழைச்சிண்டு போனீங்க. வேளா வேளைக்குப் பொங்கிப் போடறதுக்குத் தான் நான் லாயக்கு... 'மூன்றாம் பிறை' கதையைச் சொல்லுங்கோன்னு ஊர்க் கதை எல்லாம் சொல்றீங்க. ஒரு சின்ன விஷயத்தைக் கூடக் கோவையாக, குழப்பாமல் சொல்லத் தெரியாது என்றாள் கமலா!

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: P.S. Mani Layout Artist: Nambi Editor: K. Rajendran

மின்னலடிக்கும் ஸூப்பர் ரின் வெண்மை...



...இதர, டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.

பார்வைக்கு தப்பவே தப்பாத வெண்மை உங்கள் துணிகளுக்கு—வேளை தவறாத ஸூப்பர் ரின் சலவையின் வெண்மையே தனி.

இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சுவது ஸூப்பர் ரின் வெண்மை.

காரணம், மிகுந்த வெளுக்கும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின்.



நீங்களே கண்டுகொள்வீர்கள்

இதை வெளுத்தது வேறுவித டிட்டர்ஜெண்ட பார்





இதை வெளுத்தது ஸூப்பர் ரின்

<u>அதிக</u>
வெளுப்பூட்டும் சக்தி படைத்தது ஸூப்பர் ரின்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லிண்டாஸ்-RIN.40-2012 TM

REGISTERED No. M. 4302
Registered as a Newspaper in Sri Lanka